
# பூ தொடுக்கும் கைகளுக்கு...

சிறுகதைகள்



## தி. இரா. கோபால்

மணிமேகலைப் பிரசுரம்



# பூ கொடுக்கும் கைகளுக்கு...

(சிறுகதைகள்)

தி. இரா. கோபாலன்

திரு. M. சுப்ரமணியம் J.P.,
தமயந்தி எக்ஸ்போர்ட்ஸ்,
211-A, அல்விஸ் டவுன் வீதி,
வத்தளை, இலங்கை.

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ❀ | பூ தொடுக்கும் கைகளுக்கு... |
| ஆசிரியர் | ❀ | தி. இரா. கோபாலன் |
| மொழி | ❀ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ❀ | 2005 |
| பதிப்பு விவரம் | ❀ | முதல் பதிப்பு |
| உரிமை | ❀ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ❀ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ❀ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ❀ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ❀ | vi + 154 = 160 |
| அட்டைப்பட ஓவியம் | ❀ | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ❀ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 26.<br>✆ 23725639 |
| அச்சிட்டோர் | ❀ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட்<br>சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ❀ | தையல் |

இந்திய விலை : ரூ. 40.00

# உள்ளே...

1. பூ தொடுக்கும் கைகளுக்கு 1
2. நினைவுகள் 9
3. தூது போகும் ராகம் 20
4. கைகாட்டி 33
5. சந்தன வாசம் 54
6. கம்ப்யூட்டர் கனவு 64
7. ஆடாத தொட்டில் 75
8. அந்தரங்கப் பூக்கள் 86
9. அவசர உலகம் 95
10. அந்த நள்ளிரவு நாடகம் 111
11. அடையாளம் 118
12. அந்நிய அழுகை 130

# அணிந்துரை

தமிழ்மணி தி. இரா. கோபாலன் அவர்களின் படைப்புகளில் மூழ்கித் திளைப்பது ஓர் இலக்கிய அனுபவம். நாற்பது வருடங்களுக்கு முன்னதாகவே சிறுகதை இலக்கியத்தில் முத்திரை பதிக்க ஆரம்பித்த இவருடைய சிறுகதைத் தொகுப்பு நூல் இப்போது தான் வெளிவருகிறது.

காலம் கடந்து வரும் இந்தக் கதைகளைப் படிக்கும்போது - குறிப்பாக நினைவுகள், கைகாட்டி, பத்தினியம்மா, என்று எல்லாக் கதைகளிலும் பாத்திரங்களுடன் இலங்கையின் மலைப்பகுதி தோட்டப் பிரதேசங்களும் வாழ்கின்றன.

எல்லாக் கதைகளிலும் உழைக்கும் மக்கள் கூட்டத்தின் உணர்வுகள் பளிச்சிடுகின்றன.

நாவல்கள், இயற்கை மருத்துவம், தத்துவம், வரலாறு என்று பல துறைகளோடு, மொழிபெயர்பபு அம்சங்களையும் மெல்லத் தொடும் மேலான இலக்கியத் தோட்டம் என்று இவரை வழி மொழியலாம்.

இலங்கை மட்டுமல்லாது தமிழகத்திலும் ஏனைய நாடுகளிலும் தி.இரா. கோபாலனின் படைப்புகள் வாசிக்கப்படுகின்றன.

நினைவுகள் என்ற சிறுகதையில் அட்டன் நகர், மாணிக்கவிநாயகர் ஆலயம், அதனைச் சார்ந்த மலைத் தோட்ட மக்கள் என்று ஒரு சிறிய படைப்புக்குள் பெரிய பக்தியை வெளியே கொண்டு வந்து விடுகிறார். மற்றெல்லாக் கதைகளுக்கும் வெளிச்சம் காட்டும் பதமான அவியல்.

தமிழக வாசகர் இலங்கையின் நல்ல இலக்கியப் படைப்புகளை வாசித்து உணர்வதற்கு 'பூ தொடுக்கும் கைகள்' ஒரு இதமான பச்சை விளக்கு கைகாட்டி என்றே கூறுவேன்.

ஆசிரியர் எனது சொந்த பந்தம் என்ற நிலைகடந்து படைப்பிலக்கிய பந்தம் என்ற வானுயர்ந்த வீதிக்கு என்னை அழைத்து வந்துள்ளார்.

கதை இலக்கியத்தின் வெற்றிக்கு இது ஒரு வலுவான சாட்சியாகும்.

**கா. மாரிமுத்து** M.A., B.Ed.,
(தலைமை ஆசிரியர்)
சின்ன கவுண்டம்பட்டி
திருச்சி, தமிழ்நாடு

# முன்னுரை

நன்றாக ஞாபகமிருக்கிறது! நாற்பத்து ஐந்து வருடங்களுக்கு முன் கல்லூரியை விட்டு வெளியே வந்ததும், மேற்படிப்புக்குப் போக முடியாமல் - கையிலிருக்கும் சான்றிதழ்கள் பிரஜாவுரிமை பிரச்சினை என்ற கனமான இரும்புத்திரையினால் செல்லுபடியாகாமற் போன பரிதாபம்!

உனக்குக் குடியுரிமை சான்றிதழ் இல்லை - அதனால் உயர்கல்வி கிடையாது, உத்தியோகம் தர இயலாது, சாதாரண ஒரு கிராமசேவகனின் கடிதம் கூடப் பெற இயலாது என்ற நிலை வந்த பிறகுதான் நான் அப்போதைய சுதந்திரன், கல்கி, கல்கண்டு, ரீடர்ஸ் டைஜஸ்ட் என்ற பத்திரிக்கைகளை இறுகப் பிடித்து வாசிக்கத் தலைப்பட்டேன்.

இத்தனை உரிமைகளும் இல்லை என்று சொன்ன மனித சட்டம், தென்றலைச் சுவாசிக்க முடியாது என்று சொல்ல முடிந்ததா? மனதுக்குள் எழும் கற்பனைகளுக்குத் தடை போட்டதா?

ஆமாம்! இறைவனின் ஏற்பாடுகளுக்குமுன் - மனித சட்டங்கள் எம்மாத்திரம்?

இதனை வலுவாகப் பற்றிக் கொண்டு வாழ்பவனுக்கு எதிர்நீச்சல் என்பது ஒரு சிறிய விளையாட்டு தானே.

ஒரு புழுவாக, பூச்சியாக, ஒரு சின்னப் பறவையாக என்னை நினைத்துக்கொண்டு கதை படைக்கும் எனக்கு வாசிப்புகளே சுகம் தருகின்றன.

மொத்தத்தில் நான் வாசகன் - மொழி கடந்து நடை பயிலும் வாழ்க்கை வாசகன்.

**தி. இரா. கோபாலன்**

1

# பூ தொடுக்கும் கைகளுக்கு...



மலையரசி மாரியம்மன் கோவில்!

இலங்கைப் பாராளுமன்றத்தில் முதல் இந்திய வம்சாவளித் தமிழர் ஸ்ரீ வைத்திலிங்கம் பிள்ளை அவர்கள் கட்டிய அழகான ஆலயம்.

ஏதோ ஒரு பாரம்பர்ய கண்ணாடி மாளிகை மாதிரி.

அந்த பிரும்மாண்டமான மலையரசிக் கோவில் முன்னால் ஒரு வெற்றிலை பாக்குக் கடை!

இந்த நவீன வாழ்க்கை வட்டத்துக்குள்ளிருந்து வந்த நமது நாயகன் வசந்தன் அந்தக் கடையைப் பொறுப்பேற்றதும் சிறிய மாற்றம் செய்தான்.

இத்தனை நாளும் வெற்றிலை, பாக்கு, தேங்காய் என்று கொட்டை போட்ட பெட்டிக்கடையை புத்தகக் கடையாக மாற்றினான்.

விற்பனை பெரிதாக இல்லாவிட்டாலும் வசந்தனின் கற்பனைகளை சுத்தம் செய்ய அந்தச் சூழல் உதவியது. கோவிலும், கடையும் என்று பக்தர்களைப் பேசவைத்த வசந்தனும் கிரிமெட்டிய தோட்ட மக்களிடையே செல்வாக்கு பெறத் தொடங்கினான்.

"ம்...வ்... வாங்க!" என்று தன்னையறியாமல் எழுந்து வணங்கினான் வசந்தன்.

"வ்...ஹ... வணக்கங்க" என்று சற்று சங்கோஜத்துடன் நின்ற அந்தப் புதியவனை பார்த்து நின்றான்.

திடீரென வந்தவனைப் பார்த்ததும் ஒரு தாக்கம். வணங்க வேண்டும் என்று தோன்றியது...

"நீங்க... ம்... யாருன்னு தெரியலியே" என்று இழுத்தான்.

'மாணிக்கம் ஐயா வூட்டுக்கு வந்தேன்' என்று வந்தவன் நினைத்தான். ஆனால் பேசமுடியவில்லை. கைவசம் இருந்த ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தான். கேட்ட கேள்விக்கு இப்படியாக காகிதத்தில் ஒரு பதில்! வியப்பாகவும் இருந்தது.

காகிதத்தை வாங்கி வாசித்தான். அதில் 'என் பெயர் கோகுலகிருஷ்ணன். கோகுல் என்று அழைப்பார்கள் எனக்குப் பேசவராது. பிறவியிலேயே நான் ஒரு முழு நேர வாசகன். இந்த மலைச் சிகரத்தில் ஒரு புத்தகக் கடையா? கேள்விப்பட்டு வந்தேன்! கோகுல்' அந்த சிறிய அறிமுக அட்டையில் ஒரு உணர்ச்சிபூர்வமான விடயம்!

கையைப் பிடித்து உட்கார வைத்தான்.

அந்த இரண்டு இளைஞர்களுக்கிடையே ஒரு மரபு வழி இணைப்பு இழையோடியது.

'கோவிலுக்குப் போய்வாங்க' - என்று ஒரு பிரம்புத் தட்டில் வெற்றிலை, பழம், பாக்கு, தேங்காய் என்று சேர்த்து அந்தப் புதியவனின் கைகளில் வைத்தான் வசந்தன். பதினொரு மணி பூஜைக்கு மணியடித்ததால், வசந்தன் இப்படி நினைத்திருக்க வேண்டும்.

கட்டளையை மீற முடியாத வேலையாளைப் போல தட்டை வாங்கிக் கொண்டு பத்து ரூபாவை நீட்டினான்.

“பரவாயில்லை” - வசந்தன் மறுத்தான்.

“ம்... வாங்கிக்கோங்க... இது யாபாரம்...” என்று காகிதத்தில் எழுதிக்காட்டி அந்த சிறிய பச்சை நோட்டைத் திணித்துவிட்டுக் கோவிலை நோக்கி நடையைக் கட்டினான். அந்த நடையில் இழையோடிய நேர்மையையும், நளினத்தையும் ரசித்தான் கடைக்கார இளைஞன். இத்தனை வேகமுடன் கோகுலகிருஷ்ணன் எழுதிக் கொடுத்த இரு கடதாசிகளையும் மீண்டும் பார்த்தான். குண்டு குண்டான அழகிய எழுதுக்கள். அந்தத் தாள்களை தனது டயரியில் வைத்துக் கொண்டு கடை வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினான்.

★ ★ ★

கோவில் முகப்பின் தெற்கு மூலையில் சிறிய மேசைமுன் அமர்ந்திருந்த அந்த 'சிலை'யைப் பார்த்தான் கோகுல். யந்திரகதியில் அந்தக் கரங்கள் மாலைகட்டும் கடமையில் மூழ்கியிருந்தன.

மலையரசியைப் பார்த்து வணங்கி அருள் பெற வந்த கோகுலின் கண்களுக்கு - ஒரு கலையரசி இயங்கிக் கொண்டிருப்பது - பக்தியான தாக்கத்தை ஏற்படுத்தியது.

உள்ளே நுழைந்த கோகுலுக்கு மலையரசி ஆலயப் பிராகார சித்திரங்கள் மேலும் உற்சாகம் தந்தன. சுற்றி வர சுவர்களில் கண்ணாடிகள். உள்ளே வெளிச்சமாக இருந்தது. சூரிய ஒளியின் பிரகாசம் கண்ணாடியால் கவரப்பட்டு உட்சென்று வியாபித்திருந்தது.

"வாங்கோ" என்றார் அந்த எளிய பிராமண ஐயர்.

"....." - வணங்கினான்.

தட்டு கைமாறியது. தட்டில் பெயரை எழுதியிருந்தான்.

"நட்சத்திரம் - சொல்லுங்கோ" என்றார் ஐயர்.

அப்பவும் மௌனம். சைகையால் காண்பித்தான்.

"ஆஹா, இத்தனை... ம் எல்லாம் பகவான் செயல். தாயி உங்களுக்கு பேசற சக்தியக் குடுப்பாங்க" என்று பூசை செய்யத் தொடங்கினார்.

மனம் இதமாக இருந்தது.

வாழ்வில் எல்லாருக்கும் நேர்முறையான திருப்புமுனைகள் உண்டுதான். கோவில் பிரகாரத்திலும் இது நிகழ்ந்தது.

"தம்பி! நல்லா வேண்டிக்கோங்கோ. என்னைக்காவது பகவான் நம்ம பிரச்சினையைத் தீப்பாரு. முன்னால ஒக்காந்து மால கட்டுற எம் பொண்ணு சக்கர நாக்காலிலதான் ஒக்காந்திருக்கு. என்னைக்காவது

பகவான் காலக்குடுப்பாருன்னு நம்பிக்கையோட வேண்டிக்கிட்டிருக்கேன். அதுதான நமக்கு முடிஞ்சது. நமக்கு முடியாதது வேற. முடிஞ்சத செய்யிணும்'' இப்படி ஐயர் பேசியது பகவானே நேரில் வந்து சொல்வது போல இருந்தது. 'ஆமா! முடிஞ்ச கடமைய செய்யிணும்'- அவர் சொன்ன வார்த்தைகளைத் தனக்குள்ளே சொல்லிப் பார்த்தான். அப்புறம் அவனது மனம் திரும்பியது. தென்முனைக் கோடி கலையரசி! கால் முடியாத கலைப்பூங்கா! இப்படி நினைத்து வேதனைப்பட்டான்.

பூசை முடிந்து கோவிலைச் சுற்றி வலம் வந்த கவிஞனின் கண்களில் பூத்தொடுக்கும் கரங்கள் திரையாக விழுந்தன. மல்லிகைப் பூக்களின் மணம் கோவில் சூழலில் குளு, குளுவென வீசியதை உணர்ந்தான் கோகுல்.

நிமிர்ந்து பார்க்காத அந்த ஐயர் பெண்ணின் முக மலர் பூவோடு இணைந்திருந்தது.

மெதுவாகக் கோவில் சூழலிலிருந்து விடுபட்டு கடைக்குப் போய் தன் கடதாசிப் பையை எடுத்த போது கால் முடியாத பெண் அவனது சிந்தனைகளில் முகாமிட்டிருந்தாள்.

அந்த நீலநிற கடதாசியில் வேகமாக நான்கு வரிகள்.

“மலையமர்ந்து மாதவம் புரியும் மலையரசித் தாயே! சிலையாகி பூத்தொடுக்கும் கரங்களுக்கு நல்லவற்றை அருள்வாய் நீ! காலிழந்த பெண்மணியும் நடைபயிலக் காண நாளை வந்து சரணடைவேன் உன் பாதங்களில்! இந்த நான்கு வரிக்கவிதையினைச் சுமந்து மீண்டும் கோவிலுக்குள் நுழைந்தான் கோகுல் நம்பிக்கையுடன்.

❀ ❀ ❀

மாலை ஏழு மணியளவில் அம்மன் முன்னிலையில் - தவழ்ந்து சென்று அமர்ந்த வாச மஞ்சரியின் மடியருகே காற்றில் மிதந்து வந்தது அந்த நீலநிறத்தாள்.

ஒரு முறை யோசித்தாள். இரண்டு முறை மூன்று முறை. அந்தத் தாளினை எடுப்பதற்கு மனம் தூண்டியது. நினைப்புதானே செயல் எடுத்து விரித்தாள்.

மாதவம் புரியும் மலையரசித்தாயிடம், பூ தொடுக்கும் கைகளுக்காக வேண்டுதல் செய்து சமர்ப்பித்திருந்த வரிகளைப் பார்த்து வியந்து கண்களை மூடினாள் வாசமஞ்சரி. அவளை அழைத்துக் கொண்டு போக ஐயர் வந்திருந்தார். அவள் கையில் இருந்த தாளின் வரிகள் அவருடைய கண்களிலும் பட்டன.

"பகவானே!" என்று அவரையறியாமல் வாய் முணுமுணுத்தது.

வகை வகையாக மாலை கட்டி கடவுளுக்கு சாத்த வேண்டும் என்று அவளுக்குப் பட்டது. "வாம்மா வூட்டுக்கு" என்று அவளைத் தூக்கிக் கொண்டு போனார்.

'விடுங்கப்பா... நான் நடப்பேன். நடக்குணும். நடக்குணும்' என்று உற்சாகமாகக் கூறினாள்.

"நான்கு வரிகள் வாசித்ததில் இத்தனை உற்சாகமா?" ஐயர் மனம் மகிழ்ந்தது.

"நடக்கலாம் வாம்மா. நீ நடப்ப. நடந்து நல்லா வாழணும்"

"ஆமாப்பா! நெறய்ய வாசிக்குணும்"

யாருக்காகவோ வாழ வேண்டும் என்ற அழகியல் சேர்ந்த நம்பிக்கை அவளுக்குள் வேரூன்றியது. தனக்காக

பிரார்த்திக்க எங்கேயோ ஒரு அந்நிய மனம் இருக்கிறது என்கிற நம்பிக்கை.

* * *

"என்னப்பா! கோவிலுக்குப் போனியா?" மாமா கேட்டார்.

"ஆமா மாமா. போனேன்" என்கிற மாதிரி உற்சாகமாகப் பார்த்தான் கோகுல கிருஷ்ணன்.

"பாத்தியா சாமிக்கிட்ட போனதும் ஒரு உற்சாகம்!" அவனுக்குள் ஏற்பட்டிருந்த மனமாற்றத்தைக் கண்டுகொண்டார்!

யாருக்காகவோ வாழவேண்டும் என்ற ஒரு திடீர் உணர்வு அவனுக்குள் இழையோடத் தொடங்கி இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது.

புதிய, புதிய கருத்துக்களைத் தாங்கிய பயனுள்ள கவிதைகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதவேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. 'மாக்வெல் மால்ட்ஸ்' அவர்களின் நூல் ஒன்றினைத் தீவிரமாக வாசிக்கத் தொடங்கினான்.

* * *

இரண்டு உள்ளங்களுக்குள் தனித்தனியாக உயிர்பெற்றிருந்த நம்பிக்கை நமது கடைக்கார இளைஞனுக்குத் தெரிய வந்தது.

"மலைத்தாயே! யார் யாரையெல்லாம் எப்படி வாழ வைப்பது என்பது உனக்குத்தானே தெரியும்! உன் வாசலில்


காத்திருப்பவளையும், வாசலுக்கு வந்தவரையும் உன் பார்வையில் பராமரிப்பாயாக!''

இரண்டு உள்ளங்களுக்காக வேண்டுதல் நடத்தும் மூன்றாவது உள்ளம்!

அந்த கிரிமெட்டிய தோட்ட கோவில் முற்றத்தில் இப்படியான மூன்று பக்தர்கள்! மூன்று மனங்களில் வெள்ளைப் புள்ளிகள். அந்த வாழ்வுப் பின்னல் வேலையினை அம்பாள் அழகாகச் செய்வாள்.

அவர்களுக்கு வழிவிட்டு நம்பிக்கையுடன் நாம் விடைபெறுவோம்.

★



# நிறைபகள்

"என்னா தாத்தா... பொயிருனும்னு ஆசயா?" என்ற பொருள்பட இன்னும் சற்று இளக்காரமான வசனத்தில் சொல்லிக் கொண்டே அந்த மோட்டார் சைக்கிள்காரன் வேகமாக கைவிசையைத் திருகினான். சைக்கிள் அழகு காட்டிப் பறக்க ஆரம்பித்தது.

அந்தக் கிழவனாருக்கு அந்த வசனம் காதில் விழவில்லை. எப்படியோ ஒருவாறாக இந்தப்பக்கம் இருந்து அந்தக் கரைக்கு நகர்ந்து ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய அடிவாரத்தை அடைந்து விட்டார். கோயிலடிச்சாலை வளைவில் குறுக்கே நகர்வது ஒரு பெரிய காரியம்தான்.

மூஸ், மூஸ் எனும் ஓடும் வாகனங்களின் ஒலிச் சேர்க்கை 'மூக்கையா' கிழவர் செவிகளில் கேட்கத்தான் செய்தது.

"சாமி... புள்ளயாரே... புள்ளயாரு நா நெனச்சது நடத்திக்குடு ஐயா... சாமி!...சாமி!! சாமி!!!" என்று கரங்களை உயர்த்திக் கும்பிட்டார். முதுமையின் ஏலாமை, கரங்கள் உயர முடியவில்லை.

மெதுவாக - மிக மெதுவாக கொத்தில் கிடக்கும் சில்லறைக் காசில் ஐம்பது சதத்தை எடுத்து உண்டியலில் போட்டு விட்டு பிள்ளையார் கோயில் படிக்கட்டுக் கோர்வையை ஆதங்கத்துடனும், பக்தியுடனும் பார்த்தார். மேலும் அவருடைய பார்வை அடக்கத்துடன் உயர்ந்தது. கோபுரத்தை விழிகளாலேயே வணங்கிவிட்டு ஆசுவாசமாக உட்கார்ந்தார் மூக்கையா.

'டங்' என்று இரண்டு ரூபாய் சில்லறைக்காசு ஒன்றைப் போட்டு விட்டு நகர்ந்தார் அந்தக் கம்பீரம் மிகுந்த முதலாளி.

மூக்கையா ஒரு முழுமையான பிச்சைக்காரரும் இல்லை. வேலை செய்து கூலி வாங்குபவரும் இல்லை. யாராவது பிச்சைக்காரன் என்று நினைத்து ஏதும் கொடுத்தால் வாங்கிக் கொள்வார். மாமூலான கைநீட்டல் என்பது அவரிடம் கிடையாது.

தனிக்கட்டையாகி இருபது வருடங்களாகி விட்டன. விறகு வெட்டிப் பணம் சேர்த்த அந்தக் காலத்தை நினைத்துப் பார்க்க கோயிலடிப் படிக்கட்டு வளவு அவருக்கு மேடையேற்படுத்திக் கொடுத்தது.

மூக்கையா கிழவனாருக்குக் கடந்த கால வாழ்க்கையை நினைத்துப் பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விடுவதென்பது அவருடைய தினசரி வாழ்வின் மிகவும் தேவையானதொரு அங்கமாகி விட்டது.

அந்த நாட்கள்,

வள்ளியை மணம்புரிந்த முருகனைப் போன்ற உடம்பு என்ற நினைப்பு. அந்த நினைவுகளைத் தொட்டுக் கொள்வதற்கு முன் எழுந்தார்.

“அப்பாசாமி நாஞ் செத்துட்டா நாயிருக்கிற வூட்டிலேயே பொதச்சிருங்க... சாமி... எவ்வூட்டுலய பொதச்சிருங்க” மெதுவாகச் சொல்லி விட்டு உட்கார்ந்தார்.

* * *

“ஏ மூக்கையா இன்னிக்கு அந்திக்குள்ள வெறகெல்லாம் வெட்டிருப்பா. இந்தா... பொளந்து ஒழுங்கா அடுக்கிரு. நாளைக்கி எங்களுக்கு வேலை இருக்கு” என்று மலை போல் குவிந்து கிடந்த கரவனல்ல ரப்பர் விறகைக் காண்பித்தார்.

மூக்கையா தன் தலைத்துண்டை சரிசெய்து கொண்டு கோடரியை லாவகமாகத் தூக்கி விளாசத் தொடங்கினான். அவ்வளவு விறகையும் பிளந்து முடித்துவிட்டு மூச்சு விடுவதற்கு மூக்கையாவினால் மட்டும் தான் முடியும்,

எல்லாவற்றையும் முடித்துவிட்டு கடைசியாக எஞ்சியிருந்த ஒரு ‘மொக்கு’ கட்டையைப் பிளக்கும் போது ‘அம்மா!’ என்று தரையில் உட்கார்ந்து முழங்காலைப் பிடித்தான்.

வலதுகாற் பெருவிரல் பக்கவாட்டிலிருந்து ரத்தம் சின்னதாக ஒரு சிவப்பு வெள்ளம் போலப் பீறிட்டுக் கொண்டிருந்தது.

"ஏய் மூக்கையா என்ன?" என்று கடை கணக்குப்பிள்ளை ஓடி வந்தார். வலது காலைப் பிடித்துக் கொண்டு பல்லைக்கடித்து முனகிக் கொண்டிருந்த அந்த அன்றாடங்காச்சியைப் பார்க்க ஒரு குறுங்கூட்டம் கூடிவிட்டது.

"யப்பா நல்லதாப் போச்சி. எல்லா ஓடச்சி முடிச்சி பெறகுதான்! இல்லாட்டி இன்னொரு மூக்கையாவை எங்க போயி தேடறது. சம்பள நாளு வேற" என்று தனக்குள் கூறிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தார் கடை முதலாளி. நல்ல வேளையாக இந்த வார்த்தையை யாரும் கேட்கவில்லை.

"சரி, சரி கணக்கு... இந்தாய்யா... அவன் கூலியப் பாத்துக்குடுத்துருங்க. பாவம் நல்ல வேலைக்காரன்" என்று சொல்லிய நிலையில் தன் பணத்தை எண்ணத் தொடங்கி விட்டார்.

எப்படியோ யாரோ அவனை அழைத்துக் கொண்டு போய் மருந்து கட்டினார்கள். விறகுக் கட்டைகள், கூலிப்பணம் தனக்குப் பிடித்தமான அந்த 'லெச்சுமி' எல்லாவற்றையும் மறந்து விட்டு மாணிக்கப் பிள்ளையார் கோயிலை நினைத்தவாறு சிங்கமலை சுரங்கப் பாதையில் நொண்டி நொண்டி நடக்கலானான்.

"என்னாது?" என்ற கேள்விக் குறியோடு ஓடி வந்து தன் கால்களைப் பார்த்து உட்கார்ந்த லெச்சுமியை

அப்போது தான் நினைக்கத் தோன்றியது அவனுக்கு. ஒன்றுமே பேசாது நின்ற மூக்கையாவை லெச்சுமி உலுக்கினாள்.

"எந்தம்பி ஓடியாந்து சொன்னான். பயந்தே போயிட்டேன்."

"ஒன்னுமில்ல லெச்சுமி கோடாலி பட்டிறிச்சி"

"கோடாலி பட்டுட்டா இம்புட்டு காயம் வந்துருமா?"

"அதல்லா இப்ப எனக்கு வலிக்கில ஆனா... ஆனா... எனக்கு இன்னொரு வலி"

"என்னா சொல்ற மாமா" லெச்சுமி விழித்தாள்.

"அது.... அது... அதான்... நம்ப சாமி... அட்டன் புள்ளயாரு..."

"ஆமா! அ...அ ஆமா... படிக்கட்டுக்கு கல்லுதூக்கி போடுனும்னு நேந்துக்கிட்டியே."

"ம்..." என்று சொல்லிக் கொண்டே சிங்க மலையைப் பார்த்தான் மூக்கையா...

மௌனம் இருவரிடமும் சில விநாடிகள் கவ்விக் கொண்டது.

"நாளக்கித்தான் கோயில்ல கல்லு தூக்கணும்"

"ம்" தலையசைத்தான்.

"நாம் போயி தூக்குறேன்" என்று லெச்சுமி சொன்னதும்,

"அதெப்புடி?" என்று அதட்டினான்.

"சரி... வூட்டுக்கு வாங்க" என்று சொன்னதும் தான் அவனுக்குப் பசிக்க ஆரம்பித்தது.

முதலாளி கொடுத்த பணத்தை லெச்சுமி கையில் திணித்துக் கொண்டே மெதுவாக நடந்தான்.

மழை இருட்டிக் கொண்டு வந்தது.

எப்படியோ கடந்து விட்ட அந்தக் கடுமையான தினம்!

விடிந்ததும் விடியாததுமாக லெச்சுமி எழுந்து சுறுசுறுப்படைந்தாள்.

"என்னா புள்ள" என்று மூக்கையா கேட்டுக் கொண்டிருக்கும் போதே லெச்சுமி அட்டனை நோக்கிப் பறந்தாள். முழங்காலுக்குச் சற்றுக் கீழே நூல் சேலை படபடக்க ஓடும் தன்னவளின் அழகை ரசித்துக் கொண்டே திரும்பினான். காலில் ஒரு உணர்வு ஜிவ்வென்று வலித்தது. பக்கத்தில் ஒற்றையடிப் பாதையை மறைத்து வளர்ந்திருந்த அந்த சைனா தேயிலையின் முற்றிய கிளையைப் பற்றியபடி உட்கார்ந்தான். தெரிந்தோ தெரியாமலோ நமக்கு ஊன்று கோல் என்று உணரும் முறையில் முற்றிய இளம் இலைகளைத் தடவினான். தனது தாயின் தலைமுடியைத் தடவிக் கொடுப்பது போல இருந்தது.

மெல்ல எழுந்து வசதியாகக் கல்லின் மேல் இருந்து கொண்டு உலகத்தை அமைதியான முறையில் பார்க்கத் தொடங்கினான். ஒன்னாம் நம்பர் மலையில் கவாத்து வெட்டும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சட, சட வென்ற சத்தமும், சல, சலவென்ற சத்தமும் சேர்ந்து

கவ்வாத்து வேலையைச் செய்பவர்களுக்கும், விறகு பொறுக்க வந்து இயந்திரங்களாக இயங்கும் சிறுமிகளுக்கும் பின்னணி இசையைத் தொகுத்துக் கொண்டிருந்தது எனக் கூறலாம்.

“ஏன்ய்ய இப்புடி ஒக்காந்திருக்க” என்று முனியம்மாக் கிழவி கேட்டதும் சுய நினைவுக்கு வந்தான்.

“ஒன்னுமில்ல ஆயா... லெச்சுமி கோயிலுக்கு போயிருக்கு”

“காலு எப்படி?”

“வலி நின்றிச்சு!”

“ஏம்பா பேசாம தொர காலப் புடிச்சாவுது தோட்டத்துல வேல செய்யு”

“ஆமா அந்த தொரக்கிட்ட தலகுனிஞ்சு” என்று இழுத்தான். ம்... ருசி கண்ட பூன கடக்காட்டுக்குப் போனவுங்க தோட்டத்துப் பக்கம் வந்து வேல செய்யுவாங்களா.”

* * *

“ஆ... இந்தா பெரியவர!” என்று அந்தக் கிழவரின் கையில் திணித்துவிட்டு நகர்ந்த போது தனது கடந்த கால நினைவுகள் அறுபட்டது.

எத்தனையோ வருடங்களுக்கு முன் மீனாட்சி ஆயா சொன்னது மூக்கையாவின் மனதில் இனங்காட்டியது.

“லெச்சுமி!” மூக்கையாவுக்குத் தன் மனைவியை நினைக்கும் போதே மேனி நடுங்குகிறது. ஐந்து

குழந்தைகளுக்குத் தாயாகிய பின் தன்னை அநாதரவாக விட்டுக் கண்ணை மூடி விட்டாள் என்று அடிக்கடி நினைப்பவர். பிள்ளைக்கு திருமணம், பேரப்பிள்ளைகள் என்று எத்தனையோ வருடங்கள் இடைக்கால வாழ்வை முயன்று மறந்தவர். தனது இளமைக் காலத்து லெச்சுமியை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மாறுபட்ட கிழவர்.

லெச்சுமி பாம்பு கடித்து மரணமடைந்த அதே இடத்தில் குடிசை கட்டி வாழும் பாமரஞானி.

லெச்சுமியின் ஞாபகமே தன் குடிசையாக, ஆலயமாக வாழ்க்கைத் துணை நலமாக அமைந்து விட்ட பின் அவருக்கு வேறு ஆசாபாசம் எல்லாமே அதற்குள்! அதனால்தான் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரிடம் அநுதினமும் மன்றாடி ஆறுதலடைகிறார்.

“நாஞ் செத்தா அந்தக் குடிசையிலேயே அடக்கம் பண்ணு சாமி!”

அந்த ஏழை மனசுக்குப் பூரண சரணாலயம் பிள்ளையார் கோயிலடிதான்.

இள வயது நினைவுகள் அந்தச் சந்நிதியடியில் இன்றா நேற்றா.

“இந்தா பெரியவரே! மழ வர்ரது தெரியுல. போங்க வூட்டுக்கு” - யாரோ ஒரு தோட்டத்து நடுத்தர மனிதர் சொல்லி விட்டுப் போனது இவர் காதில் விழுந்தது.

அண்ணாந்து பார்த்தார். வானம் கறுத்துக் கொண்டே வருவது தெரிந்தது. கையில் சரணடைந்திருந்த

அந்த சாப்பிங் பையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு திரும்பி நடந்தார். நகரத்தின் மத்திய பகுதியை அடைந்து கிழக்குத் திசையில் மேல் நோக்கிப் போய் ரயில் பாதையில் இறங்கி நேராகப் போனால் சிங்க மலையடிவாரத்தை அடைந்து விடலாம். ஆனால் இந்தக் கிழவர் போய் ரயில் தண்டவாளப் பாதையை அடைவதற்குமுன் மழை பிடித்துக் கொண்டது.

திகைத்து நின்றார்.

"தாத்தா சொரங்கத்துப் பக்கம் தான போறீங்க... வாங்க கொடையில" ஒரு பழைய குடையுடன் வந்த அந்த இளம் பெண்ணின் குரல் எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது.

பெரியவருக்கு உடம்பு வலிக்கிற மாதிரி இருந்தது.

"ம்...மொள், மொள்ள" யாரோ ஒரு தோட்டத்துப் பெண்ணாக இருக்கலாம்.

"ஆண்டவா" என்று நினைத்தவுடன் இந்தப் பெண் வலிய வந்து அழைத்துப் போவது பெரியவருக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

மழை நன்றாக பிடித்துக் கொண்டு வந்தது. சுரங்கத்துக்கு மிக அருகே வந்ததும், பெரியவர் நின்றார். அந்தப் பெண்ணும் நின்றாள்.

லட்சியம் செய்யாது தண்டவாள இரும்புப் பாதையில் அங்குமிங்குமாகப் போய்க் கொண்டிருக்கும் மனித சமூகத்தில் ஒரு அநாதைக் கிழவரும் ஆதரவுதரும் மனமும் அந்த மலையடிவாரப் படிக்கட்டில் கால்களை ஊன்றின.

"தாத்தா ஒங்க வூட்டக் காமிங்க. அங்கேயே கொண்டுவந்து வுட்டுட்டு வந்துர்றேன்." சுழன்று வீசும் காற்றுடன் கூடிய மழை பெரியவருக்கு ஒன்றுமே புரியவில்லை. படிக்கட்டும் ஒற்றையடிப் பாதையுமாக மலையேற்றம், யாரோ அழைத்துக் கொண்டு போகும் ஏகாந்தப் பயணமாகத் தெரிந்தது.

தன் குடிசைக் கதவு திறந்தே கிடந்தது.

"இதாவூடு போயி நிம்மதியாப் படுங்க. நா வர்றேன் நேரமாச்சு" - இப்படிச் சொல்லிக் கொண்டே குதித்து ஓடினாள் அந்தப் பெண்.

கிழவனாரின் நெஞ்சு படபடத்தது. தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். மெல்லமாக எழுந்து கதவைச் சாத்திவிட்டு சாக்கை விரித்துப் போட்டு சாய்ந்தார். விரித்துப் போடவும். போர்த்திக் கொள்ளவும், தலையணைக்கும் எல்லாமே அங்கு சாக்குதான்.

ஒரு பாமர ஞானியின் ஏகாந்த வாழ்வு.

"ம்... என்னக் கூட்டிக்கிட்டு வந்தது யாரு...!'

"ங்ஙம்... யாரு அது?" படுத்துக் கொண்டே சிந்தித்தார்.

"ஹம்...அது...அது என் லெச்சிமி தேன்... லெச்சுமிதான்" ஆவேசத்தில் எழுந்தார்.

"ஆயி... நீ தான என்னக் கூட்டிக்கிட்டு வந்த?"

"ம்க்கும்...ம்க்கும்" என்று மறுபடியும் அவருடைய படுக்கையில் சாய்ந்து கொண்டே விம்மினார்.

விம்மல், சிந்தனை, ஏக்கம், ஏலாமை எல்லாம் அவருடைய மனதுக்குள் புகுந்து பின்னல் வேலை செய்து கொண்டிருந்தன.

வயிறு பசிக்கவில்லை. ஆனால் மனசில் இனந்தெரியாத பசி, ஆமாம் அடங்காத மனப்பசி.

என் வூட்டுக் கூட்டிக்கிட்டு வந்து படுக்கையில் போட்டு வுட்டுப் போன அந்த சின்னப் பொன்னு ஆரு!"

'ய்யாங் அது... அது... என் லெச்சுமித்தேன்..."

"இப்ப இந்த வூட்டுக்கு வந்தது லெச்சுமித்..."


அதற்கு மேல் அவரால் சிந்திக்க முடியவில்லை.

வெளியே காற்று பலமாக வீசியது சில்லிட்டுப் போன மண்தரையில் தண்ணீர் படர்ந்தது. 'சோ'வென்ற மழைச்சத்தம்.

மூக்கையா கிழவனாரின் காதுக்கு எதுவுமே கேட்கவில்லை. காற்று, மழை, அந்தப் பிரதேசத்தின் அப்போதைய ஆக்கிரமிப்பாளர்கள். அட்டன் நகரம் முழுமையாக கருமேகத்துடன் கலந்து சாம்பல் போர்வையாக மூடிக் கொண்டது. என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை.

காற்றுமழை கொப்பளிப்பின் உச்ச கட்டத்தில் அது நிகழ்ந்தது. சிங்கமலை மேற்குப் புறப் பகுதியின் பாறைகள் பெரும் ஒலியுடன் கீழிறங்கி நகர்ந்து, தண்ணீர், மண், பாறை மூன்றும் சேர்ந்த திட்டமிட்ட நிலையில் ஏற்பட்ட அகோரமான மண்சரிவு.

மூக்கையா கிழவனாரின் குடிசை சுமார் ஐம்பது அடி உயரத்துக்கு மண்ணால் மூடப் பட்டுக் கிடந்தது.




"கோப்பி மல குயினா மல போயி
கொண்டு வந்தோங் கொழுந்துபல தாயி
தேரியிலே குடியிருக்கிற மாரி - நீ
தேரினிலே வருவதெப்போ தாயி
ஆறினிலே குதிச்சி வந்த ஒடம்பு - இப்போ
அறுபதிலே ஏறிப்போற மனசு..."

ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் சின்ன உதடுகளிலிருந்து பிரிந்து வரும் குழுப்பாடல் அந்தத் தொங்க வீட்டு காமாட்சியின் வயோதிபக் காதுகளில்

விழுந்தது. எழுந்து உட்கார முயன்றாள். முடியவில்லை. பாடல் அவள் இதயத்தில் விழுந்து தெறித்து சுகம் தந்தது. எழுந்து போய், அந்தச் சின்னஞ்சிறுசுகளை அள்ளி அணைக்க வேண்டும் போல இருந்தது. முடிகிற காரியமாகத் தெரியவில்லை.

"இந்தா, ஒன்னைத்தான் 'மனோ' இங்க பாரு. ஓங்கொரல கொறச்சு மெதுவா..." என்று அந்தப் பாடலைப் பயிற்சியளிக்கும் ஆசிரியர் தொனி சற்று உச்ச நிலையில் வந்தது. அவருடைய தடித்த குரல், மாணவர்களை அதட்டி இசை நுணுக்கத்துக்கு வழிகாட்டியது.

இடையிடையே "லொள், லொள்" என்று அடுத்த வீட்டு நாய் குரைக்கும் சத்தம் "ம்மா" முன்வீட்டின் மாட்டுப்பட்டியிலிருந்து அவசர அழைப்பு.

மேட்டுலயத்துக் கோடியில் அந்த ஆறுபேர் கிரிக்கட் அணியின் அகோர சத்தம்.

"டேய், அந்த கிரிக்கட் வெளயாடுற கொரங்குகள அந்தப் பக்கம் போயி வெளயாடச் சொல்லு. இங்கு என்னா நடக்குதுன்னு கொஞ்சமாவது நெனைவு இருக்குதா? கருமம், கருமம் இவுங்கள திருத்தவே முடியாது" என்கிறது பாடற்பயிற்சி ஆசிரியரின் கூக்குரல்.

இந்தக் கிழவியின் காதுகளில் எல்லாம் விழுந்தன. ஏதோ கேள்விச் செல்வம் காமாட்சியின் வயோதிபத்தால் காயப்படுத்தப் படவில்லை.

அந்த லயத்துக்கும், அல்லித் தோட்டப் பழம்பாடசாலைக் கட்டிடத்துக்கும் இடைத்தூரம் ஐம்பது அடிதான். பாடசாலைக் குழந்தைகளின் வழமையான

ஓசைகளை கடந்த முப்பது வருடங்களாகக் கேட்டு அலுத்துப் போன காமாட்சியின் காதுகளில் எதிர்பாராத விதமாக இந்தப் பாடல் விழுந்தது. ஒரு அதிர்ச்சி வைத்தியம்.

"அம்மாயீ..." என்று 'யீ'யை அழுத்தி உச்சரித்த நிலையில் சாயத் தண்ணீருடன் ஓடிவந்த அஞ்சலையை ஏறிட்டுப் பார்க்க தனது கரங்களை உயர்த்தி எழுந்திருக்க முயன்றாள்.

அஞ்சலை காலையில் கொண்டு வந்து கொடுத்த ரொட்டி காய்ந்து கிடந்தது.

"ஏம்மாயீ... ரொட்டி சாப்புடல?" என்று கேட்டுக் கொண்டே பால் சேர்க்காத தேனீர் டம்ளரை நீட்டினாள்.

"எனக்குப் பசிக்கில ஆயி" என்று மெதுவாக ஆதரவுடன் சொன்னாள்.

"இந்தாங்க ரொட்டி" ஒரு துண்டை எடுத்து நீட்டிய அஞ்சலையின் தலையை வருடினாள்.

"ஒங்களுக்கெல்லாங் கஸ்டங் குடுக்குறேங் கண்ணு, சாவு வர மாட்டேங்குது தாயி."

அந்தச் சிறுமிக்கு இந்த வார்த்தையெல்லாம் புரியவில்லை. மறுபடியும் சாயத் தண்ணீரை காமாட்சியின் வாயருகே கொண்டு போனாள். மெதுவாக சிறுமியின் தலைமயிரை வருடிவிட்ட காமாட்சிக்கு இந்த புதிய தலைமுறையின் நம்பிக்கையான புன்சிரிப்பு நல்ல பதிலாகக் கிடைத்தது.

அந்த பத்து வயதுச் சிறுமி ஓடிவிட்டாள். அவளைப் பொறுத்தவரை படிப்பு கொஞ்சம், விளையாட்டு கொஞ்சம், வீட்டுவேலை கொஞ்சம், மூன்றாம் வீட்டுக் கிழவியாகிய

காமாட்சியைப் பார்த்துக் கொள்வது கொஞ்சம்! இத்தனை கடமைகளையும் கச்சிதமாகச் செய்து கொண்டிருந்த அஞ்சலைக்கு நாளை நடக்கப் போகும் கலைவிழா உற்சாகம் கொடுக்கத் துவங்கி விட்டது.

தனிமையில் முடங்கிவிட்ட காமாட்சியின் மங்கலான பார்வையில் ஜன்னல் கம்பிகள் பட்டன. அந்த ஜன்னல் அருகே தன் கணவன் வீராசாமி ஒரு காலத்தில் உட்கார்ந்து எழுதும் பாடல்கள் மனைவியாகிய தன்னிடம் பாடிக் காண்பிக்கிற அழகும்... நினைக்க நினைக்க மனம் பாரமாக இருந்தது. ஆனால் இரண்டு மூன்று நாட்களாக இந்தப் பள்ளிக்கூடத்தில் நடக்கிற காரியங்கள், அந்த மனச்சுமைகளை இறக்கிவிட்டு வானத்தில் பறக்கிற மாதிரி ஒரு உணர்வைத் தருகிறது.

அந்தப் பாட்டு வீராசாமி கவிஞன் எப்போதோ பாடியது. கவிஞன் இறந்து இருபது வருடங்களுக்குப் பிறகு இந்தப் பாடசாலைப் பிஞ்சுகளால் அது பின்னணி இசையுடன் பாடப்படுகிறது.

அந்தச் சுகத்துக்கெல்லாம் எத்தனை வயது?

“கோப்பிமல குயினா மல போயி” - பாட்டு நன்றாக ஞாபகமிருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு முற்பட்டக் காலத்துக்கு மனம் துள்ளிக் கொண்டு ஓடியது. அது ஏழாம் நம்பர் கொழுந்துமலை.

‘அதென்னாக்கா பாட்டு கொழுந்து மல பாட்டு, மச்சான் படிச்ச பாட்டு.’

ருக்கு பசுந்தளிரைக் கோதிவிட்டபடி தூண்டினாள். அவள் கிளறியது பிஞ்சுக் குழந்தை நிலையிலான கொழுந்துக்

கூட்டத்தை மட்டுமில்லை, காமாட்சியின் மனசையுங் கூடத்தான். காமாட்சிக்கு வெட்கமும் கூடவே பெருமையாகவும் இருந்தது. அவற்றை மறைத்துக் கொண்டு, 'ஓங்க மச்சானுக்கு வேற வேல?' இப்படிக் கேட்டு விட்டாலும் உள்ளூற ஒரு கிளு கிளுப்பு கணவனை நினைத்து,

இப்போது ஏழாம் நம்பர் மலைக்கு புதுத் தெம்பு, வீராசாமி பாடலினால்.

கோப்பிமல, குயினாமல, கொழுந்துல, பாட்டு காமாட்சிக்குப் பாடமாகி விட்டது. ராகம் போட்டு பாடவும் கற்றுக் கொண்டாள்.

அந்த கொழுந்து மலைத் தோழிகள் ருக்கு, மேரி, லெச்சுமி, பாக்கியம், வள்ளி, வீராயி, ராக்கு எல்லாரும் சேர்ந்து பாடவும் கற்றுக் கொண்டாகி விட்டது.

வீராசாமிக் கவிஞன் எழுதிய நூற்றுக்கணக்கான பாடல்களில் இந்தப் பாடலுக்கு ஜனரஞ்சகம் கிடைத்தது.

லட்சிய வெறியும், தமிழ்ப்பாட்டு உணர்வும் குடிகொண்ட அந்த தோட்டத்து இளைஞன் காமாட்சியைக் கட்டிக் கொண்டதிலும் பாடல் தூது சென்றது என்றே சொல்ல வேண்டும். இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயாகிய பின்னும் காமாட்சியின் வாழ்வில் கோப்பிமலை கூடவே வந்து கொண்டிருந்தது.

ஆனால், அது நீடிக்கவில்லை.

அந்த, லட்சிய மனிதன், யாரிடமும் கைநீட்டி தன் பாட்டுக்காக காசு வாங்காதவன், தன் பாடல்களில் எதையுமே அச்சுக்குள் கொண்டு வர நினைக்காதவன்,

பாடல்களை நினைத்து வருங்கால பெயரை நிலைநாட்ட முனையாதவன் திடீரென்று ஒரு விபத்தில் காலமானான்.

இரண்டு சின்னஞ் சிறுசுகளை காமாட்சியின் கரங்களில் திணித்துவிட்டுப் போய்விட்ட அந்தத் 'தான் தோன்றிக் கவிஞனின்' நினைவுகளே காமாட்சிக்கு வாழ்க்கையாகப் போய்விட்டது.

'அழுவாத புள்ள நீ குடுத்து வெச்சது அம்புட்டுதேன்'

- இது பார்வதி பாட்டியின் ஏழைக் குரல்.

'என்னுமோ வேல செஞ்சி புள்ளங்கல காப்பாத்து'

இது பொன்னையா கங்காணி.

நாங்க இருக்கோம் பயப்படாத அக்கா - இது ருக்கு.

'யாரு கண்ணு பட்டுச்சோ இந்தப் புள்ளங்களுக்கு' என்று ஆராயி அம்மாயி அலுத்துக் கொண்டாள்.

'காமாட்சி கண்ணு, கவலப்படாதம்மா நானுந்தேன் நாப்பது வருஷமா அவர கொண்டு போயி வச்சிட்டு வாழுறேன் இந்த தோட்டத்துல. மாரியாத்தா கைவுட மாட்டா. இது தரும தொர தோட்டம். ஆரையும் கைவுட்டுறாது' - என்று தலையயைக் கோதி விட்டாள். மேட்டுலயம், பனியலயம், கோரலயம் எல்லாம் வந்து காமாட்சிக்கு ஆறுதல் தந்தது.

இத்தனை சோகங்களுக்குமிடையே பெண்கள் இருவரும் வளர்ந்தார்கள். இருவருக்குமே திருமணம் முடிந்து நாற்பது ஐம்பது மைல்களுக்கு அப்பால் இருக்கும் தோட்டத்துக்குப் பெயர் பதிந்து போய்விட்டார்கள்.

காலம் தான் எவ்வளவு வேகமானது! எனினும் காலம் காமாட்சியின் உணர்ச்சிகளை மதிக்கவே இல்லை.

இயந்திர வாழ்வின் ஓட்டத்திலே... அதுதான் அந்தக் கால வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட காமாட்சியின் உடல் தளர்ந்து, முதுமை தட்டி, பார்வை மங்கிவிட்ட நிலையிலும் தன் பிள்ளைகளோடு போய் வாழாமல் பிடிவாதமாக இந்த, லயக் காம்பாறாவிலேயே இருந்து விட்டாள்.

கணவன் பாடிய பாடல்களை மறந்துவிட்டுப் போய் விட்டாள் என்றில்லாமல், காமாட்சியின் ஆத்மா அந்த வீட்டிலேயே எதற்கோ காத்துக் கிடக்கிறது. அந்த ஏழை மனதுக்கு அது ஒரு தவம்.

அன்று சனிக்கிழமை ஜெகஜோதியாக மலர்ந்தது. மெல்ல அசையும் காற்று.

இதமான இளம்வெய்யில் மேகத்தில் ஊடுருவி வரும் சூரியனின் ஊசிக் கிரணங்கள்.

அந்தப் பள்ளிக்கூட முற்றம் களை கட்டியது.

'சேர்... இத இந்தப் பக்கம் போடலாமா' திரைச்சிலையுடன் நிற்கும் இளைஞன் சோமு.

'இல்லல்ல மற்றப் பக்கம்' தலைமை ஆசிரியர்.

'இந்தா சேகர், இதைப்புடி' அலங்காரக் கயிற்றைத் திணிக்கும் விஸ்வா.

'ஹ்ஹா அரும, அரும அப்புடியேதான், அப்புடியேதான்.

'டீச்சர் இது சரியான்னு பாருங்க' - இது அட்டை எழுதும் ஆறுமுகம்.

'ஏய் ஹோல்டர போடு' இது மின்னிணைப்பாளன் ராஜன்.

'ஆய், ஊய்' என்று மாணவர் சத்தம்.

ஒலிபெருக்கி, ஒரு பழைய திரைப்படப் பாடலை அசத்திக் கொண்டிருந்தது.

"ஆண்டவனாகாச மதில் தூங்குகின்றாரே, தினம் மாந்தரெல்லாம் மாநிலத்தில் ஏங்குகின்றாரே."

இந்தப் பாட்டு அந்த விழாவுக்குப் பொருத்தமோ இல்லையோ அதன் இசை பலரின் உடலை அசைய வைத்தது! காமாட்சியின் வீட்டு வாசல் கதவுக்குக் கொண்டியோ, கொக்கியோ கிடையாது.

ஆசிரியர் குழுவும், விழா அமைப்புக் குழுவுமாக மொத்தம் ஆறுபேர் வந்தனர்.

"அம்மா" என்று விழாவுக்குத் தலைவர் அழைத்தது கேட்டது. ஆனால் தெம்பாக பதில் சொல்லத் திராணியில்லை. எழுந்திருக்க முயன்றாள்.

"இருங்க, இருங்க" - என்று இரு கரங்களையும் தாழ்த்தி இருக்கச் செய்தார் பாடசாலைத் தலைமை ஆசிரியர்.

உடம்பு ரணமாக இருந்தது. ஆனால் மனம் ஏதோ இனந்தெரியாத சுகத்தில் நனைந்திருந்தது.

இன்னும், காமாட்சிக்கு இளைமைக்கால நினைவுகள் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஆசிரியர், தயக்கத்துடன் பேசினார்.

"அம்மா! ஓங்க வூட்டுக்காரரர் சிறந்த கவிஞர். அத நாங்க அறியறதுக்கு காலம் கூடுதலாகத்தான் போச்சிது. ஏதோ காலங்கடந்து வீராசாமிக் கவிஞருக்கு பாராட்டு விழாவும் - ஞாபகார்த்த விழாவும் இன்றைக்கு நடந்துக்கிட்டிருக்கு" என்று சொல்லிவிட்டு அந்த வயோதிப முகத்தைப் பார்த்தார்.

எந்த வித உணர்ச்சி வெளிப்பாடும் காமாட்சியிடமிருந்து வரவில்லை. அநேகமாக ஆசிரியர் சொன்னதை காமாட்சி புரிந்து கொள்ள முயன்றாள். முடியவில்லை.

தன் கணவன் தன்னிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும் வாக்கியங்கள் நினைவுக்கு வரும்.

"காமாட்சி புள்ள, நம்ப எழுதற பாட்டை இந்தத் தோட்டத்துப் புள்ளங்க படிக்குணும், பாடுணும். அத நாங்க கேக்குணும். அம்புட்டுதான்."

ஒரு கவிஞனின் ஓரே ஆசை!

அது நிறைவேற இத்தனை காலமா?

அம்மா நீங்க இருக்கிற நெலமையில ஓங்கள மேடைக்கு அழைச்சிகிட்டு போக ஏலாது. ஆனாலும் விழா முடிஞ்சி மந்திரி ஓங்களப் பார்க்க வருவாரு. அதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கம். ஓங்க கணவர் பாடின பாட்டை நம்ம மாணவர்கள் படிக்கிறாங்க. அதக் கேக்க நீங்க கொடுத்து வச்சிருக்கீங்க.

இப்போதும் காமாட்சியிடமிருந்து வெளிப்பாடு இல்லை. ஆசிரியருக்கான பதிலை மனசால்தான் சொல்ல முடிந்தது. அவள் மனசு இப்படிச் சொன்னது.

'சாமி நீங்க படிச்சவங்க. என்னென்னமோ பேசுறீங்க. எந்தலையில ஒன்னும் ஏறுல. அவரு பாடுன பாட்ட நீங்க நல்லா சொல்லிக் குடுக்கிறீங்க.'

கடைசியாக தன் இரு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டாள். பத்து விரல்களும் இடுக்கில் நுழைந்து ஒரு குழந்தை கை கூப்புவதுபோல.

விழாக் குழுவினர் போய்விட்டார்கள். வெளியிலிருந்து வரும் சத்தம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

நவீன உலகத்து திரைப்படப் பாடல்கள் ஒலிபெருக்கியில் இசைத்து மிதந்தன.

காதை அடைக்கும் கனக்கற்ற ஓசைகள்.

அன்று அல்லித் தோட்டத்தில் வேலை நடக்கவில்லை. சம்பள முன்பணம் கொடுத்து மூன்று நாட்களே ஆகியிருந்தன. மேடையில் வீராசாமிக் கவிஞனின் பாடல்களை வைத்து கோலாட்டம், கும்மி, நடனம், குழுப்பாடல் என்று ஏழெட்டு நிகழ்ச்சிகள்.

சரியாக அமைச்சர் பிற்பகல் இரண்டு மணிக்கு வந்தார். மேள வாத்தியம், ஊர்வலம், மாலை அணிவித்தல் என்று வழமையான அமர்க்களம்.

நாதசுர இசை காமாட்சியின் காதில் விழுந்தது.

இந்த நிகழ்ச்சியில் ஒரேயொரு புதுமை. ஒரு கவிஞனின் பாடல்களை மட்டும் சேகரித்து வைத்துக்

கொண்டு கட்டினவளை பக்கத்து வீட்டில் போட்டு, அவனுடைய ஆத்மாவுக்கு மட்டும் போய்ச் சேருகிற மாதிரியானதொரு நன்றிக்கடன்.

இது அத்துமீறிய செயலாகவும் இல்லை. ஆனால் அந்தத் தோட்டத்து வாழ்க்கைக் காலத்துக்கு இது ஒரு கட்டாயம்.

"அம்மாயி" என்று ஓடிவந்த அஞ்சலையின் கைகளை இறுகப் பிடித்தாள் காமாட்சி.

ஏனோ அந்த பக்கத்து வீட்டுச் சிறுமிக்குக் கிழவியைப் பார்த்து பக்கத்திலேயே இருக்க வேண்டும் போல இருந்திருக்க வேண்டும். ஆகையினால் விழா நிகழ்ச்சிகளைப் பார்ப்பதிலும் அம்மாயியைப் பார்ப்பதிலுமாக இருநிலை உணர்வில் செயல்பட்டாள்.

"அம்மாயி... தாத்தா படிச்ச பாட்டு...ம்... நல்ல பாட்டு... நாங்கூட படிப்பேன்."

'எங்க படி' என்ற வகையில் சைகை காட்டினாள் கிழவி.

'கோப்பிமல, குயினாமல போயி' என்று வாத்தியார் இசைக்குழு மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்த ராகத்தில் பாடினாள்.

மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்த பாடல் அதைக் கேட்ட கேள்விஞானம் அஞ்சலைக்கு நன்றாக இருந்தது.

"நல்லாருக்கா பாட்டு அம்மாயி"

"சொகம்மா இருக்கு கண்ணு" என்று காமாட்சிக் கிழவியின் மனம் பேசியது.

தலையை ஆட்டி 'அருமை' என்பதைத் தெரிவித்தாள்.

"இன்னொரு தரம் படிக்கிறேன் அம்மாயி" அஞ்சலைக்கு உற்சாகம் கரை புரண்டது.

தன்னை மறந்து அடுத்த அடிகளைப் பாடினாள். காமாட்சி பாடலைக் கேட்டுக் கொண்டேயிருந்தது.

கேள்வி ஞானத்தோடு குரலை உயர்த்திப் பாடுறாள் அஞ்சலை. கேட்கும் சக்தியை இழந்து கொண்டே வருகிறது காமாட்சியின் செவிகள். பாடல் அஞ்சலை மூலமாக ஒளிவெள்ளம் போலாக.

எப்போதோ எழுதப்பட்ட உயிரோட்டமான வரிகளுக்கு இப்போது கொடுக்கப்பட்ட நிரந்தரமான வடிவம் அந்த ஆத்மாவை இறுதியாக வழியனுப்பி வைத்தது.

அம்மாயி நிம்மதியாகத் தூங்கட்டும் என்ற திருப்தியில் நிகழ்ச்சிகளைப் பார்க்க வெளியே ஓடிவிட்டாள் அஞ்சலை.

அந்தத் தோட்டத்து மக்கள் கூட்டத்துக்கு நடுவே வீராசாமிக் கவிஞனின் பாடல்கள் ஒலித்தன.

மூன்றாந் தலைமுறையின் குரலைக் கேட்டுவிட்ட ஆத்ம திருப்தியில் விடைபெற்றுப் போய்விட்டாள் காமாட்சி.

விழா கோலாகலமாக ஆரம்பமானது. சம்பிரதாய விநாடிகளையெல்லாம் தாண்டிவிட்ட நிகழ்வுகளிடையே கோப்பிமலை பாடல் நேரம் வந்தது.

இசைக்கருவிகள் இயங்க மேடையில் அலங்கார வர்ணச் சீலைகள் நெளிய, ஒலிபெருக்கி முழங்க அந்த மாணவர்கள் நிகழ்ச்சி சீருடையுடன் வரிசையாக நின்று பாடலை உற்சாகமாகப் பாட மக்கள் மௌன வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

காமாட்சியின் ஆத்மா? 'அஞ்சலை கண்ணு'வின் எளிமையான பாடற் செய்தியினைத் தன் கணவனுக்கு எடுத்துக் கொண்டு வெகு தொலைவில்...!

★

# கைகாட்டி

பம்பலப்பிட்டி பவுத்தலோக மாவத்தையில் அமைந்த அந்த மத்தியதர வீட்டில் புத்த சிலையின் பாதச்சுவட்டில் ஒரு சிட்டி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்துத் தட்டில் இரண்டு அல்லிமலர்கள். மறுபக்க ஓரத்தில் பத்திக் குச்சிகள் புகைந்து கொண்டிருந்தது.

குலரட்ன அவசர அவசரமாக தலையைத் துவட்டிக் கொண்டு வந்தார்.

"என்னங்க சீக்கிரமா வந்து பூஜ பண்ணுங்க!" என்று மனைவி நந்தாவதி கிரிபத் தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டாள். அந்த அதிகாலை நேரத்தில் குலரட்னவும், நந்தாவதியும் பம்பரமாகச் சுழன்றார்கள். பிள்ளைகள் மூவரும் நல்ல தூக்கம், மணி மூன்றாகி விட்டது.

சரியாக நான்கு மணிக்கு ஸ்டேஷனில் இருக்க வேண்டும். பொடிமெனிக்காவை எடுக்க வேண்டும். இன்று அவருடைய பிறந்த தினமாகையால் இத்தனை பெரிய அதிகாலை அமர்க்களம்.

புத்தபகவான் முன் கண்களை மூடியிருந்தார். ரேடியோவில் தம்ம பதத்தின்

படபடவென்று காரியங்கள்

"சரி வாங்க கொஞ்சம் பால் சோறு சாப்புடுங்க" - 'கிரிபத்' தயாரித்துக் கணவனுக்கு அதைப் பார்சல் செய்து வைத்து விட்டு பயணப்பையில் முறையாக அடுக்கிக் கொண்டே கூப்பிட்டாள்.

"ம்... அந்தப் பார்சல எடுத்து வச்சியா?"

"இந்தா வச்சிருக்கிறேன்" என்று முதல் கடையில் வாங்கிய அந்த இளம்பச்சையும், மஞ்சளும் கலந்த கவுனை எடுத்துக் காண்பித்தாள்.

அழகாகப் பொதி செய்து அதில் எழுதினாள் நந்தாவதி.

"தினசரி எனக்குக் கைகாட்டும் பெண்மணிக்கு என் பிறந்த நாள் பரிசு" - இப்படி சிங்களத்தில் எழுதி குலரட்ன என்று எழுதினாள்.

ஆம், பரிசுப்பொதி... இது யாருக்கு... போய்ச்சேர வேண்டியவரின் பெயர் என்ன, எப்படிக் கொடுப்பது, கொடுத்தால் ஏற்றுக் கொள்வாள் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது.

அந்தப் பெண்ணுக்கு எதையோ பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று குலரட்னவின் மனதில் பட்டது. எப்படிக் கொடுக்க வேண்டும் என்று தெரியவில்லை.

பம்பலப்பிட்டி காலிரோட்டில் ஓட்டோ திரும்பி ஓடியது. சில்லென்ற காற்று வீசியது. குளித்து முழுகி புதிய

உடையுடன் போவதும் இந்தக் குளிர்காற்று உடம்பில் வந்து மோதுவதும் ஒரு வகையில் குலரட்னவுக்குச் சுகமாகவே இருந்தது.

கோட்டை ரயில் நிலையத்துக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு சமூகம் தந்து வருகைப் புத்தகத்தில் கையொப்பம் போட்டு நேரத்தைக் குறிக்க வேண்டும்.

வழமைக்கு மாறாகப் பயணப்பை கனத்தது. இருந்தாலும் அது ஒரு சுகமான கனம், இல்லையில்லை - உணர்ச்சிபூர்வமான, அனுதாபங்கள் நிறைந்த, ஓட்டோ தடபுடலாக ஓடியது. காலை நேரம். காலி ரோடு. தொல்லையில்லாத ஓட்டம். மகிழ்ச்சியான ஓட்டம். ஓட்டோ டிரைவர் முகத்தைப் பார்க்கும்போது புரிந்தது.

வழமையான காட்சிகள், நகரத்தின் நேர்ச்சாலையில் இரண்டு பக்கங்களிலும், முப்பது வருடங்களாகப் பார்க்கும் மாடிக் கட்டிடங்கள் அலுத்துப் போன காட்சிகள் தான்.

பொடிமெனிக்காவை பதுளைக்கு ஓட்டிக் கொண்டு போகும் போது தான் குலரட்ன அனுபவிக்கும் காட்சி சுகம். அப்பப்பா!

அலுத்துப் போன நகரத்தின் காலை நேர அழகுக் காட்சிகளை உதறிவிட்டு ஆட்டோ ரயில் நிலையத்தை அடைந்தது.

லபக்கென பயணப்பையுடன் இறங்கி ஓடினார்.

"குட்மானிங் சார்"

"குட்மார்னிங் மிஸ்டர் குலரட்ன"

குலரட்ன வரவுப் புத்தகத்தில் கையொப்பம் இட்டுவிட்டுக் கடமையில் மூழ்கினார்.

* * *

"என்னா குலே... ஹெப்பி பேர்த்டே" என்று கைகுலுக்கினார், சக என்ஜின் டிரைவரான மிஸ்டர் எல்.எஸ். பெரெரா.

"தாங்க்யூ மிஸ்டர் பெரேரா" - என்று பதில் கூறிக் கொண்டு தனது பிளாஸ்கின் மூடியைத் திறந்து தேனீரை ஊற்றினார்.

தேனீரைச் சுவைத்துக் கொண்டே பெரேரா குலரட்னவை விநோதமாகப் பார்த்தார். அவருடைய பார்வையில் இனந்தெரியாததொரு ஆழம் இருந்தது.

"என்ன பாக்கிறீங்க பெரேரா"

"இல்ல இன்றைக்கு வழமையான கூட்டத்தைக் காணமே" என்றார் வெளியே எட்டிப் பார்த்து,

"ஆம்... மிஸ்டர் நானும் பாத்தேன். நெனச்சேன்."

கொழும்பு ரயில் நிலையத்தின் முதலாது மேடையில் பொடிமெனிக்கா "பூம்பூரும்..." என்ற நிரந்தரமான சத்தத்துடன் நின்றது.

மக்கள் அங்கும் இங்கும் ஓடிய நிலையில். இன்னும் இருபது நிமிடங்கள். பொழுது விடியவில்லை.

ஒலிபெருக்கி மூன்று மொழியிலும் இடைவிடாது முழங்கிக் கொண்டிருந்தது.

“முதலாவது மேடையில் - கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் புறப்படும் பொடி மெனிக்கே. நிப்பாட்டப்படும் புகையிர நிலையங்கள். மருதானை....” என்றதும் எல்லாருக்கும் தெரிந்த ஸ்டேஷன் பிரிவு அதிகாரி வளையம் போட்ட ‘டெப்லட்டை’ச் சரி செய்து கொண்டு வந்தார்.

“விஷ்யூ ஹெப்பி பேர்த் டே” என்று குலரட்னவின் வலது கையில் குலுக்கி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு வளையக் குமிழை நீட்டினார்.

மெதுவாக ஊர்ந்த ரயில் கண்சிமிட்டும் நேர அவகாசத்துக்குள் வேகத் தொடரை அபிவிருத்தி ஆரம்பித்து வளர்த்தது.

பன்னிரண்டு பெட்டிகளைக் கொண்ட பொடிமெனிக்கே ரயில், தலைதெரிக்க ஓடிக் கொண்டிருந்தது.

குலரட்ன தனது பொதிகளைச் சரி செய்து வைக்கத் தொடங்கினார். தனது சக என்ஜின் ஓட்டுனராகிய குணசேனவுக்கும் பால்சோற்றுத் துண்டுகளைத் திட்டுத் திட்டுகளாக எடுத்து வைத்தார். “என்னா குணே” என்று குலரட்ன சிங்கள மொழியில் அழைத்தார். “இந்த பிறந்தநாள் ஒங்குலுக்கு ரொம்ப ‘எமோஷனலானது’ன்னு சொல்லுங்க” என்று தண்டவாளப் பாதையை அவதானித்துக் கொண்டே கூறினார். அவரும் சிங்களத்திலேயே பேசினார். இருவருக்கும் ஆங்கிலம் தெரியும். சில நேரங்களில் அவர்களிடையே ஆங்கில மொழி சரளமாக விளையாடும்.

குலரட்னவின் தந்தை ‘கண்டிச் சிங்களவர்’ என்று கூறப்பட்ட வகுப்பினர். நாவலப்பிட்டியில் என்ஜின்

டிரைவராக இருந்து ஓய்வு பெற்றவர். 'கெரட் என்ஜின்' என்ற பூத இலுவையை முதன் முதலாக தனது பறங்கிய நண்பருடன் இணைந்து பதுளைக்கு ஓட்டிச் சென்று ரயில்வே இலக்காவின் சிறப்புப் பரிசினைப் பெற்றவர். அது சுதந்திரத்துக்கு முன் நடந்த வைபவம்.

ஆகவே குலரட்னவின் குடும்ப ரயில்வேப் பணிக்கு இன்று வயது எழுபத்தைந்துக்கு மேல் ஆகிறது. ரத்தத்தில் கலந்து வளர்ச்சி பெற்ற ரயில்வே ஊழியம்.

இதை நினைத்துப் பெருமைப்பட்டதோ, அல்லது யாரிடமும் சொல்லி தன் கௌரவத்தை நிலைநாட்டியதோ கிடையாது.

ஓடும் யந்திரத்துடன் அவருடைய வாழ்க்கை வண்டியும் ஓடுகிறது, "என்னாருந்தாலும் நீங்க குடுத்து வைச்ச மனிசந்தான், குலரட்ன" குணசேன இப்படிச் சொன்ன போதும் அடக்கமாகவே த்னது ஓட்டும் பணியில் மும்முரமாக இருந்தார். மீட்டர்களோடும், விசைகளோடும் சங்கமமாகியிருந்தார்.

"இதுல நாஞ்சொல்றதுக்கு என்ன இருக்கு குணே"

குணேயும், குலேயும் அந்த என்ஜினுக்கு இரண்டு பக்க உயிரோட்டங்கள்.

இப்போது நன்றாக விடிந்து விட்டது. இரண்டு பக்கங்களிலும் பச்சைப் பசேலென்ற வயல்கள். வகிடெடுத்து வாரிவிட்டதைப் போல சிறு சிறு, நீண்ட மண் திட்டுக்களிடையே வளர்ந்திருந்த நெற்கதிர்கள் அசைந்தாடி ரயிலுக்கும் அதில் அமர்ந்திருந்த பயணிகளுக்கும் கைகாட்டி மகிழும். பசுமையின் இலக்கணம். இரவு இலேசாக மழை

பெய்து இப்போது ஓய்ந்திருந்தது. அதனால் வெள்ளிச்சர நீர் மொட்டுகளை தாங்கி நிற்கும் நேர்த்தி ஏதோ தெய்வ காரியத்துக்காக தண்ணீர்க் குடமெடுத்துப் புறப்பட்ட பக்தர் கூட்டத்தைப் போல

"மழபெஞ்சி ஓஞ்சது ரொம்ப நல்ல இருக்கு இல்ல" - என்றார் குலரட்ன.

"ம்...ம்... ரொம்ப நேர்த்தி..."

ஆமாம் எல்லாருமே ரசித்து மகிழும் புறக்காட்சிகள். இந்தக் காட்சிகளை பருகி அனுபவிக்க ரயிலைப் பத்து நிமிடங்கள் நிறுத்தக் கூடாதா? என்று பயணப்பெட்டியில் இருந்த மக்களின் நினைப்பும் ஓட்டுனர்களின் நினைப்பும் அநேகமாக ஒன்றாக இருந்தன. தூரத்தே பச்சைக்காடு - அதற்கும் தூரத்தில் ஓங்கி நிற்கும் பாறை மலை. அதன் உச்சியில் தான் தோன்றித்தனமாக நின்றசையும் நாலைந்து தென்னை மரங்கள்.

எல்லாம் மின்னல் வேகக் காட்சிகள். ஓடும் அழகுக் கூட்டம். நமது அன்றாடத் துன்பங்களையெல்லாம் பொசுக்கித் தள்ளும் புறக்காட்சிகள்.

இது, இந்த இரண்டு ஓட்டுனர்களுக்கும் மரத்துப் போன காட்சிகள். ஆனால் குலரட்னவின் உள்ளத்தில் அமைதியான அழகியல் குடிகொண்டிருக்கத்தான் செய்தது.

வேகத்தைச் சுமந்த இலட்சியத்தில் ரயில்வண்டி பொல்காவலை வந்துவிட்டது.

சத்தங்கள், சத்தங்கள், ஏதோ யுத்தம் நடக்கிறமாதிரியான ஏகப்பட்ட ஒலிகள். வெள்ளம் போல.

"ஹ்ஹாம்... கோப்பி, கோப்பி, கோப்பீ"

"குறும்பா, குறும்பா, குறும்பா"

"சில இடங்களில் 'கும்பா' என்றும் வரும். இன்னும் வடை பழங்கள், சோடா போத்தல்கள். இதையெல்லாம் எதிர் கொள்ள பயணிகளில் நுற்றுக்குப் பத்துப் பேர் கூட தயாராக இல்லை, அந்தக் காலை அவசரத்தில்.

பத்துப் பனிரண்டு பேர் காப்பி வாங்கிக் குடித்தனர். குடித்து முடித்து காசு கொடுத்து, காப்பிக்காரன் தலை மறைந்ததும், அவனைத் திட்டினர்.

"அநியாயம், அநியாயம், குடுக்குறது கால் டம்ளர். அதுக்குக் காசு ரெண்டு மடங்கு... ப்ச்ச... நம்ம மாதிரி மடையன் யாரு இருக்கா" ஒருவர்.

"ச்சே... அப்புடி சொல்லாதீங்க... அந்த ஆளு வூட்டுல என்னா கஷ்டமோ. இந்த வருமானத்த நம்பி எத்தன பேரோ? இப்பிடிப் பயணத்துலயாவுது இப்புடி ஒரு தர்மஞ் செஞ்சிக்கத்தான் வேண்டியிருக்கு" - இன்னொருவர் இப்படிப் பேசியது அனைவரது கவனத்தையுங் கவர்ந்து விட்டது.

"உண்மை... உண்மை... அது சரிதான்... யாருக்கோ நல்லது போயிச் சேருணும்னா இந்த அர டம்ளர குடிக்கறது நல்லது தான். இப்புடித் தெரிஞ்சிருந்தா நானுங் குடிச்சிருப்பேன்" - மூன்றாமவர்.

சலிப்புக் கொட்டிய முதலாமவர்க்கு முகம் சுண்டிக் கறுத்து விட்டது. ஏழெட்டு நிமிடங்கள் நின்ற ரயில் மீண்டும் விசில் சத்தமிட்டு ஊர்ந்தது.

மீண்டும் ஓடியது, உணர்வுகள் குலுங்க. பயணிகளை உள்வாங்கியும், வெளியேற்றியும் கடமை முடித்த மகிழ்ச்சியில் ஓடியது.

குளு, குளு நிலையிருந்து, மீண்ட ரயில் பயணம் மெல்ல மெல்ல வெப்ப வளர்ச்சிக்குத் தாவிக் கொண்டிருந்தது.

சூரியன் கிழக்கே தோன்றி சற்று உயர்ந்து விட்டான். ஜன்னல் வழியாக வந்த கிரணங்கள் சிலருக்கு இதமாக இருந்தது. சிலருக்கு சுரீரென்று ஊசி குத்துகிற மாதிரி இருந்தது. சிலருக்கு எவ்வித உணர்வுப் பரிமாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

★ ★ ★

நாவலப்பிட்டி ரயில் நிலையத்தைத் தாண்டும் போது மணி பதினொன்றாகியிருந்தது. இப்போது கூட்டம் பொடிமெனிக்காவைத் திணற அடிக்கும் விதத்தில்.

மலையேறும் பணியை ஆரம்பிக்க நாவலப்பிட்டி ரயில் நிலையம் எல்லா ரயில்களுக்கும் ஒரு நெகிழ்சசியான மேடையை அமைத்துக் கொடுக்கும். இன ஒற்றுமைக்குத் தளம் அமைத்துக் கொடுக்கும் சங்கமம், ரயில் பயணத்தைப் பொறுத்தவரை, தமிழர், சிங்களவர், இஸ்லாமியர்கள். முழுமையான மூன்று முகங்களைப் பார்த்து வழியனுப்பும் ரயில் நிலையம் நாவலப்பிட்டி. இன்று நேற்றா கடந்த நூறு வருடங்களாக ஓயாமல் ஓளியாமல் செய்து கொண்டிருக்கும் சங்கமப் பணி.

'சேலம் பிரிட்ஜ்' என்ற பாலத்தைக் கடந்ததும் தேயிலைத் தோட்டங்கள் பாய்விரித்துப் பந்தி வைக்கத்

தொடங்கின. குலரட்னவின் அகக் காட்சியில் அந்தச் சிறு பெண், சின்னஞ்சிறு அங்கஹீனப் பெண்ணின் அழகு முகம் தெளிவாக இடம் பிடிக்கத் தொடங்கியது.

ஆமாம், இப்போது தமது கடமைகளினூடே அந்தச் சின்னப் பெண்ணின் கைகாட்டும் பாவனையை மனதுக்குள் தெளிவாகப் போட்டுப் பார்க்கத் தொடங்கினார்.

வீடியோ படத்தைத் தெளிவாக்கும் கடமையில் விசைக்குமிழைத் திருகித் திருகிப் பார்பபது போல, மனம் அந்த வேலையைச் செய்யத் தொடங்கியது.

* * *

கடந்த நாலைந்து வருடங்களாகத் தனக்குக் கைகாட்டி மகிழும் அந்தச் சிறுமி, போலியோவினால் இரண்டு கால்களும் முழுமையாக இயங்காத நிலையில் அந்தக் குழந்தை, சிவப்பான குண்டுமுகம். அந்த முகத்தில் ஒரு தெய்வீகக் களை. கார்காலத்து மேகக் கூட்டத்தினிடையே மறைந்தும், தெரிந்தும் என்ற நிலையில், கருமையான மயிர்க்கூட்டத்தை ஒரு கையால் ஒதுக்கிக் கொண்டே தான் ஓட்டும் ரயிலுக்குக் கைகாட்டும் அந்தச் சிறுமி.

அநேகமாக வட்டக்குடையிலிருந்து சற்று தூரத்தில் அந்த தேயிலைத் தோட்ட லயத்தின் கோடியில் ஒரு பழைய பாயில் உட்கார்ந்து கைகாட்டி மறைவதே அந்தச் சின்னப் பெண்ணின் அன்றாட கடமை.

ஆமாம்! அந்தத் தோட்டத்திலிருந்து 'கிரேட் வெஸ்டர்ன்' ரயில் நிலையத்துக்கு நடந்து போய்விடலாம்.

ரயில் நிலையத்திலிருந்து நடைதூரத் தோட்ட வீட்டுத் தொகுதி.

"குணே எப்புடி இன்னிக்கு பயணம்!"

நல்ல பயணம். வெயிலும் இல்ல மழையும் இல்ல. ரயில்வே பாதைகள்ல 'கோஷன்ஸ்'. இல்லாததனாலத்தான் நேரத்துக்கு வர்ரம். குட், குட்"

கோஷன்ட்ஸ் - ரயில்வே பாதைகளில் வைக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைப் பதாகைகள்.

"மிஸ்டர் குலரட்ன! டுடே இஸ் யுவர்ஸ்" என்றார் குணசேன. இன்றைக்கு உங்கள் தினம் என்று ஆங்கிலத்தில் கூறியதும் குலரட்ன அதை மறுத்தார்.

"நோ - நோ நோ... டுடே இஸ் ஹேர்ஸ். இன்றைய தினம் அந்த வலது குறைஞ்ச பிள்ளையுடையது" - என்று அந்தப் பார்சலை எடுத்துக் கவனமாக வைத்துக் கொண்டார்.

ரயில் தலவாக்கலை தாண்டி, ஹாலிகுட் தோட்டத் தேயிலைச் செடிப் பசுமைகளுக்கிடையே மிகக் கௌரவமாக ஓடிக் கொண்டிருந்தது. அங்கங்கே கொழுந்தெடுக்கும் பெண்கள் கூடைகளுடன் மும்முரமான இயக்கத்தின் மத்தியில். ரயில் போகும்போது தம்மையறியாமல் சற்று ஓய்வு எடுக்கும் கரங்கள். ரயில் பயணிகளையும், ரயிலின் அழகு ஓட்டத்தையும் பார்த்து மலரும் முகங்கள். மீண்டும் தேயிலைச் செடி முகங்களுக்குள் கரங்கள் பதிக்கும் லாவகம். இதனை குலரட்ன இருபது வருடங்களாக ரசித்து வருகிறார்.

ஆனால், ஊர் பேர் தெரியாத ஒரு வலது குறைந்த ஜீவனைப் பார்த்து உணர்வது அவருக்கு வித்தியாசமான அனுபவம். இரண்டொரு முறை கிரேட் வெஸ்டர்ன் ரயில்

நிலைய அதிகாரியிடம் இந்தச் சிறுமி பற்றி விசாரித்திருக்கிறார். விபரத்தை அறியும் நோக்கத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

ஆனால் கடமை செய்யும் வேகத்தில் எல்லாமே சாத்தியமில்லாமற் போய்விட்டது. ஆனால் இந்த முறைதான் தனது பிறந்ததின மகிழ்ச்சியை இந்த இயலாத ஜீவனுடன் பகிர்ந்து கொள்வது என முடிவெடுத்தார்.

"மிஸ்டர் குலரட்ன... இப்புடி ஒரு பரிசு... இப்புடி ஒரு 'டிஸ்ஸேபிள்'ளுக்குக் குடுக்கனும்கிற ஐடியா எப்படி உங்களுக்கு வந்திச்சு?"

"தற்செயலா போன மாதம் தொலைக்காட்சியில் தமது பரிசுகள தூரத்தில இருந்து போடுறாங்க. அந்தக் காட்சியப் பாத்ததும் மின்னல் வெட்டுவதப் போல இந்த ஐடியா வந்திச்சி. அப்பத்தான் நான் நெனச்சேன்.. ஒரு பரிச நம்ப மனசின் ஆழத்திருந்து குடுத்தா... அத எப்படிப் போட்டாலும் சரின்னு பட்டிச்சி"

"நீங்க ஒரு என்ஜின் டிரைவர் மட்டுமில்ல மிஸ்டர் குலரட்ன. யூ ஆர் கிரேட். ஆமா இந்த கிரேட் வெஸ்டர்ன் எஸ்டேட் டிஸ்ஸேபிள்னால நீங்க 'கிரேட்' மேனா ஆகிட்டிங்க."

"அப்புடில்லாம் இல்ல குணே. இது ஒரு சாதாரண மனிதாபிமான உணர்வுதான். மேலதிகமா ஒன்னுமில்ல. ஆனா இந்தப் பரிச அந்தச் சிறுமியப் பாத்து வீசத்தான் வேணும். அத அவுங்க அந்தக் கொழந்தையுடைய பெற்றவங்க எப்புடி ஏத்துக்கப் போறாங்கன்னு தெரியல. ஆனா இந்த ஜீவனுக்கு இது பத்தாது. இரண்டொரு

மாசத்துல இதுக்கு ஒரு கைவண்டி வாங்கிக் குடுக்கணும், அதான் என்னுடைய இப்போதைய இலக்கு'' என்று சொல்லி நிறுத்தவும், ரயில்வண்டி வட்டக் குடையைக் கடந்து கிரேட் வெஸ்டர்ன் மலைச்சாரல் ஏற்றத்தைச் சந்தித்து நகரவும் சரியாக இருந்தது, வலது பக்க, என்ஜின் வாசலில் தயாராக பார்சல் சகிதம் நின்றார்.

ஆம்! தனது நெகிழ்ச்சிப் பகுதி நெருங்கியது. வழமை போல தனது வலது கையை உயர்த்திய அந்த பன்னிரண்டு வயது சின்னப் பெண்ணுக்கு நேரே வீசினார். அது அந்த ஜீவனுக்கு சற்று தூரத்தில் விழுந்தது. அதற்குள் ரயில் தனது வழமையான ஓட்டத்தினூடே சற்று தூரம் போய் விட்டது. ரயில் பெட்டியில் அமர்ந்திருந்த மக்கள் இந்தக் காட்சியை, திடீர் நிகழ்ச்சியை விநோதமாகப் பார்த்தனர்.

அடுத்த காட்சி என்ன என்பதை அவதானிக்க யாருக்குமே முடியவில்லை.

'கிரேட் வெஸ்டர்ன்' ரயில் நிலையத்தில் ஒரு நிமிடம், ரயில் நிலைய அதிகாரியிடம் இந்தப் பரிசு விடயத்தைக் கூறித் தனது பரிசை ஏற்றுக் கொள்ளுமாறு, குறிப்பிட்ட பெற்றோரிடம் எடுத்துச் சொல்ல யாரையாவது ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

* * *

அடுத்த நாள் பதுளையிலிருந்து பொடிமெனிக்கே புறப்பட்டது. அன்று வெள்ளிக்கிழமை, மலைப்பிரதேச பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது. அநேகமாக அட்டன் வரை இது உயர்ந்து இருக்கும்.

நல்ல வேளையாக பதுளை ரயில்வே ஊழியர் ஒருவரிடம் ஒரு காமெரா இருந்தது. வீட்டிலிருந்து கொண்டு வருவதற்கு மறந்து போன விடயம். இரவலாக வாங்கிக் கொண்டு, பிலிம் நிரப்பி வைத்துக் கொள்ள குணசேன உதவினார்.

பொடிமெனிக்கே பதுளையிலிருந்து நானுஓயா வரும் வரை கணக்கற்ற எச்சரிக்கைப் பலகைகள், பாலங்கள், சுரங்கங்கள், பாறைகள், வளைவுகள், அப்பப்பா!

இந்தத் தடைதாண்டி ஓட்டத்தை நிறைவு செய்ய ஓட்டுனர்கள் மிக நிதானமாகப் பாதை சமிக்ஞைகளையும், மீட்டர்களையும், விசைகளையும் கையாள வேண்டியிருக்கும், மலைநாட்டு ரயில்பாதையில் இந்த இடைத்தூரம் எல்லா ஓட்டுனர்களுக்கும் ஒரு சவால், அவர்களை நூற்றுக்கு நூறு நிதானப்படுத்தும் இயற்கையமைப்பு.

அன்று பதினைந்து நிமிடங்கள் தாமதமாகவே நானு ஓயா வந்தது. அடுத்த கட்டத்தில் இந்தக் குறைபாடை சரி செய்து கொள்ளலாம்.

வெய்யில் பரவியிருந்தாலும், நானுஓயாவுக்கே உரித்தான குளிர் அனைவரையும் "ஸ்லூ..." என்று தம்மையறியாமல் மூச்சிழுக்க வைத்துக் கொண்டிருந்தது.

ரயில் நிலையத்தைக் கடந்ததும் கைகாட்டித் தூண்கள், அந்தப் பெயர் தெரியாத சிறுமியை ஆழமாக ஞாபகப்படுத்தின.

தன் புகைப்படக் கருவியை ஒரு கையில் வைத்துக் கொண்டே கடமையில் இறங்கினார்.

தனது சகாவின் உதவியும், ஒத்துழைப்பும் குலரட்னவின் செய்கைகளுக்குத் தெம்பூட்டிக் கொண்டிருந்தன.

மெதுவாக இறங்கியோடும் சர்ப்பத்தைப் போல பொடிமெனிக்கே ரதள்ள இறக்கத்தில் வளைந்தோடியது.

கிரேட்வெஸ்டன் ரயில் நிலையத்தை வந்தடைந்ததும், குலரட்னவுக்கு மகிழ்ச்சி காத்திருந்தது.

அந்தச் சின்னப் பெண்ணின் தந்தையும் தாயும் நிறைய பூக்களுடன் காத்திருந்தனர்.

ஐயா... வணங்கங்க சேர்... நாம் பங்களாவுல வேலங்க, தொரக்கிட்ட சொன்னதும்... இந்த பூவல்லாம்... கொண்டு போய்குடுன்னு சொன்னாருங்க'' - அடுத்த வீட்டுக்கார இளைஞன் எழுதியிருந்த ஒரு கடதாசித்துண்டையும் கொடுத்துக் கும்பிட்டார்கள்.

ரயில் நகர்ந்தது, பேப்பரில் 'ரஞ்சனி' என்று சிறுமியின் பெயர். அந்த இளம்பச்சை நிற புதிய கவுனில் உட்கார்ந்திருந்த ரஞ்சனியைச் சற்றுத் தூரத்திலிருந்தே நாலைந்து கிளிக் எடுத்துக் கொண்டார் குலரட் ன.

எப்போதும் அவர் நிலைத்திருக்கும் அந்தக்காட்சி. புதுக்கட்டையில் தலைவாரி பொட்டு வைத்து, அந்த ஊனப்பெண்ணின் முகமலரில் மகிழ்ச்சித் திளைப்பு.

* * *

குலரத்னாவுக்கு பரமதிருப்தி, தனது ஐம்பதாவது பிறந்த தினத்தை தன் உள்ளுணர்வுக்குத் தீனிபோடும் விதத்தில் கடந்துவந்த மகிழ்ச்சியில், சில நாட்களுக்கு

விடுமுறைக்கு விண்ணப்பித்தார். பத்து நாட்கள் வேலைக்கு வராத நிலையில் காலிக்கு பயணமானார்.

பத்து தினங்களுக்குப்பிறகு பொடிமெனிக்கா என்ஜின் வாசலில் பிரேவேசிக்கும் குலரத்னாவுக்கு மனம் ஏனோ மகிழ்ச்சியாக இல்லை. தனது சகா குணசேனா மட்டக்களப்பு பகுதி ரயிலுக்கு மாற்றப்பட்டிருந்தார். அதனால் அன்று அவரைச் சந்திக்க முடியவில்லை. வழமைபோல ரயில் நகர்ந்தது, ஓடியது, நின்றது, ஏற்றியது இறக்கியது. சத்தங்கள், கைகாட்டிகளின் வரவேற்பு, கை காட்டிகளின் வழியனுப்பு.

தன்னோடு கடமையிலிருந்த பறங்கிய இன ஓட்டுனர் 'லெஸ்டர்' மிகவும் திறமைசாலி. பொறியியல் கல்லூரி மாணவனாயிருக்கும்போதே பரிச்சயமானவர். அன்று ஏனோ வயிற்றுப் பொருமல் போன்ற சங்கடம். அடிக்கடி இரண்டொரு வில்லைகளை விழுங்க வேண்டியிருந்தது. சற்று உடற்சுகவீனத்துடன் கடமையாற்ற வேண்டிய கட்டாயம். "டேக் இட் ஈஸி மிஸ்டர் குலரட்ன" என்று ஆங்கிலத்தில் கூறிய லெஸ்டர் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு இயங்கினார். லெஸ்டரின் சுறுசுறுப்பும், கூடுதலான பொறுப்புணர்வும் குலரட்னவுக்கு உதவியாக இருந்தது.

ஆனாலும் அவருக்கு சங்கடமாக இருந்தது.

வீட்டிலேயே இருந்திருக்கலாம் என்று நினைத்தார். அன்றைய ரயில் பயணம் சற்று எதிர்ச் சிந்தனைகளை அவருக்குள் ஏற்படுத்தியது.

இறைவன் ஒவ்வொரு உலக நகர்விலும் ஒவ்வொரு அற்புதத்தையும், அர்த்தமுள்ள மாற்றத்தையும் வைத்திருக்கிறார்.

அன்று கிரேட் வெஸ்டர்ன் தோட்ட லயத்து ஊனமுற்ற சிறுமி வெளியே உட்கார்ந்திருக்கக் காணவில்லை.

கைகாட்டவில்லை.

"என்ன காரணம், இன்றைக்கு மழையும் இல்லையே" என்று தனக்குள் பேசிக் கொண்டே ரயில் நிலையத்தைப் பார்த்தார். தனது சுகவீனம் காரணமாக அவர் என்ஜினை விட்டு இறங்கவில்லை.

லெஸ்டரின் கூடுதல் கடமையின் காரணமாகவும் குலரட்ன வெளிக்காட்சிகளையோ, உட்கட்ட காட்சிகளையோ உற்சாகமாகப் பார்க்க முடியவில்லை, இருந்தாலும் தனக்குள்ளே ஒரு கேள்விக்குறி.

"ம்..." என்று யோசிக்கவே அவரால் முடிந்தது.

அவருடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை.

"என்ன ஒரு மாதிரி 'டல்லா' இருக்கீங்க" என்று பலரும் கேட்டார்கள். அவரிடம் கேட்கும் போதும் ஒரு மரியாதை இருந்தது.

"ஒன்றுமில்லை. உடல்நலக் குறைவு" சோம்பித் தான் பதிலளித்தார். உடல் நலக் குறைவோடு இப்போது இலேசானதொரு மனநலக்குறைவும் அவருக்குள் உற்பத்தியாகி அபிவிருத்தி கண்டிருந்தது.

அன்று கடமை முடிந்து வீடு சென்ற போதும் இந்த கேள்வி, "என்னங்க ஒடம்பு சரியில்லேன்னா வீட்டுல இருங்க. கண்டத நெனச்சு, பலவீனமடையாதீங்க" - மனைவி நந்தாவதி -

"எப்பிடியோ சமாளிக்கிறேன்"

"சும்மாயிருங்க... நாளைக்கு லீவு போட்டு வீட்ல இருந்து டாக்டர்கிட்டே போவம்" - நந்தாவதி வற்புறுத்தினாள்.

"அதுக்கு ஆயிரம் செலவழிக்க சொல்ற"

அது... பிரைவேட்... டாக்டர்கிட்ட, ஸ்பெஷலிஸ்ட்கிட்ட போனாத்தான."

"சரி வீட்ல இருக்கேன்... ரெஸ்ட் எடுப்போம். பன்சலைக்குப் போவோம். முருகன் கோயிலுக்குப் போயி பூச குடுப்போம்." இப்போது மனைவிக்குத் திருப்தியாக இருந்தது.

* * *

சுகவீன விடுமுறைக்கு சான்றிதழ் கொடுத்து சற்று ஓய்வுடன் வேலைக்குச் சென்றார்.

அன்று கடமை உற்சாகமாகத்தான் இருந்தது. ஆனால் கிரேட் வெஸ்டன் மலைச்சாரல் அனுபவங்களை அண்மித்த போது அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த லயத்துத் தொங்கல் வீட்டில் நின்ற கூட்டம், குடியிருப்புத் தொகுதியினைக் குறுக்குபடுத்தி உயரத்தில் பறந்த எளிமையான வெள்ளைக் கடதாசி அலங்காரம். இரண்டொரு கொடிகள்.

வெள்ளைத் துணியில் தமிழ்மொழியில் கறுப்பு எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த வாசகம். தமிழ் வார்த்தைகள் என்பதால் குலரத்னவுக்குப் புரியவில்லை.

சற்று சமாதானம் செய்து கொண்டு ரயில் நிலையத்தில் இறங்கி நாலைந்து தாவலில், காரியாலயத்தை அடைந்தார். ''மிஸ்டர் அந்த லயத்துல யாரு இறந்துவிட்டதுன்னு...'' ஆங்...சேர்... வாங்க... அதான் பாவம்... அந்த... ஊனமுற்றச் சின்னப்புள்ள... த்சு... பாவம்... எனிவே... நல்லது சேர்... அது இருந்து உலகத்தில என்னா சாதிக்கப் போறது, அந்த ஜீவனுக்கு ஒரு நல்ல விடுதல... நீங்க... அதுவுடைய ஆத்மாவுக்கு ஒரு சந்தோசத்தக் குடுத்து ஒரு புண்ணியத்தத் தேடிக்கிட்டீங்க சார்... என்னா செய்ய... பாவம் ஏழ மக்கள்... புவர் கேர்ள்... புவர்... பேரண்ட்ஸ்''

ஒரு உயிரற்ற என்ஜினைப் போல, என்ஜினில் ஏறினார். லெஸ்டர் அவரைத் தேற்றினார்.

இது ஆத்மார்த்த உறவு, ஆத்மார்த்த பாசம், ஆத்மார்த்த பிரிவுத் துயர். இதற்கு உடல் ஒரு பொருட்டு அல்ல. எப்போதோ எந்த ஜென்மத்திலோ விட்ட குறை. இந்த ஜென்மத்திலும் அதைத் தொட்ட குறை. - இப்படியாக நினைத்தார் குலரட்ன. ரயில் அவருடைய நசிந்து போன உணர்வுகளைப் புரிந்து கொள்ள நேரமின்றி ஓடிக் கொண்டிருந்தது.

மீண்டும் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி ஓடிவந்த ரயில் வழமையான முறையில் மக்களைச் சுமந்து கொண்டு நகர்ந்தது. ஆனால் அதன் பிரதான ஓட்டுனரான நமது குலரட்னவின் உள்ளம் வித்தியாசமான உணர்வுப் பயணிகளைச் சுமந்து ஓடிவந்து கொண்டிருந்தது.

ரயில் நானுஓயாவை அடைந்து அந்த நிலயத்தைத் தாண்டி கிரேட் வெஸ்டர்ன் நெருங்கிய போது கைகாட்டி விழாமல் நின்றது. ரயில் நின்றது.

கீழே இருந்து ஏதோ ஒரு எதிர்த்திசை ரயில் வருகிறது. ஐந்து நிமிடங்கள் நிற்க வேண்டும்.

இந்தத் தற்காலிக யந்திரமனிதராகிய குலரத்னவின் கண்களில் அந்த ஊர்வலம் கண்ணில் பட்டது. ஒரு நடுத்தரமான பிரேத பெட்டி. நூற்றுக்கும் சற்றுக்கூட அல்லது குறைவான தோட்ட மக்கள்.

'குலரட்ன எழுந்து தலைதாழ்ந்து மௌனமானார். அந்த பிரேத ஊர்வலத்துக்கு மரியாதை செய்யும் முகமாகத்தான். 'இந்த ரயில் கைகாட்டி இயங்காமல் நின்று விட்டதே!' இப்படி நினைத்தார்.

அவருடைய ஆத்ம பந்தம் தனது கடைசிப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருந்தது. இறங்கி ஓட முடியாத மனிதராக நின்றார். அந்த கர்மயோகி குலரத்ன சிலையாக நின்றார். எப்போதோ முதன் முதலாகப் பார்த்து கைகாட்டிய இந்த ஜீவனின் மேல் இப்படி ஒரு பந்தமா?

'இவ்வளவு மென்மையான, ஒரு வகையில் பலஹீனமான மனதை வைத்துக் கொண்டு ரயிலோட்டியாக இருப்பது எனக்கு பொருத்தமான செய்கையல்ல' - என்றும் அவர் நினைத்தார்.

* * *

"நகரும் நாட்களில் பெரும் சாம்ராஜ்யங்களெல்லாம் வீழ்ந்திருக்கின்றன" என்றதொரு ஆங்கில வாசகத்தை அந்த நூலிலிருந்து வாசித்துக் கொண்டிருந்தார்.

மனைவி நந்தாவதியுடன் புத்த பகவான் முன்னிலையில் நின்று பூஜை செய்யத் தொடங்கினார். தெய்வங்கள் படத்துக்கு சற்று தள்ளி அந்தப் படம். ஊனப் பெண். சின்னப்பதுமை. இளம்பச்சை கவுன்போட்டு சிரித்த நிலையில்! தெய்வீகச் சிரிப்பு. கைகாட்டி நிலையில் பாயில் அமர்ந்து! அவருடைய ரயில்வே வாழ்க்கையில் நிரந்தரமாகி நெஞ்சுக்குள்ளும் அழியாத சித்திரமாகிவிட்ட 'கைகாட்டி' ஆத்மார்த்த கைகாட்டி!

★

# சந்தன வாசம்

மதுரை ரயில் நிலையம் மக்கள் வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட நிலையில் வழமைக்கு மாறான கூட்டம்.

இடிபாடுகளுக்கிடையே முண்டியடித்து ரயிலேறி 'அப்படா' என்று ஆசுவாசத்தோடு உட்கார்ந்தான், கார்த்தி.

முன்னால் இருந்த பெரியவரைப் பார்த்து ஒரு அரைச்சிரிப்பு. ஆய், வூய் என்ற சத்தங்கள். போர்ட்டர்கள், தள்ளுவண்டிகள், ரயில்கள் ஓட்டங்கள் பற்றிய ஒலிபரப்பு அறிவிப்புகள். ஆண்கள் பெண்கள், குழந்தைகள் என்ற பயணப் போராட்டம்.

அமர்க்களப்பட்ட மதுரை ரயில் நிலையத்தின் அன்றாட வாழ்க்கையில் அது ஒரு தொடர்ச்சியான வேக அலைகளின் துளி. கோயம்புத்தூர் ரயில் ஊர்ந்தது. 'அப்படா' மீண்டும் ஒரு ஆசுவாசம்.

ஒருமுறை தன் 'டிக்கட்டை'த் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இன்னொரு சந்தேகம் வந்தது. டிக்கட்டை எடுத்து வாசித்துப் பார்த்துக் கொண்டான். பழனி என்றிருந்தது. சரி... பையில் திணித்து சொருகிக் கொண்டு தனது பயணப்பையை ஒழுங்குபடுத்தினான்.

கடகடவென்று ரயில் தன் வழமையான வேகத்துக்கு வந்து விட்டது... சுமார் எழுபது மைல்களுக்கு மேல் போக வேண்டும் பழனிக்கு. இடையில் திண்டுக்கல் ரயில் நிலையம்.

மதுரை மாநகரத்தைத் தாண்டி ரயில் ஓடிக் கொண்டிருந்தது. பசுமையான வயல் வெளிகள். பரந்து விரிந்த சமுத்திரமாகக் காட்சியளித்தது.

பழனியாண்டவரைத் தரிசிக்கப் போகும் உற்சாகம் கார்த்தி மனதில் உருவாகியிருந்தது.

அந்த இளைஞனின் மனதில் பக்திக்குப் பதிலாக ஒரு கிளு கிளுப்பான மகிழ்ச்சியே இருந்தது.

பக்கத்து ஆசனத்தில் அமர்ந்து கீர்த்தனை படிக்கும் பெரியவர், அதற்கடுத்து நாலைந்து அங்கத்தினருடன் கலகலவென்று சிரித்துப் பேசும் கிராமத்துக் குடும்பம்.

“எதுக்குப் போரிஹ”

“நாங்க திண்டுக்கல் போரமுஹ”

“நீங்க...”

“நாங்க மலைக்கு... இந்த வாட்டி தம்பிக்கு மொட்ட தனக்குப் பின்புறம் ஆசனத்திலிருந்து வீணை இசை ஒன்று மிதந்து வந்தது. யாரோ ஒலிப்பதிவு நாடாவைப் போடுகிறார்கள். ‘கீரவாணி’ ராகத்தில் ஒரு அற்புதமான தாளத்துடன். அந்தச் சூழலின் சுகத்தை, கடகட ரயில் பெட்டிக்குள் கார்த்தி அனுபவித்துக் கொண்டே, தன் பாக்கெட்டில் இருக்கும் இருப்புப் பணத்தை எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

பழனிக்குப் போனாலும் பர்ஸை உத்தரவாதம் செய்யும் பழக்கம் அவனுடையது. அதில் எப்போதும் ஒரு கண்ணுறங்காத கவனம். கொழும்பிலிருந்து விமானம் ஏறி வந்து ஏழுதினங்கள். தொட்டுத் தொட்டு செலவழித்ததன் காரணமாக மணிபர்ஸ் இன்னும் இளைத்து விடாமல் இருந்தது.

தன்னை நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளும் விடயங்களில் வரவு செலவு என்பது முதலிடம் வகிக்கும். எதிர்காலம் எப்படியோ என்று தீர்மானிக்க முடியாத நடுத்தரவர்க்க இளைஞன் என்பதால் அது அவனுக்குத் தேவையான அம்சம். ஓடும் தென்னை மரங்களும் வயல் வெளிகளும், சின்னச்சின்ன வீடுகளும் அரச கட்டிடங்களும் ரயில் இசைக்கு ரசிகக் கூட்டங்களாக...

* * *

பழனி வீதிகளில் சுட்டெரிக்கும் வெய்யிலில் பயணப் பையுடன் நடப்பது சற்று சிரமமாகவும், வித்தியாசமான அசௌகரியமாகவும் இருந்தது.

ஏதாவது ஒரு கடைக்குள் நுழைந்து விட வேண்டும் என்று தோன்றியது.

"ம்... வாங்க... வாங்க வாங்க... வாய் நிறைய சிரிப்புடன் அழைத்தார் அந்த நடுத்தர வயது மனிதர். நெற்றியில் திருநீறு சந்தனப்பொட்டு. வருவோரைக் கவரும் வாய்மொழி. உங்களுக்காகப் பணி செய்திடத் தயாராகவிருக்கின்றோம் என்ற கனிவுப் பார்வை. 'லபக்'கென்று நுழைந்தான் கடையினுள். பயணப் பையினைத் திறந்து டவலை எடுத்துத் துடைத்துக் கொண்டே,

"இந்த செருப்பை இங்கே...."

"வையுங்க... வைங்க... தாராளமா... பத்தரம்மா இருக்கும்."

"ரொம்ப நன்றிங்க" என்ற கார்த்தி அந்தச் சின்னக்கடையின் குறைவான வசதிகளைக் காயப்படுத்தாமல், உடம்பைத் துடைத்துக் கொண்டான்.

"டேய்... அய்யாவுக்கு சிட்ட போடுறா..."

படபடவென, ஒரு சிட்டை போட்டு சாமான்களைக் கட்டினான், கடை வேலைக்காரன்.

கண்சிமிட்டு நேரத்தில் சிட்டை கைமாறியது.

"இம்... இந்தாங்கோ... நம்மைக் கடைக்கு வந்திட்டுப் போனாவே ஆண்டவன் அருள்... நிச்சயமாக கெடைக்கும்."

சிட்டையில் அறுபத்தெட்டு ரூபாய் என்றிருந்தது. நமது நாயகனாகிய பழனி யாத்ரீகர் கார்த்திக்கு சுரீர் என்று மனதைத் தைத்தது. தயக்கம், அதிர்ச்சி, ஆதங்கம், வெறுப்பு போன்ற தாழ்வுணர்வுகளால் தாக்கப்பட்டு தனது பணப்பையைத் திறந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தான்.

அப்படிக் கொடுக்கும் போது அந்தப் பத்து வயதுச் சிறுமி சற்று பரிதாபத்துடன் கடையின் ஓரத்தில் நின்று கடை முதலாளியைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவதானிக்கத் தவறவில்லை.

"இந்தா புள்ள 'ருக்கு'... ஐயாவை மலைக்கிக் கூட்டிக்கிட்டு போயி பத்தரமா கொண்டு வந்த வுடு... தெரியுமோ" என்றார் கடைக்காரர்.

இந்த வார்த்தையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பாத கார்த்திக் சற்று வெளியே வந்து வானத்தைப் பார்த்தான். வானத்தின் மேற்கு முனையில் கொஞ்சம் முகிற்கூட்டம். ஆமாம் தூரத்து முகிற்கூட்டத்தின் நகர்வில் நம்பிக்கை வைப்பது போல வெறுமைப் பார்வை.

"வாங்கண்ணெம் போவம்" அந்த சின்னப் பெண் தயாராகத் தன் முன் வந்து நின்றாள். சற்று பழுப்பேறிய தலை. நெற்றியில் வந்து விழும் கருமுடிக் கூட்டம். ஊதாக்கலர் கவுன். அதன் கைப்பகுதி கிழிசல் கண்டிருந்தது. கள்ளமில்லா முகம். கார்த்திக்கு இந்த சின்ன வழிகாட்டி அந்தக் கடைக்காரரைவிட ஆயிரம் மடங்கு பெரிதாகத் தெரிந்தது.

"தாங்கண்ணே என்று டிராவலிங் பேக்கை வாங்கக் கைநீட்டினாள்.

"நானே வச்சிருக்கேன்" - அந்த சுமையை அவளிடம் கொடுக்கத் தோன்றவில்லை.

மலையேறும் பணி ஆரம்பமானது.

எங்கும், எத்திசை நோக்கினாலும் பக்தர் கூட்டம் பரவி, வியாபித்து சூழலைக் கைது செய்து கட்டுக்குள் வைத்திருந்தது. மல்லிகை மணம் ஒத்தூதிய நிலையில், அந்த மனச்சுகத்தில் வேகமாக படிகளில் கால் ஊன்றினான்.

தனக்கு முன்னே போகும் கன்னடத்துக்காரரின் மொழி நடையை சற்று ரசிக்கத் தொடங்கினான்.

"எங்க இருக்க..." என்று சிறுமியைப் பார்த்துக் கேட்டான்.

“இங்கதான்”

“பள்ளிக்கூடம் போகலியா”

“போறேன் - பதில் சுருக்கமாகவே இருந்தது.”

எப்படியோ சின்னச் சின்ன உரையாடல் சகிதம் மலைக்குப் போய்ச் சேர்ந்தான்.

“ஐயா வாங்க... வாங்க... வாங்கோ... என்ற சத்தங்கள். மொட்டை போட கூப்பிடும் முடிதிருத்தும் கலைஞர்கள்.”

“எங்கே போவது யாருடைய பக்கத்தில் போய் உட்காருவது என்ற திண்டாட்டம்.

ஒருவாறு பையை சிறுமியிடம் கொடுத்துவிட்டு உட்கார்ந்தான்.

“உக்காருங்க உக்காருங்கோ...”

மொட்டை போடும் படலம்.

“அப்பா, மலைக்கு வர்ரதுக்குள்ள” முனகினான் கார்த்திக்.

“வெளியூரு மாதிரி இருக்கு. சிலோனா, சிங்கப்பூரா?”

“சிலோன் தான்”

“ஐயாக்கிட்ட நூறு ரூவா வாங்கில”

“நூறு ரூபாயா”

“பின்ன மொட்டன்னா... சாதாரண மொட்டயா... பழனி மொட்டயில்ல.”

"என்ன... என்னா... த்சு கார்த்திக் ஆடிவிட்டான்.

"என்னய்யா சொல்லுங்க" நூறு ரூவா குடுக்க ஏலாதா... சரி அப்புடின்னா... இம்... எனக்கு வேல இருக்கு" என்று சொல்லிக் கொண்டே மற்ற யாத்திரிகர் பக்கம் போய் விட்டார்.

நமது நாயகன் செய்வதறியாது உட்கார்ந்திருந்தான். தலையில் ஒரு பகுதி முடி எடுக்கப்பட்டிருந்தது. பரிதாப நிலையில் உக்கார்ந்து சிந்திக்கத் தொடங்கினான்.

இலேசாகக் காற்று வீசியது. பக்கத்தில் நிற்கும் சிறுமியின் தலைமயிர் அசைந்தாடியது.

"ம்...சரி... சரி... சீக்கிரம்" என்று சொல்லி மீண்டும் முடிதிருத்துபவரை அழைத்தான்.

"என்னாயா... எங்குளுக்கு இருக்கிற வேலைக்கி... அந்திக்குள்ள எத்தன பேர பாக்குணும்"

பட, படவெனக் காரியங்கள் நடந்தன.

நூறு ரூபாய் நோட்டு ஒன்றுக்கு விடை கொடுத்து விட்டு நகர்ந்தான். சிறுமியின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை, கம்ப்யூட்டர் பெண் மாதிரி.

தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு என்று பையிலிருந்து எடுத்து வைக்க உதவினாள்.

***

"கார்த்தியின் மனோநிலையில் பழனியாண்டவராகிய ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமியை ஏதோ ஒரு சம்பிரதாய

நிலையில் பூஜைத் தட்டுகளைக் கொடுத்து வணங்கி வாங்கி விட்டுத் திரும்பினான்.

மீண்டும் யந்திரமாகிய நிலையில் திரும்பி கீழ்நோக்கிய் பயணம். கீழே வந்தவுடன் ஒரு ஐந்து ரூபாயை எடுத்து அந்தச் சிறுமியிடம் கொடுத்தான்.

"ம்... வேணாண்ணே... இருவது ரூவா குடுங்கோ"

"... இருவது ரூவாய்க்கு நீ என்னா வேல செஞ்சிட்டே... வாங்குறதுன்னா வாங்கிக்க இல்லாட்டி போ"

"குடுத்தா குடுங்க... இல்லாட்டி... அந்தக் கடயில இருக்க ஒங்க பொருள எடுத்துக்கறன்."

பகீரென்றது கார்த்திக்கு. 'டையில சப்பாத்து தான இருக்கு.'

'இம்...!'

சற்று மௌனம். இருவருக்குமிடையில் ஒரு கயிறிழுப்பு மௌனம். மௌனத்தை கார்த்திக்கே கலைத்தான்.

"சரி... இந்தா ஆள வுடு" என்று இருபது ரூபாயை நீட்டி விட்டுக் கடைக்கு வந்தான்.

பழனி சந்தனமணம், மல்லிகை வாசம், இலேசாக வீசிய காற்று, கண்ணுக்கினிய ஆலயக்காட்சிகள் எல்லாமே ஜட நிலையில்...

* * *

மொட்டையடித்த நிலையில் வெளிப் பார்வைக்கு நிறைவான பக்தனைப் போல ரயிலில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்த கார்த்தியின் மௌனத்தைக் கலைத்தார் ஒரு பெரியவர்.

எதிர் ஆசனப்பெரியவர் கார்த்தியை வளைத்தார்.

“என்னா தம்பி மலைக்குப் போயி வர்ராப்ல.”

“ஹாம்மா...” சற்று வெறுப்புடன் பதிலளித்தவனை அவர் விடவில்லை.

“என்னா தம்பி ஆண்டவன வேண்டிக்கிட்டு வர்ரவங்க, ரொம்ப உற்சாகமா இருப்பாங்க... நீங்க... ஏதாவது சொந்தப் பிரச்சின...”

“இல்லல்லங்க.... அப்படி ஒன்றுமில்ல... அலட்சியமான பதில். மிஞ்சியிருக்கிற ஐம்பது ரூபாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். எப்படியோ அண்ணன் வீட்டுக்குப் போய் மற்றதைப் பார்த்துக் கொள்வோம்.

“தம்பீ... என்னாவாயிருந்தாலும்... அவெங்கிட்ட பாரங்குடுத்துடுங்கோ.”

“ம்... பாரங்குடுத்திட்டேன்... காசு... முடி... எல்லாத்தயும் பாரங்குடுத்துட்டுத்தான் வாரேன்” - கார்த்தியின் வெறுப்புமிகும் வார்த்தையிலிருந்து ஏதோ ஒன்றைப் புரிந்து கொண்டவரைப் போல சிந்தித்தார்.

“பாரு தம்பீ... இந்த ஒலகத்துல இருக்கிற கடவுள் தலத்துல ஒன்னொன்னிலயும், ஒன்னொன்னு உண்மை இருக்கு! அதப் புரிஞ்சிக்கிட்டாத்தான் நாம மலைக்குப் போயி வந்ததா அர்த்தம். இல்லாட்டி பலன் கெடயாது”

என்று சொல்லிவிட்டு கார்த்தியைப் பார்த்தார். அவன், இவர்.சொல்வதைக் கவனமாக அவதானிக்கிறானா என்பதை ஆராய்ந்தார்.

திருப்தியுடன் தொடர்ந்தார்.

“தம்பி... பரதேசித்தனத்துக்கு ஒரு பக்தியான, ரொம்ப உச்சியான உதாரணந்தாம் பழனியாண்டவரு. நம்ம காலம் பூரா வசதிக்காகப் போராடுறோம். சுகத்துக்காகப் போராடுறோம். கெடைக்கிறதுக்குப் போராடுறோம். அதெல்லாத்துலயும் ஒரே விதமான வெளியோட்டம். இதுக்கு மாற்றீடா ஒரே நாளைக்கு நாம இழப்புக்காகப் போராடுணும். அதுக்கு பழனி ஒதவுது. கெடச்சத எடுத்துக்கிட்டு சந்தோசமா வர்ரது எல்லாத்துக்கும் முடியும். ஆனா, இழக்க வேண்டியத விட கூடுதலா இழந்திட்டு சந்தோசமா வெளிய வர்றதுக்கு ஆண்டவரு அருள்வேணும்!” என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்.

கார்த்தியின் மனம் ஆற்றாமையிலிருந்து மீண்டு வந்து கொண்டிருந்தது. கடகடவென்ற ரயிலோட்டமும் மக்கள் சத்தமும், சந்தன மணமும், மல்லிகை வாசமும், ஏன் அந்த தினத்து இயக்கங்கள் அனைத்துமே அர்த்தமுள்ளதாகத் தோன்றியது.

☆



# கம்ப்யூட்டர் கதை

அந்தக் கலாசாலையில் ஒரு நாற்பது பெண்மணிகள். ஓ.எல்., ஏ.எல் என்று படித்தவர்கள். அநேகமானோர் ஏழைப் பெண்பிள்ளைகள்.

என்றாலும் அவர்கள் உடை நடை, செயல்பாடுகளில் ஏழ்மை தெரியவில்லை.

“என்னா வசந்தி” - என்று மோகனா கூப்பிட்டாள்.

“சொல்லு” - என்றாள், வசந்தி கணனியின் கீபோர்டைத் தட்டிக் கொண்டே, ஆமாம் வசந்தியின் ஆசை இப்போது தான் நிறைவேறியுள்ளது.

“எல்லாத்தையும் ஃபீட் பண்ணிட்டியா” - மோகனா.

“அப்ட்டு டேட்டா - ஃபீட் பண்ணிட்டேன்” கிருஸ்ட்டி சேர் சொல்லிக் கொடுத்த ஆங்கிலம் ஒருவாறு வேலை செய்தது. அந்தக் கலாசாலை இயக்குனர், இலேசாக ஒரு காலிங் பெல் போன்ற மென்மையான விசையை

அமுக்கினார். மணி ஐந்து என்பதை அறிவித்து அன்றைய பாடத்தைப் பூர்த்தி செய்கிறோம் என்று சொல்லாமல் சொன்னார், “சரேர், கட, புடா’ என்ற சத்தங்களுடன், மாணவிகள் அனைவரும் எழுந்தனர்.

‘சொஃப்ட்வெயர்’ என்ற கணனிப்பகுதியின் பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் எதிர்காலக் கனவுகள் பிரும்மாண்டமானவை.

அத்தகைய நிலையில் முன்னணி வகிப்பவள் வசந்தி.

வீட்டுக்குப் போய்ச் சேர ஏழு மணியாகி விட்டது.

“என்னா வசந்தி... ஒவ் வேலயெல்லாம் அப்புடியே கெடக்குது. நாளைக்கு வூட்ல இருந்து... துணிமணி எல்லாந் தொவச்சி காயப்போட்டுட்டு எங்க போறதுன்னாலும் போ” - அம்மா அதட்டலாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

வசந்திக்கு மூளை வேலை செய்யவில்லை.

அவளுடைய நினைவுகள் எல்லாம் இன்று மாலை ‘மேடம்’ சொன்ன புதிய விடயம். அதாவது ‘மெட்ச் புராசசிங்’ பற்றி கூறிய விளக்கம். அதை விளங்கிக் கொள்ள முயன்றாள். மேடத்திடம் மீண்டும் விளக்கம் கேட்டாள். ஆனால் ‘மெட்ச் புராசசிங் பற்றிய அடிப்படை விடயம் அவள் மனதை எட்டவில்லை.

“நீங்க வீட்டுக்குப் போயி ஒட்கார்ந்து அமைதியாக சிந்தன பண்ணுனீங்கன்னா இந்த புராசஸ்டைய தன்மைகள எட்ட முடியும்” என்று கூறியதை அசைபோட்ட போது தான் துணிமணிகளைத் துவைத்துப் போடு என்று அம்மா

கூறியது காதில் விழுந்தது. ஆனால் அவளுடைய புலன்கள் அந்தக் கட்டளையை உள்வாங்கி ஏற்றுக் கொள்ளவில்லை.

"ஏய் வசந்தி என்னா இப்புடி ஒக்காந்திருக்கே எந்திரிச்சி சாப்புட வா" - ஏனோ அம்மாவின் அதட்டல்கள் இன்று கர்ண கடூரமாக இருந்தன.

இந்த இரைச்சலை எதிர் கொள்ள முடியாத அவள் மனம் துவண்டது. எதிர்க்கவோ ஏற்றுக் கொள்ளவோ அவளிடம் சக்தியில்லை.

'சொஃப்ட் வெயர்' படிக்கும் அவள் மனம் மேலும் 'சொஃப்ட்' ஆகிவிட்டதா. ஒன்றுமே புரியவில்லை.

"இடியாப்பம் தேங்காய் பால் சொதி" - நன்றாகத் தான் இருந்தது. ஆனால் நம் வசந்திக்கு தேங்காய்ப பால் சொதி ருசிக்கவில்லை.

வசந்தியின் அப்பா கொழும்பு கம்பெனி ஒன்றில் காசாளர். தோட்டத்தில் கிளார்க்காக இருந்து ஐம்பது வயதில் ஓய்வு பெற்றுக் கொண்டவர்.

அம்மாவும் படித்தவள் தான். ஆனால் குடும்பப் பெண்ணாகி தான் கற்ற கல்வியை இல்லற தர்மத்துக்காகத் தாரை வார்த்துக் கொடுத்துத் தியாகம் செய்தவள்.

"ஏம்மா... நீங்க படிச்சவங்கதான"

"நா என்னுமோ படிச்சேன். ஒங்கப்பாத்தான் அதுக்கெல்லாம் அவருகிட்ட போயி ஓம்படிப்பு பத்தி கேளு."

"என்னம்மா ஹைலன்ட்ல படிச்சி ஜி.ஸி.இ. டெஸ்டு எழுதியிருக்கீங்கதானே."

"ஆமா அதுக்கு என்னா இப்போ"

"அதுல ஏதாவது ஒன்னாவுது ஞாபகம் இருக்கா?"

"இருந்து என்னா பிரயோசனம்"

சரி... ஒங்குலுக்குப் பிரயோசனப்படலேன்னா... எனக்காவுது பிரயோசனப்படுனும்னுதான் கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போறேன். நீங்க அதெல்லாம் படிச்சி என்னா செய்யப் போறேன்னு எந்த நேரமுங் கேக்குறீங்க."

"என்னுமோ எனக்கு அதெல்லாம் புரியலே. நாங்க படிச்சப்ப திருக்குறளு அம்பது. ராமாயணத்துல அம்பது. ஔவையர் நீதி வெண்பா எல்லாம் பாடமாக்குணும், அப்புறம்... அப்புறம்... எரித்மெட்டிக்... சுகாதாரம்... குடியியல்."

"போதும், போதும்" என்று காதைப் பொத்திக் கொண்டு வீட்டுக்குள்ளிலிருந்து வெளியே ஓடிவிட்டாள்.

"சரி நாளைக்கு அப்பா வாராரு. ஒழுங்கா வூட்ல இரு" - அம்மா வெளியே வந்து சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

"சரி மெல்ல பேசுங்க" - என்ற வசந்திக்கு மீண்டும் கம்ப்யூட்டர் நினைவுகள்.

இப்படியாக தாய்க்கும் மகளுக்குமான வீட்டு வழமையுடன் அந்தத் தினம் நிறைவேறியது.

* * *

அடுத்த நாள் அப்பா பகல் உடரட்ட மெனிக்காவில் வந்து இறங்கினார். கொட்டகலை ரயில் நிலையத்தில் அன்று ஏக கூட்டம்.

அப்பா அதுதான் மிஸ்டர் விஸ்வநாதன், நேர்த்தியானதொரு மனிதர். அவர் வந்ததும் வீடு அமைதியாக இருந்தது.

என்னா இன்னிக்கு ஆயும், மவளுஞ் சந்தோஷமா இருக்கிறாப்ல இருக்கு'' என்று கேட்டார்.

"ஆம்மா... அதுல ஒன்னுங் கொறச்சல் இல்ல''

அநேகமாக கணவன் மனைவி இருவருமே நகைச்சுவைப் பேர்வழிகள். விஸ்வநாதன் படித்தவராயிருந்தாலும் சாதாரண நாட்டுத் தமிழ் பேசி சிரிக்க வைக்கும் குணம் கொண்டவர். கிண்டலும் நையாண்டித்தனமும் அவருடன் கூடப் பிறந்த அம்சங்கள்.

"பாவம்!'' என்றாள் மனைவி சாந்தா.

"யாரு பாவம்'' என்றார் விஸ்வநாதன்.

"ஓங்களோட வேல செய்யு புண்ணியவாங்க''

"ஏன்டி''

"யாராருக்கு என்னென்னா பட்டப் பேரு வச்சீங்களோ, என்னென்னா கிண்டல் பண்ணுவீங்களோ, இம்புட்டு நாளு பொறுமையா ஓங்கள அங்க வச்சிக்கிட்டு இருக்காங்க பாருங்க; அதான் பாவம்னேன்... ம்... வயிசு வந்த புள்ள... ம் இந்த மாசத்தோட முப்பது வயிசு ஆவுது. ம்... அந்தக் கொரங்கு என்னுமோ ஏழு வயிசுன்னு நெனச்சிக்கிட்டு இருக்கு. நீங்களா... ஓங்குலுக்கு என்னுமோ ஆறு வயிசுன்னு நெனச்சி... சிரிச்சி வெளயாண்டுக்கிட்டு இருக்கீங்க... சூது வாது ஒன்னும் ஓங்குலுக்கு கெடயாது.''

“பேசுவடீ பேசுவ... இப்புடில்லாம் பேசுவன்னு தெரிஞ்சு தான் ஒரு ஏற்பாடோட வந்துருக்கேன். நாளைக்கி மாத்தளையிலிருந்து ஒரு பார்ட்டி வர்ராங்க... அதான் இந்தக் கேக்கு, வாழைப்பழம்... ம்... எடுத்து வையி.. வசந்திய நாளைக்கி வீட்லேயே இருக்கச் சொல்லு. இப்பா என்னா சொல்ற. எனக்கு தெரிஞ்ச ஃபிரண்டு. கொழும்புல வேலை செய்யுறாரு. அவரு மகன் ‘பிஸ்னஸ்’ செய்யுறாராம் மாத்தளையில. நாளைக்குப் பகல் சாப்பாடு” - என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். மனைவி ஞானம் சிலையாய் நின்றாள். கை ஓடவில்லை. கால் ஓடவில்லை. ‘எப்புடி இருப்பாங்களோ, வீட்டைப் பார்த்து என்ன நினைப்பாங்களோ, என்னா விரும்பி சாப்புடுவாங்களோ. நம்ப சமையல் அவுங்குளுக்கு ருசிக்குமோ. எல்லாம் முடிஞ்சு என்னா முடிவு சொல்வாங்களோ!’ - என்று நினைத்தவாறு சமையல் கட்டு நாற்காலியில் சிலையாக உட்கர்ந்திருந்தாள்.

விஸ்வநாதன் உடம்பைக் கழுவிக் கொண்டு சாரத்துடன், வெற்றுடம்பில் அந்த நீலநிற டவலைப் போர்த்தியவாறு வந்தார், சமையல் கட்டுக்கு.

அவரைப் பார்த்து மனைவி ஞானத்துக்குப் பெருமிதமாகத்தான் இருந்தது. மகிழ்ச்சியாகவும் இருந்தது. நாணமும் தோன்றியது.

மணி பதினொான்று இருக்கும்.

வீட்டின் முன் ஒரு நீலநிற வேன் மெதுவாக வந்து நின்றது. ஆண்கள் ஐந்து பேர். அதற்கும் கூடுதலாக பெண்மணிகள் பட்டுச் சேலை பளபளக்க இறங்கினார்கள்.

வசந்திக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.

இன்னும் அவள் 'மெட்ச் புராசஸிங்'கிலிருந்து மீண்டு விடவில்லை. கொட்டக்கலை வீட்டுத் தொகுதி. நடுத்தர வீடுகள். சற்றுத் தள்ளி இடைவெளிகள், தொடர்ச்சியாக. இவற்றில் விஸ்வநாதன் வீடு மத்தியில். சிறிய சாலை வழியாக வேன் வந்ததும், தூரத்து வீட்டிலிருந்து யாரோ எட்டிப் பார்ப்பது தெரிந்தது. அவ்வளவு தான். அது தவிர வேறு ஏதும் அங்கு கௌரவப் பிரச்சினை கிடையாது.

* * *

வசந்தியைப் பெண் பார்க்க மாத்தளையிலிருந்து வந்து போனது, பேசியது, கடிதங்கள் பரிமாறிக் கொண்டது எல்லாம் கனவு போல இருந்தது.

வசந்தியோ இந்தக் கம்ப்யூட்டர் கனவுலகத்திலிருந்து மீள முடியவில்லை, 'மெட்ச் ப்ராசஸிங்' ஒருவாறு அவளுக்கு விளங்கிவிட்டது. ஆனால் நடைமுறைக்கு அந்த முறை சற்று கஷ்டமாகவே இருந்தது.

இந்த நிலையில் அப்பாவும், அம்மாவுடன், மாமா, சித்தப்பா எல்லாம் சேர்ந்து பேசுவதும் கடிதம் எழுதுவதும் ஓரளவுக்கு வசந்திக்குத் தெரிந்தது. ஆனால் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

அப்பா குறிப்பிட்ட திகதியில் வருகை தந்து கம்ப்யூட்டர் வகுப்புக்குப் போக வேண்டாம் என்று கட்டளை போட்டு விட்டுப் போய்விட்டார். அவளுடைய கனவுகள் கேள்விக்குறியதாய்ப் போய்விட்டன.

* * *

"ஜே, ஜே என்று அந்த நாற்பது வயது மனிதருக்கும் வசந்திக்கும் திருமணம் நடந்தது, அட்டன் இந்து கலாச்சார மண்டபத்தில். மணப்பெண்ணாகி தாலியைக் கழுத்திய பிறகும் அவளுக்கு கணணி ஞாபகங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன. 'ம் பெண்ணாப் பிறந்து விட்டால் ஒருவனுக்குக் கழுத்தை நீட்டித்தானே ஆக வேண்டும்.'

கல்யாண ஆர்ப்பாட்டங்கள் நிறைவேறிவிட்டன. காலம் என்னமாய் ஓடுகிறது. கொட்டக்கலை, அட்டன், மாண்வி என்ற அடைமானங்களெல்லாம், பாவம்! வசந்தியை விட்டு ஒதுங்கி விட்டன. ஒருத்தனுக்கு மனைவியாகிக் குடும்பப் பெண்ணாய் மாத்தளை மாநகரத்தின் ஒதுக்குப்புறமான அந்தப் பெரிய குடும்பத்துக்குள் சங்கமமாகி விட்டாள்.

மாமா, மாமி, மைத்துனர்மார், மைத்துனிமார், போதாதற்கு கடையிலிருந்து வரும் மானேஜர், இவர்களுக்கெல்லாம் தேனீர் தயாரிப்பதற்கே தன் முழு பலத்தையும் செலவழித்தாக வேண்டும்.

சில வேளைகளில் மகிழ்ச்சி, சில வேளைகளில், வேதனை, அப்புறம் சோதனை, விரக்தி, அப்புறம் மகிழ்ச்சி. இப்படியாகத் திருப்திகளுக்கும் அதிருப்திகளுக்குமிடையே வாழத் தொடங்கினாள், வசந்தி.

இந்தத் துன்பங்களைத் தாண்டுவது எப்படி?

பேசாமல் தாய்வீட்டுக்குப் போய்விடுவோமா?

அப்புறம் நம் வாழ்க்கை என்னாவது?

கணவனின் அன்பும், ஆதரவும் கிடைத்தபோதும் அந்தப் பெண்ணின் மனதில் எங்கிருந்தோ ஒரு அழுகுரல் கேட்டது.

அம்மாவுக்குக் கடிதம் போடுவது இப்போதைய பொழுது போக்குகளில் ஒன்றாக இருந்தது.

தொலைக்காட்சி, வீடியோ என்று இருந்தாலும் அவளால் நிம்மதி பெற முடியவில்லை.

அவ்வப்போது பார்க்கும் நாடகங்களில் ஏதோ தற்காலிகமான ரசிகச் சுகம். அங்கொன்றும், இங்கொன்றுமாக, வெளியில் மகிழ்ச்சியாக இருந்து உள்ளுக்குள் போராடினாள். மத்திம கல்வியைப் பெற்று பகுத்தறிவுப் பெண்ணாக வளர்ந்த வசந்திக்கு வாழ்க்கை ஒரு சவாலாகவே இருந்தது.

தற்செயலாக அன்று வீட்டுக்குப் பெரிய பெட்டிகள் இரண்டு கொண்டு வந்து இறக்கப்பட்டன.

வசந்தி டி.வி.பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அந்தப் பெட்டியிலிருந்து ஒரு கம்ப்யூட்டர் செட் இறக்கப்பட்டது. வசந்திக்கு ஆச்சர்யம்.

மாலையில் கணவன் வந்ததும் கம்ப்யூட்டர் பற்றிக் கேட்டாள். பக்கத்துக் கடையில் இருந்தது. ரிப்பேர் நடக்கிறது. பாதுகாப்பாக இங்கே இருக்கட்டும் என்று அனுப்பியிருப்பதாகச் சொன்னார்.

"ஐயோ... அத ஃபிட் பண்ணுங்க. நான் ஒப்பரேட் பண்ணிப் பாக்குறேன்."

"சரி... அவுங்கட்ட கேக்குறேன். என்னா பண்ணி வச்சிருக்காங்கன்னு தெரியாது."

* * *

அடுத்த நாள் கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்திருந்தாள் வசந்தி. தன் வீட்டு விடயங்களை ஃபீட் பண்ணினாள். கணவன், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிமார். தன்னுடைய அன்றாடக் கடமைகள்.

அதை 'ப்ராசஸிங்' செய்து பார்த்ததும் அற்புதமான புதிய விடயங்கள் மூளைக்குள் வரத் தொடங்கின.

அப்பா, அம்மா, தம்பி - இவர்களுடைய தொடர்புகளுக்கும் கம்ப்யூட்டர் அனுபவம் அவளுடைய சிந்தனைக்கு திருப்தியான பதிலைத் தந்தது.''

காலங்காலமாக 'தமிழ்ப் பெண்' குலம் கணவன் வீட்டுக்குப் போய் பிரச்சினைகளை எதிர் கொண்டு பொறுப்புகளைச் சுமந்து குடும்பத் தலைவியாக மாறும் மரபு வாழ்க்கை வட்டத்தவள் தான் வசந்தியும்.

ஆனால் கலியுக கால ஓட்டத்திலும், காலம் தரும் கல்விச் சூழலிலும் 'மரபு' வாழ்வு முரண்பட்டது. இது வசந்திக்கு வந்த நடைமுறைச் சிக்கல்.

இந்த நடைமுறைச் சிக்கலில் தான் இந்தக் கம்ப்யூட்டரை இயக்கினாள், வசந்தி. நல்ல நண்பனாக, அவளுக்கு மரபு வாழ்க்கையின் அர்த்தங்களைப் போதிக்கும் 'ஆத்மநாதனாக' வந்து உட்கார்ந்தது.

குடும்பத்தில் எல்லாரையும் நம்பிக்கையுடன் பார்க்கத் தொடங்கினாள் வசந்தி.

தன்னோடு படித்த தோழி ஒருத்திக்குக் கடிதம் எழுதினாள். வசந்தி அந்தக் கடிதத்தில்,

அன்புள்ள தோழி மோகனாவுக்கு,

நலம். நலத்துக்கு எழுதவும்.

இப்பவும் இங்கு எனக்குக் கொஞ்ச நாட்களாகப் போர் அடித்தது. என்ன செய்வதென்றே தெரியாமல் போய் விட்டது. ஆனால் தற்போது உற்சாகமாக இருக்கிறேன்.

அன்று, 'மெட்ச் புராசஸிங்' பற்றித் தெரிந்து கொள்ள முடியாமல் விளக்கம் கேட்டேன். சொல்லியும் புரியவில்லை. ஆனால் அவற்றை நடைமுறை வாழ்கசையில் தெரிந்து கொண்டு கையாண்டு வருகிறேன்.

ஆகையால், உனக்கு ஒரு யோசனை, நம் தோழிகளுக்கும் சொல், கம்ப்யூட்டர் படித்து நமக்கு வேலை கிடைத்தால் நல்லது என்று ஏற்றுக் கொள்வோம். அப்படி கம்ப்யூட்டர் அறிவை வைத்துக் கொண்டு வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்படக் கூடாது.

வேலைக்காகத்தான் கம்ப்யூட்டர் கல்வி என்று தவறான முடிவுக்கு வந்து, வேண்டாத கற்பனையில் இறங்க வேண்டாம். கம்ப்யூட்டர் ஒரு எக்ஸ்ட்ரா கரிகூலம், அது நம் தொழில் செய்து கிடைக்கும் லாபத்தை விட, அதன் நல்ல விடயங்களை எடுத்து நம் மூளைக்குள் வைத்து தினசரி வாழ்க்கையில் போட்டுப் பயன்படுத்துவோம்.

உன் அன்புத்தோழி
ம. வசந்தா

* * *



# ஆடாத தொட்டில்

"ஏண்டி செவத்தி ஓம் புள்ளக்கி எப்புடி இருக்கு?" அந்த அகன்ற தேயிலை மரத்தின் மேல் கிடந்த மட்டப் பிரம்பை இடது கையால் எடுத்து அடுத்த மரத்துக்குப் போக நினைத்த மேரியின் இந்தக் கேள்வியைக் குத்திக் காயப்படுத்துவதைப் போல, கடுமையானதொரு ஊசிப்பார்வையை ஏவி விட்டாள் செவத்தி. மேரியின் கேள்விக்கு இப்படியான பதில்!

செவத்தியின் பத்தரகாளிக் குணத்தை அறிந்தும் அவள் மீது அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் ஒரேயொரு நட்பு - மேரிதான். "எப்புடிர்ரீ அந்தப் பெசாசோட பழவுற" - என்று அந்தத் தோட்டப் பெண்கள் மேரியைப் பார்த்துக் கேட்பதுண்டு.

"நானும் அவகூட பேசாட்டி, செவத்தி இந்த கல்லு, மண்ணு, மரம், கூட, கொழுந்து இது கோடத்தான் பேசணும். நம்பளால அந்தப் பாவம் என்னாத்துக்கு. அவுளும் நம்ப தோட்டத்துல ஒரு ஆளு தான" - இப்படி

மேரியின் பதில் அமையும். 'நம்ம தோட்டப் பெண்' என்ற மண் வாசனை மேரிக்கு மேலதிகமாகவே இருந்தது.

சாடைக் கண்ணால் செவத்தியைப் பார்த்தாள். செவத்தியின் கருப்பு விரல்கள் ஆவேசமாகத் தளிர்களை மேய்ந்து கொண்டிருந்தன.

"ஏய், எம்மேல கோவம் இருந்தா என்ன ரெண்டடி அடிச்சிப்புடு. இப்புடி அங்கிட்டுத் திரும்பிக்கிட்டு, மூனெலக்குமேல முத்தெலகாம்பெல்லாம் புடிங்கிப் போடாத" - பொறுப்பான தொழில் உணர்வுடன் பேசியவுடன் சரக்கென்று திரும்பி கூடையைக் கழற்றிப் பிய்த்துப் போட்ட கொழுந்துக் கூட்டங்களை வலது கையால் விலக்கிப் பார்த்த செவத்தி தன் தவறை உணர்ந்தாள். கூடையில் கிடந்த கொழுந்தின் மேற்பதிகளில் - முற்றிய இலைகள் யாவையும் பிரித்தெடுத்து வீசுவதில் ஈடுபட்டாள்.

அந்தத் தேயிலையை முடித்துவிட்டு அடுத்த நிரைக்காகப் போவதற்குத் தயாரான மேரி செவத்தியின் தலை நிமிர்வுக்காகக் காத்திருந்தாள். மூன்று இலைகளுக்கு மேலாக இருக்கும் இலைகளை அப்புறப்படுத்தும் செவத்தியினுடைய செய்கையில் இருந்த இயந்திரத்தனம் பக்கத்தில் நிற்பவளைக் கவனிக்க இடமளிக்கவில்லை.

தன் வயிற்றில் உதித்த அந்தக் குழந்தையை விட, இந்த தேயிலை சிசுக்களின் மேல் கொண்ட அக்கறை சக்தி வாய்ந்தது என்பதை அவளுடைய இயக்கங்கள் படம் போட்டுக் காண்பித்தன. செவத்தி தலை நிமிர்ந்தாள்.

"இங்கதான் நிக்கிறியா?" - என்று கேட்ட செவத்தியினுடைய முகபாவங்களை ஆழமாகப் பார்த்தாள்.

“நாநிக்கறதிருக்கிட்டும்! ஓம் புள்ள இப்ப எ...ப்...பு...டி... இ...ரு...க்...கு...?”

“அதெப்புடியோ கெடக்குது...ம்... பொறந்தன்னக்கே தலய திருவிப் போட்டிருப்பேன்”

“ஏய்... வாய அடக்கிப் பேசு... எதத்தான் பேசுறதீன்னு தெரிஞ்சிக்குணும்” - இப்போதுதான் மேரிக்குக் கோபம் வந்தது.

செவத்தி அவளை ஏறெடுத்துப் பார்த்தாள்.

“என்னா பாக்குற... ஓம்புள்ளன்னா கொன்னுருனுமா? யாரு புள்ளயும் யாருங் கொல்ல முடியாது... ஒனக்கு வளக்க முடியாட்டி எங்கிட்ட குடு. இந்த உச்சிமல தோட்டத்துல அப்புடி ஒன்னு நடக்குல... நடக்கவும் வுடமாட்டம்” - என்று சொல்லிக் கொண்டே செவத்தியை ஒரு முறைப்பு முறைத்தாள். எட்டாம் வகுப்பு படித்த மேரி தோட்டப் பள்ளிக்கூட மேடைப் பேச்சிலே வாங்கிய பரிசுகளையும், பத்திரங்களையும் இன்னும் வைத்திருக்கிறாள். பாட சாலை நிகழ்ச்சிகளில் ‘ஜமாய்த்த’ அனுபவங்களெல்லாம் இப்படியான நடைமுறை நிகழ்ச்சிகளில் நன்றாகவே சிந்தித்து நன்றாகவே பேச இடமளித்திருக்கிறது.

“இந்தா செவத்தி நீ ஓம் மனசுல என்னாதா நெனச்சுக்கிட்டிருக்கிற. எவனோ ஒருத்தன் தப்பு பண்ணிட்டுப் போயிட்டான்னா... அதெ நெனச்சி... இந்தத் தோட்டத்தயே மொறக்கிறதாக்கும். இந்தா பாரு இன்னொரு தரஞ் சொல்றேன். வளக்க முடியாட்டி எங்கிட்ட குடுத்திரு” - என்று வேகமாகக் கூடையைத்

தலையில் மாட்டிக் கொண்டு அடுத்த நிரைக்குப் போய்விட்டாள்.

இப்படிப் 'போடு, போடு' என்று போட்ட பின்னும் ஜீவனற்ற செவத்திப் படலம் தொடர்ந்து கொண்டுதானிருந்தது.

வேலை முடிந்து வெறுங்கூடையுடன் பிள்ளை மடுவம் நோக்கி ஓடிய அந்த யந்திரத்தாய் தன் ஆறுமாதக் குழந்தையை 'லபக்'கென்று இடது கையால் தூக்கி வைத்துக் கொண்டு தனது எட்டாம் நம்பர் லயம் நோக்கி ஓடினாள்.

இரண்டு பக்கமும் லயங்கள். சிறுவர்களின் வண்டி ஓட்டும் அழகு, பொன்னன் கங்காணியின் இடைவிடாத இருமல் - 'தூ' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து கொள்ளும் பெண்கள், மொந்து, மொந்து என்று காற்றடைத்த பந்தைத் தட்டிப் பார்த்துக் கொள்ளும் கரப்பந்தாட்ட இளைஞர்கள், ஓடிப்பிடித்து விளையாடும் சிறுமிகள், வீல், வீல் என்று கத்தும் குழந்தைகள், தூரத்தில் கேட்கும் சினிமாப்பாட்டு, 'புஸ்'ஸென்று 'ஜெக்சன்' குழாயினில் வந்து விழும் தண்ணீர் - இவற்றின் ஓசைகளிலொன்றோ, மொத்தமாகவோ செவத்தியின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை - அத்தனை அலட்சியம்!

வீட்டுக்குள் நுழைந்த செவத்தி குழந்தையை அந்தத் தொட்டிலில் போட்டுவிட்டு நிமிர்ந்தாள். பானையில் மாவு தீர்ந்து விட்ட ஞாபகம் வந்தது.

தான் பிறந்ததும் கண்ணை மூடிவிட்ட பெற்றோர்களை நினைத்துப் பார்த்துக் கொள்ளவும் செவத்திக்கு அவர்களுடைய முக வடிவங்கள் தெரியாது.

போன வருடம் இறந்து போன அவள் பெரியப்பா மட்டுமே தன் சொத்தாக இருந்தது.

இரவு மணி ஒன்பதுக்குமேல் இருக்கும். அந்த ரொட்டியை விழுங்கி விட்டுப் படுத்தாள். குழந்தை 'வீல்' என்று கத்தியது.

"ச்ச்... சனியனே தூங்கு" என்று தொட்டிலுக்கு ஒரு அடி கொடுத்துவிட்டு, அதன் மேல் விளிம்பைப் பிடித்து பலமாக ஆட்டினாள். தொழிற்சாலைத் தேயிலை அரைக்கும் இயந்திரமாகிய வார்க்கர்ஸ் ரோலர் இயங்குவதைப் போலத் தொட்டிலின் அசைவுகள்!

கதவு, பட, படவென்று தட்டப்படும் ஓசை!

"யாரு?" என்று அஸ்கோ விளக்கை எடுத்துக் கொண்டு வந்தாள்.

"நாந்தான் தலவரு... தொரம்மா கதவு"

கதவு திறக்கப்பட்டது.

செவத்தி விழி பிதுங்க நின்றாள்.

"ஏம்மா செவத்தி எங்குலுக்குன்னா நேரமில்ல... இந்த... அவந்தான் வேலுப்பய நாவலப்பிட்டில மூட்ட தூக்கறானாம். வந்தான்"

"எந்தப்பய வந்தா எனக்கென்னாண்ணே...!"

"இந்தா, நாம் பேசி முடிஞ்சட ஒடன்னே பேசு... அவன் ஆறு மணிக்கே வந்தான். நாயம் பேசினோம். ஏதோ ஒன்னோட கொஞ்ச நாளு இருந்திட்டு ஓடிட்டான். திருந்தி வந்திருக்கான். நீயோ புள்ளய வச்சிக்கிட்டு கஷ்டப்படறே..

ஒரு மாறி பேசி முடிச்சிருக்கோம்... இப்ப என்னா சொல்ற... இதுல மேரியும் ரொம்ப முயற்சி எடுத்திருக்கு...ம்...''

''கோவிச்சுக்காதீங்கண்ணே... ஆளவுடுங்க.. வேணும்மின்னா இந்தா உள்ளுக்கு தொட்டில ஒன்னு கெடக்கே அதைத் தூக்கிட்டுப் போச்சொல்லுங்க.''

''அப்புடி சொல்லாத... நல்லா... யோசி...''

''நல்லா யோசன பண்ணித்தான் பேசறண்ணே''

''ஏதோ தவறு செஞ்சிட்டு ஓடிட்டான்... இப்பு ஒரு சந்தர்ப்பம் கெடக்கிறப்ப...''

''சரின்னே... இந்த ஆளு இனிமேல ஓடமாட்டாதுன்னு என்னா நிச்சயம்... அப்புடி ஓடிட்டா... எனக்கு என்னா பதிலு சொல்லுவீங்க?'' இப்படிக் கேட்டதும் மாரித் தலைவர் ஒரடி பின் வாங்கினார்.

''செவத்தி! அப்ப எதுக்கும் யோசன பண்ணு'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

உச்சிமலைத் தோட்டம் இந்த உரையாடலை அன்றைய தினத்தின் முடிவுரையாக எழுதிவிட்டுத் தூக்கத்தை தழுவியது.

தோட்டம் என்ற பாதுகாப்பான வேலிக்குள் செவத்தியும் வாழ்ந்து கொண்டிருந்தாள். தன்னை யறியாமல், தனக்கு நேர்ந்த கதியை நினைத்து அழாமல் மரத்துப் போன அவளுடைய வாழ்க்கைக்கு கொழுந்துக் கூடையொன்று மட்டுமே உயிரோட்டத்தைத் தந்து கொண்டிருந்தது. அவள் பறித்துப் போடும் தளிர்களும் அரைக்கப்பட்டு, பதம் பெற்று வாசனை கொண்டன.

“இந்தா ஒன்னத்தான் செவத்தி... ஓம்புள்ளக்கி ரொம்ப வருத்தம் வந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க... லொரி ஆஸ்பத்திரியிலிருந்து நாவலப்பிட்டிக்குப் பொறப்பட்டுக்கிட்டு இருந்திச்சி. அதில ஓம் புள்ளய அனுப்பிட்டாங்க” - இப்படிச் சொன்ன மேரி ஒரு பூகம்ப ஓலத்தை எதிர்பார்த்தாள் செவத்தியிடமிருந்து, ஒன்றுமே நடக்கவில்லை. மிக ஆறுதலாக செவத்தி தன் கூடையை இறக்கி வைத்தாள். வந்தவளுக்கு எரிச்சல் வந்தது.

“ஹ்ம்... நீல்லாம் ஒரு பொம்பள, இதச் சொல்ல ஒங்கிட்ட வந்தம் பாரு. எம்புத்திய காஞ்ச செருப்பால அடிக்கிணும்.” மீண்டும் ஒரு ‘ஹ்ம்’ போட்டு கழுத்தைத் திருப்பிச் சொடுக்கி விட்டுப் போய்விட்டாள்.

‘ஒரு வேளை, குழந்தை செத்துப் போனால் நல்லது என்று நினைக்கிறாளோ?’

பொறுத்திருந்து பார்பபோமே!

நாவலப்பிட்டி அம்மன் கோயில் கோபுரம் அடக்கமாகவே அமர்ந்திருந்தது. ஆனால் அம்மன் அடக்கமானதொரு ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பது போலவும் உணர முடிகிறது.

கோயிலுக்கு முன்னால் உயர்ந்து, விசாலமாயிருந்த வைத்தியசாலைக் கட்டிடத்துக்குள் மேரியும், செவத்தியும் நுழையும்போது மணி ஒன்றாகி விட்டது.

மேரியின் பின்னால் அந்த ஜடம், அதான் செவத்தி! அலட்சியமாக நடந்து போனாள்.

இவர்கள் போகவும் குழந்தை மரணமடையவும் சரியாக இருந்தது.

“செவத்தி” - என்று கலங்கிய கண்களுடன் மேரி தலைகுனிந்தாள். செவத்தி அமைதியாகவே இருந்தாள்.

அப்புறம் டாக்டர், தாதிகள், விசாரணைகள், விசாரிப்புகள் என்று தொடர்ந்தன.

நாளாந்தம் நடக்கும் நடைமுறைப் போராட்டங்களில் இதுவும் ஒன்று.

இதற்கிடையில் அந்த நாட்டாமை வேலு வந்துவிட்டான். பிள்ளைக்குத் தகப்பன் என்ற முறையில் எஞ்சியுள்ள சடங்குகளுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான்.

“டேய் வேலு... நீல்லாம் ஒரு மனிசன்” மாரித்தலைவன் அவனை ஏசிவிட்டு ஒதுங்கினார்.

“இந்த மாறிப் பயலுங்கல்லாம் தோட்டத்துக்குள்ள உடாதீங்கண்ணே” இப்படி ஒரு பேச்சும் காதில் விழுந்தது.

குழந்தையை நாவலப்பிட்டியிலேயே எளிமையான முறையில் அடக்கம் பண்ணியாகி விட்டது.

அப்படா! உச்சிமலை இப்போது அழகாக மூச்சுவிட்டது, தன்னுடைய புதல்வி ‘செவத்தி’ விடுதலை பெற்றாள் என்ற நிம்மதியில்.

அந்த லயத்தில் எல்லாருக்கும் செவத்தி பற்றி வெளிப்படையாகப் பேசிக் கொள்ள விதி அளித்த ஒரு சந்தர்ப்பம்,

“இனி எப்புடியோ போவுட்டும். எந்தப் பயிலும் லயத்துக்கு வராம பாத்துக்குவம்.”

“நல்லவளோ, கெட்டவளோ செவத்தி நிம்மதியா வேல செய்யிட்டும்... புள்ளயாவது, பூச்செண்டாவது. தொர சம்பளங் குடுக்குறாரு. சாப்பிட்டுக்கிட்டு நிம்மதியா இருக்கட்டும்.” மாரித்தலைவருக்கும் திருப்தி. அந்தப் பிள்ளைக்காகவே சமாதானப் பேச்சு நடத்தினார்.

அந்தக் குழந்தை இறந்து போன சம்பவம் மேரியின் மனதை மட்டும் உறுத்திக் கொண்டிருந்தது.

இரண்டொருவர் செவத்தியைப் பார்க்க வந்தார்கள். அழுதார்கள். வெளியே வந்ததும் “கல்லுமனசுக்காரி, நீ உறுப்புடவே மாட்ட” என்று சொல்லிவிட்டு போய் விட்டார்கள்.

மேரி எட்டு மணி வரை இருந்து விட்டுப் போய் விட்டாள். களைப்புடன் அந்தப் பூப்போட்ட பாயில் படுத்த செவத்தியின் கண்களில், தொங்கிக் கொண்டிருந்த அந்தத் தொட்டில்! ஏதோ வித்தியாசமான பார்வையுடன் வாய்திறந்த நிலையில் தொட்டிலை ஜீவனில்லாமல் பார்த்தாள். எங்கேயோ - தன் இதயத்தின் ஒரு மூலையில் ‘சுறுக்’கென்றது. மீண்டும் ஒரு ஊசி முனைத் தாக்குதல்.

மிக மெதுவாக - மிக ஆழத்தில் குத்தப்பட்ட அந்த மனவலி கட்டங்கட்டமாக மிதந்து மேல் நோக்கி எழுந்தது.

தலைவிரி கோலத்துடன், அந்த இருபது வயதுடைய - கண்ணங்கரேலென்ற செவத்தி தலையைத் தூக்கித் தொட்டிலைப் பார்த்தாள். குழந்தை படுத்திருப்பது போல அவளுடைய உணர்வுகளுக்குப் பட்டது.

அவளுக்குள் எங்கோ ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஈரமானதொரு படலம் அவள் உடம்பெங்கும் வியாபித்தது.

ஓவென்று அழவும் இயலவில்லை. நிம்மதியாகப் படுத்துக் கொள்ளவும் முடியவில்லை. தான் ஏதோ ஒரு பாதாளத்தில் இக்கட்டான நிலையில் விடப்பட்டிருப்பதாக உணர்ந்தாள்.

“அடிப்பேன், உதப்பேன், சனியனே, தூங்கு, தலயத் திருவுவேன், கொல்லுவேன், வீசுவேன்' - என்று அவளை மிகத் திருப்தியுடன் இயக்கிக் கொண்டிருந்த ஒரு துடுப்பு நீருக்குள் மூழ்கிவிட்டது. அவளுடைய வெறுப்பையும், கோபத்தையும், உமிழ் உணர்வுகளையும் ஏற்றுக் கொண்டிருந்த மண்டலம்...?

அவளின் தூங்காத இரவு! தூங்க வைத்த இரவு! ஒரு இயந்திர வாழ்க்கையை தூங்க வைத்துவிட்ட இரவு. வெளியே வந்து பார்த்தாள் இலேசாக விடிந்திருந்தது. செவத்தியின் சொருகிய கண்களால், அந்த லயத்து இயக்கங்களை உயிரோடு பார்த்தாள்.

இவ்வளவு சீக்கிரம் எப்படி நாவலப்பிட்டிக்கு வந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை.

பத்து மணி வரை நாவலப்பிட்டி தெருக்களில் அங்குமிங்கும் அலைந்தாள். அம்மன் கோயில் முன் நின்று அந்த வைத்தியசாலைக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்க்கும் போது, வேலு ஒரு கை வண்டியைத் தள்ளிக் கொண்டு வருவது தெரிந்தது.

ஓடிப்போய் அவன் முன்னால் நின்றாள். செவத்தியை எதிர்பாராத வேலு திகைத்து நின்றான்.

வண்டியைக் கோயில் ஓரம் தள்ளி ஒதுக்கிவிட்டு, "என்னா செவத்தி?" என்றான். பதில் இல்லை.

சிறிது விநாடியில் அவனுடைய வலது தோளைப் பிடித்து, அவன் மேல் சாய்ந்து 'ஓ'வென்று அழுதாள்.

"அழுவாத" என்றவன் அமைதியாக அவளைத் தாங்கிக் கொண்டான். செய்வதறியாது நின்றான்.

கோபுரத்தில் உலகத்தாய்! கீழே, தனக்குள்ளிலிருந்து பொங்கிவரும் வெள்ளத்தை வெளிப்படுத்தும் மனிதத்தாய். சின்னத்தாய்.

கோபுரத்துத் தாய் பேசுகிறாள்.

"சிறியதோ, பெரியதோ, கோபுரமோ, குடிசையோ, பருந்தோ, எறும்போ அனைத்தையும் நான் பரிபாலிக்கிறேன்."

இருவரும் உணர்வு வந்து திரும்புகிறார்கள்! அங்கே மேரி நின்றாள்.

"நான் ஓம் பின்னுக்கே வந்தேண்டி" என்று சொல்லிவிட்டு அமைதியாகக் கோபுரத்தைப் பார்த்தாள்.

மாரியும் அவளே! மேரியும் அவளே! நல்லமனம் படைத்தவர் அனைவரும் தெய்வப்பிறவிகளே! செவத்தியின் குழந்தை?

ஒரு தாயைப் பிரசவிக்கக் குழந்தை தன்னையே தந்தது.

☆



# அந்தரங்கப் பூக்கள்!

அழகிய இளம் நீல நிறக் "கார்டை" பார்த்துக் கொண்டிருந்த போது, இருபத்தைந்து வருடத்துக்கு முந்தின கல்லூரி வாழ்க்கை அலையலையாக என் எண்ணங்களோடு இணைந்தது. அந்த நாளைய ஞாபகங்கள் மிக அருகில் முகாமிடத் தொடங்கின.

மனைவி "காப்பி" கொண்டு வந்து நின்று கொண்டேயிருந்ததும் தெரியவில்லை தேயிலைத் தோட்டத்து தலைமை லிகிதரானாலும் அடிக்கடி காப்பி குடிப்பது வழக்கம். முதல் நாள் வந்த அழைப்பிதழைப் பற்றி இதுவரை மனைவியிடம் சொல்லவில்லை.

"கார்டை" அவளிடம் நீட்டினேன்.

"பழைய மாணவர் சங்கக் கூட்டம் - பரமேஸ்வராக் கல்லூரி - கண்டி" என்று உரக்க வாசித்தாள். அந்த மனைவியின் முன்னிலையில் நான் மிகச்சிறுவனாகி விட்டதைப் போல உணர்ந்தேன்.

மானசீக வாழ்வு மேலும் வளர்ந்து பரவத் தொடங்கியது. ஏதோ எழுந்தேன். உடுத்தினேன். இயந்திரத்தைப் போல புத்தகங்களை, பைல்களை அள்ளினேன். எப்படி ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை.

ஏனோ, மனம் கடந்த காலத்திலேயே பிடிவாதமாக நிற்க ஆரம்பித்தது.

நான் படித்த பரமேஸ்வராக் கல்லூரியின் நெடிதுயர்ந்த தோற்றம், நண்பர்கள், ஜோக்குகள், புட்பால், கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுகள், அந்த நிகழ்ச்சிகளுக்கு 25 வயதாகி விட்டது. இத்தனை மகிழ்ச்சிகளுக்கிடையே இதமானதொரு நெகிழ்ச்சி, "ராஜி" என்கிற ராஜலட்சுமி.

இருபத்தைந்து வருடங்கள். எங்கிருக்கின்றாளோ தெரியவில்லை. கம்பீரமானதொரு பெண்மை சாதாரண உடையில் மகாலெட்சுமி போல நாங்கள் எல்லோரும் ராஜலட்சுமியை ஒரு கௌரவமாய் பார்ப்போம். தெய்வீகத்தைப் போர்த்தின நட்சத்திரம்.

பள்ளிக்கூடச் சுறுசுறுப்பிலும், "பாஸ்" பண்ண வேண்டும் என்ற வேட்கைக்கிடையிலும் சில இதமான சந்திப்புகள், உரையாடல்கள். எதிர்காலக் கனவுகள்.

ராஜியைப் பற்றிய அந்த நினைவுகளெல்லாம் என் மனதிலேயே தங்கிவிட்டன. அதாவது ஆழ் மனத்தில் பதுக்கி வைக்கப்பட்டு விட்டன. கல்லூரியை விட்டு விலகியதும், சந்திப்புகளெல்லாம் திசைமாறி விட்டன.

மனைவி மஞ்சரியிடமும் ராஜியைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அழுத்தமான இளமைக் கோடுகள் அழியாது தங்கிவிட்டன. இதற்கிடையே சம்பிரதாய பூர்வமான வாழ்க்கை ரதம் எங்கெங்கோ அலைந்து ஒரு வட்டத்துக்குள் அடங்கி விட்டது.

"மிஸ்டர் பாலச்சந்திரன்...!" மானேஜர் மெதுவாக அழைத்தார். "எஸ், சார்" எழுந்து செல்லும் போது என் உடல் எனக்கே பாரமாக இருந்தது.

"பிரவுண் அன் கம்பெனியிடம், நம் "எஸ்டிமேட்டை" "அனலைஸ்" பண்ணிவிடுங்கள் என்று கூறிவிட்டு அவசரமாக எழுந்தார்.

"எஸ் சார்" என்று சொல்லிவிட்டு, என்று "லீவ் லெட்ட"ரையும், இன்விட்டேஷன் கார்டையும் நீட்டினேன். "ஆங் குட்" என்று லீவுக் கடிதத்தில் கையொப்பமிட்டு விட்டு வெளியேறி விட்டார்.

எல்லா ஆபீஸர்களுக்கும் வேலை அதிகம். எங்கள் தொழிற்சாலையில் அபிவிருத்தி வேலைகள் நடப்பதால் கொழுந்தை அடுத்த தோட்டத் தொழிற்சாலைக்கு அனுப்புகிறோம். டெலிபோனில் "ஹலோ கிளெண்டில்ட் ஹியர்" - கத்தினேன். பதில் விளக்கமாக வரவில்லை. கிணற்றுக்கடியிலிருந்து பேசுவது போல இருக்கவே ரிசீவரை பொத்தென்று வைத்து விட்டுச் சிந்தித்தேன்.

கழற்றப்பட்ட தொழிற்சாலை இயந்திரங்களுக்கு எல்லாம் "லிஸ்டு" தயார் பண்ண வேண்டும்.

புல்ஸ்கோப்பில் டிரையர், ரோலர், சிப்டர், டீ கட்டர், எக்ஸ்ட்டிராக்டர் என்று தலையங்கமிட்டு டைப் செய்து பேக்டரிக்கு அனுப்பிவிட்டு மீண்டும் சிந்தித்தேன்.

"பாக்டரி டெவலப்மென்ட் ஸ்கீம்" ஃபைல் பெரிதாகப் பயமுறுத்துவதைப் போல என்னைப் பார்த்தது. அதைப் பிரித்து சில விபரங்களைத் தயாரித்து விட்டுத் திரும்பினேன்.

"டைப்பீஸ்ட்" விமலா, குடிபெயர்ந்து செல்வோரின் விபரத் திரட்டை என் மேசைமேல் வைத்துவிட்டுச் சென்றாள். தலை சுற்றியது. அதை ஒவ்வொன்றாக ஒத்துப் பார்த்ததும் ஓவர்டைம் புத்தகம் என் முன்னால் விழுந்தது. சற்று "சேரி"ல் சாய்ந்து "ரிலாக்ஸ்" செய்து விட்டு மீண்டும் புரட்டினேன். பைல்களைப் புரட்டினேன்.

மிகக் கொடூரமான அன்றைய பொழுதை விரட்டிய கையோடு வீடு போய்ச் சேர்ந்து, பரமேஸ்வராக் கல்லூரியில் 'லபக்'கென்று நுழைந்து விட்டேன். மனைவி சாப்பாடு கொண்டு வந்தது. சாப்பிட்ட து, படுத்தது எல்லாமே கம்பியூட்டர் பாணியில்.

கண்டிக்கு மனைவியையும் வரச் சொல்லி எவ்வளவோ வற்புறுத்தினேன். மறுத்துவிட்டாள்.

"நாளைக்கு அந்த லட்சுமியும் பிள்ளைகளும் வீட்டுக்கு வருகிறார்கள். பாவம் நாளை கழிச்சு இந்தியாவுக்குப் பயணம். அவங்களுக்கு ஏதாவது செய்து

அனுப்ப வேண்டாமா? அவ மகளுக்கு இந்தியாவில மாப்பிள்ளை இருக்குதாம்'' - இப்படிச் சொல்லி விட்டு என் பதிலை எதிர்பாராமல் உள்ளே போய்விட்டாள்.

ஐந்து வருடங்களுக்கு முன் ரத்தினபுரியிலிருந்து வந்தவர்கள். அவளுடைய கணவர் ''ரப்பர்'' தொழிற்சாலையில் வேலை பார்த்து காலமாகி விட்டவர். இங்கே வந்து ஒரு சிறு வீடு ''காலனி''யில் ஐம்பது பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். தையல் தொழிலுமுண்டு. ஒரு சிறு காய்கறித் தோட்டம். ஐந்து பிள்ளைகள்.

மனைவிதான் எல்லா விபரமும் சொல்லுவாள். இலங்கையில் இந்த முறையில் பல குடும்பங்கள் பல இன்னல்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு இந்தியாவை நினைத்து ஆறுதல் அடைகிறார்கள். நான் கூட அப்படித்தான்.

பிரச்சினை, தொல்லைகள் வரும்போது ''நாளையே'' இந்தியா போய்விட வேண்டும். என்னையே அறியாமல், எனக்கே தெரியாத ஒரு அந்தரங்க திருப்தி.

அடுத்த நாள் அதிகாலை மூன்று மணி உற்சாகத்துடன் கடுங்குளிரிலும் சுறுசுறுப்புடன் மேலும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டது. பழைய நண்பர்கள், பழைய அனுபவங்கள் எல்லா உணர்வுகளையும் ஒரு முறை திருப்பிப் பார்க்க ஒரு இதமான சந்தர்ப்பம்.

''காண்ட்ரிபியூஷன்'' தொகை இருநூறு ரூபாவைத் தனியாக ''டைப்'' செய்த கவரில் வைத்துக் கொண்டேன். மனைவிக்குப் பிடித்தமான உடைக்குள் புகுந்து

கொண்டேன். “இந்தாங்க நீங்கள் உங்க கல்லூரி போய் இறங்கியதும் வாசித்துப் பாருங்க” என்று ஒரு சிறிய காகித மடிப்பைக் கொடுத்தாள்.

மணி நான்கு. கும்மிருட்டு ‘டார்ச்’ விளக்குடன் ஒற்றையடிப் பாதையைக் கடந்து மெயின் ரோட்டை அடைவதற்கு அரை மணித்தியாலம் ஓடிவிட்டது. நாய்களின் கோரமான குரைப்பைத் தாண்டியாகி விட்டது திருப்தியைத் தந்தது. பஸ் வந்ததும் அவசரமாக ஏறி அமர்ந்து மனைவியின் காகித மடிப்பைப் பிரிக்கலானேன், பகீரென்றது.

அதில், “மறக்காமல் உங்கள் ராஜியைப் பார்த்து விட்டு வாருங்கள்” என்று எழுதப்பட்டிருந்தது. கூனிக் குறுகிப் போனேன். எனது உணர்வுகளை எந்த அளவுக்கு மதிப்பீடு செய்திருக்கிறாள்.

பஸ் வேகமாக, பலவித குலுங்கல்களுடன் ஓடத் தொடங்கியது. கண்களை மூடினேன். மனைவியும், ராஜியும் மாறி, மாறி வந்தார்கள். ‘சே கூடாது’ என்று நினைத்துக் கொண்டு பழையகால விளையாட்டுகளை சிந்திக்கலானேன்.

அதிலும் ஒரு தரம் தலையை நீட்டினாள் ராஜீ. அநேகமாக அவள் வருவதற்கு வாய்ப்பிருக்காது. யாருக்கோ மனைவியாக செல்வச் செழிப்பில் குடும்பப் பெண்ணாக இருக்கக் கூடும் என்று மட்டும் நினைத்துக் கொண்டேன்.

பஸ் ஒருவாறு கண்டியை அடைந்தது. காலை மணி எட்டரை, ஒன்பதுக்குக் கூட்டம் ஆரம்பம்.

நான் நேராகக் கல்லூரி வளவை நோக்கி நடக்கலானேன். கல்லூரிக் கம்பவுண்டுக்குள் நுழைந்ததும், மனம் பல கோணங்களில் குதிக்க ஆரம்பித்தது. நேர்த்தியான சுருக்கமான அலங்காரம் - கல்லூரி முகப்பில்.

முகம் தெரிந்த தெரியாத, தேடிக் கண்டுபிடிக்கும் வரை தெரியாத இப்படியான சந்திப்புக்கள். நீண்டகால இடைவெளியின் மாற்றங்கள், தலைமுறையை தாண்டிவிட்ட கௌரவமான பேச்சுகள், அனுபவ முத்திரைகள், ஓரளவு நரை விழுந்த - அக்கறையின்றி வாரப்பட்ட பழங்கால இளமை மயிர்க்கூட்டம்.

“புரோக்கிராம்” துவங்கியது. தலைவர் திரு. குணத்திலக்க தனது உரையை ஆரம்பித்தார். அப்போதைய சிறுவன் இப்போதைய கனவான். அர்த்தமுள்ள பேச்சு.

“நமது தலைமுறையின் இரண்டாவது ஆட்டம் இது. அடுத்த தலைமுறையின் சுபிட்சத்துக்காக இப்போதைய நமது பொறுப்புமிக்க சந்திப்பு ஆட்டம் காண முடியாததொரு அடிக்கல்லை நாட்டி விட வேண்டும்” என்று பேசி முடித்தார்.

பலர் பேசினர். பழைய மாணவிகள் தாய்மாராக வந்திருந்தனர். நான் எதிர்பார்த்த ராஜி என்ற ராஜலெட்சுமி வரவில்லை. எனது மானசீகமான அற்பத்தனத்துக்கு நியாயமான தோல்வி.

“கண்ட்ரீபூஷன்” லிஸ்டை மாலை மூன்று மணியளவில் வாசித்தார்கள். அதில் வசூலாகும் தொகையை வறுமையில் வாடும் மாணவர், ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பெயர்கள் வாசிக்கப்பட்டு தொகையும் கூறப்பட்டது.

ஒரு இடத்தில் மகேந்திரன் ராஜலெட்சுமி 10 ரூபா என்று வாசித்துவிட்டு சற்று மௌனம். தொகையில் ஏழ்மை தெரிந்ததால், வாசித்தவர் சற்றுக் கலங்கினார். தயங்கினார். கூட்டம் முடிந்ததும் ஓடிப் போய் 'லிஸ்டில்' தேடி மகேந்திரன் ராஜலெட்சுமிக்குரியவரின் விலாசத்தை ஆவலுடன் தேடலானேன்.

முகவரியைப் பார்த்ததும் என் உடலின் பாதாதி கேசங்களும் நடுங்கத் தொடங்கின. "மகேந்திரன் ராஜலெட்சுமி என்று போட்டு "கிளெண்டில்ட் காலனி" 20 ஆம் நம்பர் வீடு. இது "லக்ஷ்மி" அல்லவா? மனம் அடித்துக் கொண்டது.

பழைய மாணவர் கூட்டம், சொற்பொழிவு, சிற்றுண்டி அனைத்தையும் மறந்து ஓடிப் போய் பஸ்சில் ஏறினேன். பஸ்ஸில் பயணம் செய்த மூன்றரை மணித்தியாலமும் பல கோடிக் கணங்கள் கொண்ட ஒரு "பிரபஞ்சப் பயணமாக" என்னை வாட்டின.

வீடு போய்ச் சேர்ந்ததும் சோர்வுடன் கட்டிலில் சாய்ந்தேன். பயணம் செய்த களைப்பாக இருக்கலாம் என மனைவி என் உடம்பை அமுக்கிவிட்டு என் அப்போதைய கஷ்டத்தைப் போக்க விரும்பினாள். அவளுடைய முகத்திலும் சோக முத்திரைகள் படர்ந்து கிடந்தன.

மனைவி மெல்லமாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

"நம்ம லக்ஷ்மி இன்னிக்கே பிள்ளைகளோடு புறப்பட்டுப் போய் விட்டாள். நாளைக்குக் கப்பலாம். இங்கு வரவில்லை. நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். இன்றுதான் எனக்கும் ஒரு விஷயத்தைச் சொன்னாள்."

“உங்களோடு படித்த ராஜலட்சுமியாம். ராஜீ என்று கூப்பிடுவார்களாம். தன்னுடைய நிலைமை காரணமாக இதுவரை சொல்லவில்லையாம். எனக்கு அழுகையாக வந்து விட்டது. என் கழுத்தில் கிடந்த இரண்டு பவுன் சங்கிலியை அவள் மகள் கழுத்தில் போட்டு விட்டேன். உங்களைக் கேட்காமல் செய்த முதல் காரியம்'' - சொல்லி விட்டுக் குமுறினாள்.

கடமையைச் செய்த உயர்ந்த மனைவியின் உன்னதமான கைகளைப் பற்றிக் கொண்டு என் அந்தரங்க சோகத்துக்கு விடை கொடுத்தனுப்பினேன்.

☆



# அவசர உலகம்

'மனிதன் மறுபடியும் குரங்காக மாறிவிடுவானா' என்ற ஆதங்க எண்ணத்துடன் பார்த்திபன் திரும்பினான். மறுபடியும், மறுபடியும் பலரின் தலைகளை அந்தக் கோலத்திலேயே பார்க்க முடிந்தது. இருண்ட ஆப்பிரிக்காக் கண்டத்து காடுகளைப் போல. மனித சமுதாயம் மாறுகிறதா? திரும்புகிறதா? எங்கே திரும்புகிறது. இப்படியெல்லாம் ஓரிரு வாலிபர்களின் சிகை வளர்ப்பைப் பார்த்து எண்ணிக் கொண்டிருந்தவனின், மனத்தில் ஒரு சபலம். ஒரு குலுக்கல்.

ஏனென்றால், ஒரு கிழமைக்கு முதல் தன்னைப் பார்த்துச் சிரித்த யவன ராணி. மோகனப் பெண் நின்றாள்.

"கிளாட் டு மீட் யூ எகெய்ன்" - பெண்.

"ஓ கிளாட், கிளாட்" - பார்த்திபன், "மிஸ்..."

"நான், மார்த்தா" - சேலைத் தலைப்பைச் சரி செய்து கொண்டே கூறினாள். இளம் பச்சை வர்ணத்தில்,

பெரிய பூப்போன்ற சிவப்பு டிசைனைப் பார்த்தான். சிரித்துக் கொண்டு தன் சடையை இழுத்து முன்னால் போட்டுக் கொண்டாள்.

"மை எட்ரஸ்" என்று ஒரு கார்டை அவனிடம் நீட்டினாள் மார்த்தா. வாங்கிப் பார்த்துவிட்டு பையில் வைத்துக் கொண்டு விடை பெற்றான் பார்த்திபன். அவளும் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு வேகமாக நடந்தாள்.

தான் நடப்பது மிருகக் காட்சிச் சாலையில், என்பது பார்த்திபனுக்கு இப்பொழுது தான் நினைவு வந்தது. தனக்கு நேரெதிரே இருக்கும் குரங்குகள் கூண்டை நோக்கி முன்னேறினான். பத்துப் பதினைந்து குரங்குகளின், ஒரே மாதிரியான சேட்டைகளைப் பார்த்தான். குரங்குகளின் சேட்டைகளில் மனித இயல்புகள் மங்கலாய்த் தெரிந்தன. உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், இப்படி ஐந்து நிமிடங்கள் வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

ஆறாவது நிமிடம் அவனுடைய கண்களில் குரங்குகள் நிலைக்கவில்லை... குரங்களுக்குப் பதிலாகத் தெரிந்தது என்ன? பார்த்திபன் திரும்பினான். வேகமாக ஓடினான். மெயின் ரோடுக்கு திரும்பினான், வாகனக் கூட்டங்களுக்கு நடுவே, 199ம் நிர் பஸ் வந்தது, மனிதக் கூட்டங்களோடு சேர்ந்து பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

பஸ், தட, தடாலென்று குலுங்கி நகர்ந்தது. அடிக்கடி பிரேக்கைப் பிடித்து பஸ்ஸைச் செலுத்தும் சாரதி மேல் கொள்ளைக் கோபமாய் வந்தது, கதாநாயகன் பார்த்திபனுக்கு.

யாரோ சிரித்தார். பதிலுக்குச் சிரித்தான். கையிலிருந்து நழுவிய பேக்கைச் சற்று திடுக்கிட்டுப் பிடித்துக் கொண்டான். பஸ் எங்கோ நின்றது. இறங்கினான். ஓடினான்.

இப்பொழுது ரூமுக்குள் வந்து சேர்ந்து விட்டான். பார்த்திபனின் சிறை அறை அது. பொத்தென்று கட்டிலில் விழுந்தான்.

* * *

பார்த்திபனின் அறை அது. 18x12 சதுர அடிக்குட்பட்ட அறை. கீழே 'கவிதா' லாட்ஜ். விவேகானந்தர் அந்த அறையின் வலதுபுறச் சுவரில் படமாகத் தொங்கிக் கொண்டிருந்தார். ஒரு கட்டில், ஒரு சிறிய 'டீபாய்', ஒரு நாற்காலி, சில பைல்கள் புத்தகங்கள், இடது சுவரில் அவனுடைய தாயின் படம். இந்த சுவர்களுக்குள் வாழ்ந்து கொண்டிருந்த பார்த்திபனின் உள்ளம் எதற்கோ வெதும்பியது, எதற்கோ, மோகித்தது, எதற்கோ அடிமைப்பட்டது.

இருக்கையை விட்டெழுந்தவன், மேஜைக்கருகே சென்றான். எதையோ தேடினான். அவன் கையில் யோகாசன நூல் கிடைத்தது. ஒவ்வொரு ஏடாகப் புரட்டினான். மனம் அதிலும் ஈடுபடவில்லை. புத்தகத்தை எறிந்துவிட்டு, டவலை எடுத்துக் கொண்டு குளியலறைக்கு ஓடினான். அறை திறந்தே கிடந்தது. மேஜையின் மேல் 'கிறிஸ்டோபர் பால்டனின்' புத்தகம் விரித்தவாறு இருந்தது.

பம்பலப்பிட்டி ஆரவாரங்கள், இரைச்சல்கள், வாகனங்களின் இடைவிடாத ஓசைகள், வானொலியில்

'லதா மங்கேஷ்காரின்' இந்திப் பாடல் ஒன்று இசைத்துக் கொண்டிருந்தது. மனித இலட்சியங்களும், யந்திர இலட்சியங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருந்தன.

சாலையில் இறங்கி நடந்தான் பார்த்திபன். அவனுடைய மனமும், உடலும் ஒன்றையொன்று போட்டியிட்டு விரைந்தன. பார்த்திபனின் மனதில் ஏதோ ஒரு புதிய உணர்வலை வீசிக் கொண்டிருந்தது. வேகமாக நடந்தான். கிட்டத்தட்ட ஒரு மைல் நடந்திருப்பான். மணி மாலை ஏழரை. "எங்குமே ஆனந்தம். ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்" என்ற கண்டசாலா அவர்களின் பழைய பாடலொன்று வானொலியில் இசைத்துக் கொண்டிருந்தது. பார்த்திபன் ரசிகத் தன்மை இப்போது திசை மாறத் தொடங்கியது. இப்பாடலை நேற்றுவரை ரசித்தவன், இன்றைய சூழலில் தாக்கப்பட்டு அவனுடைய அறிவிலிருந்து மறைக்கப்பட்டு விட்டது. கால மாற்றத்தினால் உண்மையான இசைகளெல்லாம் அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றனவா?

பார்த்திபன் நின்றான். நினைத்தான். சாலையோரத்தில் ஒரு வயோதிபப் பெண் பிச்சை வாங்கிக் கொண்டிருந்தாள். பாக்கெட்டில் கையை விட்டு பத்து சதத்தைத் தேடி எடுத்து நீட்டினான். அந்தக் கிழவியின் முகம் தனது தாயின் சாடையாகவே இருந்தது. அவளைப் பார்த்த மாத்திரத்தில் அவனுடைய அறிவின் கேந்திர ஸ்தானங்களில் பலவிதமான அலைகள் மோத ஆரம்பித்தன. பார்த்திபனுக்குத் தன் நிலைகளின் தாக்கங்கள் புரிந்தன. ஆனால் அவற்றை அறிவால் வெல்ல முடியவில்லை.

இப்பொழுது பார்த்திபனின் உள்ளத்திலே தாயின் நினைவுகள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன. சுமார் ஐந்து நிமிட இடையில் தாயின் பாசவுணர்வுகள் பெருகிவிட்டன. மீண்டும் பிச்சைக்காரியிடம் போனான். நின்றான். அவளைப் பார்த்தான். முன்னாலிருந்த கடையில் வாழைப்பழம் நான்கைந்து வாங்கி வந்து அவளிடம் நீட்டினான். அந்தக் கிழவி தயக்கத்துடன் பெற்றுக் கொண்டாள். இப்பொழுது பார்த்திபன் வந்த வழியே திரும்பி நடந்தான். பழைய வேகத்தோடு நடந்தான். காற்சட்டைப் பையில் கையை விட்டான். நூறு ரூபாய் நோட்டு அப்படியே இருந்தது. இன்னும் சற்று வேகமாக நடந்தான்.

காற்று அலையலையாக வீசியது. மனிதக் கூட்டங்கள் இறைந்து சாலை அமைதி கொள்ள ஆரம்பித்தது. மணி ஏழே முக்கால். பார்த்திபனின் உள்ளத்தில் சற்று அமைதி நிலவியது. பூக்கடைகளைத் தாண்டியபோது, மல்லிகைப் பூக்களின் மணம் அவனைத் தொடர்ந்தது. அவன் மனத்திலும் மல்லிகை மணம் பரவியது. இப்பொழுது அவனுடைய மனத்தில் "எங்குமே ஆனந்தம், ஆனந்தமே ஜீவனின் மகரந்தம்" என்ற பாடல் ஒலிக்க ஆரம்பித்தது. மனித மனத்தில் ஆனந்தம் என்பது ஒரு தெய்வீகம். தெய்வீகத்தை மனிதன் இழக்கும் போது ஆனந்தத்தையும் இழக்க வேண்டி நேருகிறது என்று எண்ணிக் கொண்டே கண்டசாலாவின் அப்பாடலை முணு முணுத்தான். இப்பொழுது பார்த்திபன் அமைதியாக நடந்தான். நிம்மதியாக நடந்தான். 'தேவி லாட்ஜ்' நெருங்கியது. அமைதியாக உள்ளே போய் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான். கடையில் இரண்டொருவரே சாப்பிட்டுக்

கொண்டிருந்தார்கள். ரூமுக்குப் போனவனுக்குத் திக்கென்றது. அறை திறந்தே கிடந்தது. தனது தவறை உணர்ந்து கொண்டே உள்ளே நுழைந்தான். சுவாமி விவேகானந்தரின் படத்துக்குக் கீழே பத்து நிமிட நேரம் நின்று கொண்டிருந்தான். அவனுடைய புலன்கள் அடங்கின. கண் விழித்த போது அறை விளக்கு முன்னதைவிடப் பிரகாசமாக எரிவது தெரிந்தது. இந்த 'எக்ஸ்ட்ரா' ஒளி அவன் கண்களிலிருந்து வருகிறதா அல்லது தான் கண்களை மூடியிருந்த போது கூடின 'வாட்டேஜ்' பல்பை மாற்றிவிட்டு யாரேனும் போயிருக்கிறார்களா? ஆல்ரைட் எப்படியோ இருக்கட்டும்.

மீண்டும் எழுந்து போய் நூறு ரூபாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. ஓடிப் போய்த் திறந்தான். ஒரு கணம் சிலையாக நிற்கவே அவனால் முடிந்தது. ஆமாம்! போலீஸ் பார்த்திபனைத் தேடி வந்திருந்தனர். "யூ ஆர் பார்த்திபன்?" என்று கைப்பிரம்பை தன் இரண்டு கைகளால் உருட்டும் பாவனையில் தட்டிக் கொண்டே கேட்டார்.

பார்த்திபனால் போலீசின் திடீர் வருகையை ஜீரணிக்க முடியவில்லை. கைத்தடியை மேலும் அசைத்துக் கொண்டே அந்த ஹோட்டல் அறையை முழுவதுமாக நோட்டமிட்டார்.

"சார் உள்ளே வாங்க... வந்து..."

"பார்த்திபன்...ம்... ஊரு எது" என்று சிங்களத்தில் கேட்டார் இன்ஸ்பெக்டர். அவர் பின்னால் இரண்டு கான்ஸ்டபிள்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"சார் என் ஊரு கண்டி"

"இங்க என்ன செஞ்சுக்கிட்டிருக்கே?"

"எழுதிக்கிட்டிருக்கேன் சார்."

"என்ன எழுதிக்கிட்டிருக்க?"

"கொழும்பு நகரத்தப் பற்றிய வரலாறு தீசிஸ்"

"ம்... குட், குட்... நீ எழுதனத பாக்குணும் ரூம சோதன போடுணும்."

"சார்... வந்து என்னா காரணம்னு..." பணிவுடன் வார்த்தைகளை முடிக்காமல் இழுத்தான்.

"சொல்றேன்... யெஸ் கமான் குயிக்" என்று சொல்லிக் கொண்டே தனது கான்ஸ்டபிள்களைப் பார்த்தார். பட, படவென்று தேடும் பணியில் ஈடுபட்டனர் இருவரும். என்ன தேடுகிறார்கள் என்று பார்த்திபனுக்குப் புரியவில்லை. ஒன்றும் அறியாமல் இன்னமும் விழித்துக் கொண்டு நின்றவனுக்கு விளக்கம் தருவதாக யாரும் இல்லை.

பட, பட, தார், பர், பரக், சரக் என்ற சத்தங்கள் ஏககாலத்தில் எழுந்து அவன் காதைக் குடைந்தன. போலீசாரின் சோதனை நிகழ்ச்சியை முதன் முதலாக அனுபவிப்பவனாயிற்றே. உண்மையிலேயே அந்த இளைஞனின் நிலை பரிதாபந்தான்.

அரைமணி நேரத்துக்குப் பிறகு போலீசார் வெறுங்கையுடன் ஓய்ந்த நிலையில் நின்றனர். தேடியது எதுவும் கிடைக்கவில்லை.

மேசையில் உட்கார்ந்து பார்த்திபன் பற்றிய முழுவிவரத்தையும் சேகரித்து எழுதிக் கொண்டார் இன்ஸ்பெக்டர்.

"ம்... மாலினி என்ற பெண்ணைத் தெரியுமா உனக்கு?"

"தெரியாது சார்" என்று சட்டென்று கூறினான்.

"நிச்சயமா?" சற்று சந்தேகம் தொனிக்கக் கேட்டார். அந்தக் குரலில் ஒரு கடுமை இருந்தது.

"ஆமா சார். அப்படி ஒரு பெண்ணை எனக்குத் தெரியவே தெரியாது"

"சரி... போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிடும் போது வரணும் தெரியுதா?"

"எஸ் சார்"

"ம்..." என்று ஒரு உருட்டுப் பார்வையைப் பார்த்திபன் மேல் வீசி விட்டு விருட்டெனத் திரும்பி தனது சகாக்கள் சகிதம் வெளியேறினார் இன்ஸ்பெக்டர் சில்வா. பார்த்திபன் நாற்காலியில் வீழ்ந்தான்.

அவனுடைய மேஜைக்கு சற்று தள்ளி சீஸ்டா மெத்தை அலங்கோலமாகக் கிடந்தது.

கட்டிலில் சாய்ந்த அந்த மனிதனின் கண்கள் சுழன்றன.

"ம்" என்று முனகிக் கொண்டே எழுந்தான்.

தன்னுடைய ஞாபக மறதியை நொந்து கொண்டே, தன்னைச் சந்தித்த அந்தப் பெண்ணின் முகவரி கார்டைத் தன் சட்டைப் பையில் துழாவி எடுத்தான். அதைத் திருப்பிப் பார்த்தான் புரியவில்லை. வெளியே இறங்கி வந்தான். காலி ரோடு கல, கலத்தது. தொடர்ச்சியான வாகன வரிசை. மறுபக்கம் மாறியபடி 218 பஸ்ஸில் ஏறினான். இரண்டு தரிப்புகளைத் தாண்டி இறங்கியதும் நேராக போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினான்.

இன்ஸ்பெக்டர் சற்று முன் பார்த்திபன் அறைக்கு வந்தவர் - மீண்டும் வெளியே புறப்படத் தயாரானவர், பார்த்திபனைக் கண்டதும் சற்று வியப்படைந்தார். வெளியே காட்டிக் கொள்ளவில்லை. போலீஸ் ஸ்டேஷன் மிக சுறுசுறுப்பாக இருந்தது. "சார், இன்று பிற்பகல் தெறிவளைக்குப் போயிருந்தேன். எனக்கு முன்பின் தெரியாத ஒரு பெண்..." - இப்படி பார்த்திபன் கூறியதும் அவனை ஏறிட்டு ஊசியாகப் பார்த்தார்.

நான் இதுக்கு முந்தி அந்தப் பெண்ணைப் பார்த்ததில்லே, அவளாக எங்கிட்டப் பேசி இந்த விசிட்டிங் கார்ட எங்கிட்டக் குடுத்தா. நீங்க என் ரூமுக்கு வந்தப்ப எனக்கு இந்த நிகழ்ச்சி சுத்தமா ஞாபகத்துக்கு வரல. ஐஆம் சாரி சார்." இன்னொரு முறை அவனைப் பார்த்துவிட்டு கார்டை வாங்கி அதைப் பரிசோதித்தார்.

'மார்த்தா' என்ற இந்தப் பெண் யார்? என்ற கேள்விக் கணைகள் அவன் இதயத்தைத் தாக்கி நோகடித்துக் கொண்டிருந்த போது, 'அவள் என்னை ஏன் கண்டு பேசி முகவரியைக் கொடுக்க வேண்டும்?' என்ற கேள்வியும் இப்போது அவனுள் அபிவிருத்தி கண்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர், பார்த்திபன் கொடுத்த முகவரி

அட்டையுடன் வெளியே கிளம்பி ஜீப்பில் ஏறினார். பார்த்திபனோ கூனிக் குறுகிய நிலையில் போலீஸ் ஸ்டேஷன் சூழலைத் தாண்டி நடந்து கொண்டிருந்தான்.

யந்திரம் போல பஸ் ஏறியும், இறங்கியும், நடந்தும், நகர்ந்தும் தனது அறைக்கு வந்து சேர்ந்தான்.

* * *

கொழும்புக்கு வந்து மாதம் ஒன்று. அறைவாடகையோ சிகரெட், சாராய விலைவாசி போல ஜிவ்வென்று ஏறிக் கொண்டிருந்தது.

பிரார்த்தனையை முடித்து விட்டு தன் கண்டிப் பிரதேசத்துப் பிறந்த மண்ணை நினைக்கத் தொடங்கினான். கண்டி மாநகரத்திலிருந்து பத்து மைல் தொலைவில் ஒரு மலைப்பகுதித் தேயிலைத் தோட்டத்து அதிபர் அவன் அப்பா சொக்கலிங்கம். ஐம்பது ஏக்கருக்கும் குறைவான சிறு தேயிலைத் தோட்டம் சமீப காலமாக நட்டத்தில் இயங்குகிறது. அப்பாவுக்குத் தோட்ட நிர்வாகப் பிரச்சினை.

"ஏம்பா பார்த்தி... அப்பாவுக்கு உதவியா தோட்டத்த நடத்தறத பாக்காம... இப்புடி... நீப்பாட்டுக்கு புத்தகமுங் கையுமா நிக்கிற, நடக்குற, கண்ணமூடிக்கிட்டே ஒக்காந்திருக்கிற," என்று அம்மா அடிக்கடி நொந்து கொள்வதுண்டு.

"இந்தா அவெஞ் சுதந்திரமா அவனுக்கேத்த மாதிரி ஏதாவது பண்ணுட்டும். நம்ம பிரச்சனை சிக்கல் எல்லாம் நம்பளா போட்டுக்கிட்டது. இதெயெல்லாம் அவுங்க தலையில கட்டக் கூடாது. எங்க போயிருவான். கருவாடு கரைஞ்சா."

"ஆம்மா அத ஒரு பழமொழி காலம்பூரா. ஓங்க கருவாடும் ஓங்க சட்டியும்!" - திரு. சொக்கலிங்கம் பிள்ளைக்கும் மனைவிக்கும் நடக்கும் தினசரி சம்பாஷணை.

கண்டி டிரினிட்டியில் படித்து மெட்ரிக்குலேஷன் பூர்த்தி செய்த பார்த்திபனுக்கு, தலைநகரின் பொருளாதார வளர்ச்சி, அரசியல், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றை ஆய்வு செய்து பி.எச்.டி. பட்டம் பெற வேண்டும் என்ற ஆசை. விவேகானந்த தத்துவத்தை நவீன வாழ்க்கை வட்டத்துக்குள் பின்பற்றி லௌகீக வாழ்க்கைக்கு ஆன்மீக இழையோட்டத்தைக் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. இந்த நிலையில் தான் கொழும்பு வந்து ஒரு அறையை வாடகைக்கு வைத்துக் கொண்டு தனது சுய கல்வியைத் தொடர்ந்தான்.

சற்று வித்தியாசமான வாழ்க்கையை நகரத்தின் மையத்தில் வைத்துக் கொண்டு வாழும் போது உலகத்துக்கு அவன் மேல் சந்தேகம் வந்து விடுகிறது. அதுதான் பார்த்திபனுக்கும்.

இப்போது எதை ஆராய்வது.

மாநகர அரசியல் பொருளாதார வரலாற்றையா?

மார்த்தா என்ற மர்மப் பெண்ணையா?

அவளுடைய முகவரியை ஒரு காகிதத்தில் நகல் எடுத்து வைத்திருந்தான்.

கீழே இறங்கிப் போய் கிரீன்லன்ட்சில் தேனீர் குடித்து விட்டு வரலாம் என்று காலிவீதி பிளாட்பாரத்தில் நடந்தவன் கண்களில் தற்செயலாக அந்த கறுப்பு கார்

பட்டது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தக் காரின் இலக்கத் தகடு சற்று தெளிந்து காணப்பட்டது. அந்தக் காரின் முன் கதவைத் திறந்து டிரைவர் சீட்டில் ஏறப் போன அந்த உயர மனிதன் தற்செயலாகப் பார்த்திபனைப் பார்த்தான். உடனடியாகக் கார் கதவைச் சாத்திவிட்டு ஓடிவந்தான்.

"ஹலோ... நீங்க... நீங்க"

"ஹ்ம்..." - என்று யோசித்தான், "ஆமா நான் நாங்கதான்" என்று மனதுக் கொண்டு, "நீங்க?" என்று திருப்பிக் கேட்டான்.

"நாந்தான் ஜேம்ஸ். எங்க ஸ்டெனோவப் பாத்திருப்பீங்களே. மிஸ் மார்த்தா. கெட்டிக்காரப் பொண்ணு" என்று படபடவெனப் பேசி முடித்தான்.

"ஓங்க பேரு" - அந்த அறிமுகமில்லாத உயர்ந்த மனிதன்.

"எம் பேரு மோகன்!" என்று ஒரு போடு போட்டான் பார்த்திபன்.

"ஹ்ம்" சற்று யோசித்த நெடிய மனிதன்,

"க்ளாட் டு மீட்" என்று கையை நீட்டினான்.

"வணக்கம்" என்று பதிலுக்குக் கும்பிட்டான் பார்த்திபன்.

சம்பாஷணை எல்லை கண்டது. கார்க்காரன் போய்விட்டான். யந்திர நிலையில் 'கிரீண்லேண்ட்' போய் தேனீரை சுவைத்துவிட்டு அறையை நோக்கி ஓடினான்.

'ஏதோ ஒரு மர்மக் கும்பல் தன்னைப் பின் தொடர்கிறது. அந்த மர்மக் கும்பல் உறுப்பினரோடு என்னையும் சேர்த்து போலீசார் பார்த்திருக்கக் கூடும். அந்தக குழுவில் தானும் ஒருவன் எனப் போலீஸ் சந்தேகிக்கிறது' என்று யூகித்து முடிவு செய்ய பார்த்திபனுக்கு வெகு நேரம் ஆகவில்லை.

'ஆமா? மர்மக் கும்பலுக்கு என்னை எப்படித் தெரியும்?' என்று தனது மனச் சுவருக்குள் எதிரொலித்த கேள்விக்கு விடை காண்பதே இப்போது அவனுடைய முதல் வேலை.

அவனுடைய அறை இருக்கும் கட்டிடத்தில் சுமார் நாற்பது பேர் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு அறை என்ற ரீதியில். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சில அறைகளில்.

இரண்டு நாட்கள் அவன் எங்குமே போகவில்லை.

இந்த இரண்டு நாட்களிலும் அவன் குடியிருந்த கட்டிடத்து மக்களை ஆராய்ந்தான்.

அந்தக் கட்டிட வாழ்வுக்குள் எத்தனை விதமான உணர்வுப் போராட்டங்கள். வேகமான வாழ்க்கைச்சுழல். 'தச், த்சு' என்று சட்டைப் பொத்தானைக் கழற்றி காற்று வீசும் இளைஞர்கள். எத்தனை விதமான பொருட்கள். காலை ஏழு மணி முதல் மாலை ஏழுமணிக்குள் தமது இலக்கை அடைந்து விட வேண்டும் என்ற வேட்கையில் இயங்கும் இளைஞர் கூட்டம்.

"ஹலோ... நீங்க டேவிட் தானே."

'ஆமா இல்ல...' - என்று ஒரே நேரத்தில் பதில் வந்தது.

"நான் பார்த்திபன்"

"யெஸ் ஐ நோ"

"ஹ்ம்... கிளாட் டு மீட்" என்று சொல்லிவிட்டு நிமிர்ந்தான்.

"எனக்கு முக்கிய வேலை இருக்கு" என்று சொல்லிவிட்டு டேவிட் விடைபெற்றான்.

அறைக்குப் போய் உட்கார்ந்ததும் ஆய்வுக்கு அப்பாற்பட்ட சங்கதிகளெல்லாம் அவனுடைய எண்ண அரங்கில் இடம் பெறத் தொடங்கின.

நாளைக்கு வீட்டுக்குப் போய் விடுவோம் என்று நினைத்து விட்டுப் படுத்தான். இரவு வெகு நேரம் தூக்கம் வரவில்லை.

* * *

கண்டியிலிருந்து மொரகல்ல பஸ் ஏறி வீடு போய் அம்மாவைப் பார்க்கும் வரை பார்த்திபனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

சூட்கேசுடனும் பேக்குடனும் நின்ற பார்த்திபனை அம்மா எதிர்பார்க்கவில்லை.

"வாப்பா...பா" என்று பேக்கை வாங்கினாள்.

"ஏம்பா ஒரு கடிதாசி போட்டிருந்தா கார அனுப்பியிருப்போமே"

ராத்திரித்தான் வரணும்னு முடிவெடுத்தேன்.

"சரி வா. குளிச்சிட்டு... சாப்புடு. அப்புறம் பேசுவோம்" - என்று அம்மா சமையலறைப் பக்கம் போனாள்.

வீட்டுச் சுகம் ஒரு தனி சுகம்தான். என்று தனக்குள் முனகிக் கொண்டே குளிக்க ஆரம்பித்தான். அவனுடைய விசில் இசை சத்தம் அம்மாவுக்குக் கேட்டது. பாடும் ஒலியும் கேட்டது.

சாப்பிட்டுவிட்டு படுத்ததும் தூக்கம் அவனை வாரி அணைத்து தன் மடியில் போட்டுக் கொண்டது.

கண்விழித்த போது மணி ஐந்தாகி விட்டது.

எப்போதோ வெள்ளைக்கார துரை வாழ்ந்த வசதியான பங்களா.

"என்னப்பா பார்த்தா திடீர்னு?" என்று தனது உடையைக் கழற்றிக் கொண்டே அப்பா கேட்டார்.

"என்னுடைய 'ரிசர்ச்' வேலைய இங்கருந்துதான் செய்யுணும் அப்பா!"

"அதாம்பா நானுந் தலையால அடிச்சுக்கிட்டேன்" என்று அம்மா ஏக குஷியுடன் கூறினாள்.

அப்பாவிடமிருந்து சற்று மௌனம். மனதுக்குள் எதையோ தேடுவது போல சிந்தித்தார்.

'அப்பாவுக்கு எம்புட்டு பிரச்சின.'

"ஹ்ம்... கொழும்புல இருந்து சுதந்திரமா ஒன் 'தீஸிஸ்' வேலய செய்ய முடியல. நீ நெனக்கிறதுக்குக் காரணமாயிருந்தது எது?

பார்த்திபன் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறினான்.

அப்பாவுக்கு சிந்தனைவளம் நன்றாக இருக்கின்றது என்பது பார்த்திபனுக்குத் தெரியும்.


'சரி நா அப்பறமா வாரேன்' என்று சொல்லிவிட்டுத் தோட்டத்துக்குப் பக்கம் போய்விட்டார்.

அம்மாவுக்கும், பிள்ளைக்கும் உரையாடல்கள் மும்மரமாக நடைபெற்றன.

அன்றிரவு சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து கொண்டே பார்த்திபனைப் பார்த்து இவ்வாறு கூறினார்.

"பார்த்தா. நீ என்ன செய்யிற, காலயில கௌம்புற கொழும்புக்கு. என்னைக்கி போலீசுக்கு ஓம்மேல சந்தேகம் வந்திச்சோ அந்த நேரத்துல இருந்து அவுங்க சந்தேகத்த போக்க பாடுபடணும். அதுனால், நீ அந்த ரூமுலேயே இரு. செலவு போனா பரவாயில்ல. ஒன்னுடைய 'ரிசர்ச்ச' கொழும்புலேயே வச்சிரு. ஒதவிக்கு 'சில்வா' அங்கிளுக்கிட்ட அடிக்கடி போ. ஒலகத்தப் படிக்க இது ஒனக்கு ஒரு சந்தர்ப்பம்." அடுத்த நாள் பெட்டி படுக்கையோடு புறப்பட்டான் பார்த்திபன் அப்பாவின் ஆலோசனையை ஏற்று!

☆



# அந்த நள்ளிரவு நாடகம்

அந்த நடுச்சாம நிகழ்ச்சிக்கு மனித சாட்சி இல்லை. இயற்கை, மரங்கள், செடி, கொடிகள், வானம், நட்சத்திரங்கள், பூமி, நீர், இரவு நேர மின்மினிப் பூச்சிகள் எல்லாமே உயிருள்ள காட்சிகள் தான். என்றாலும் பேசாத சாட்சிகளாக எடுத்துக் கொள்ளலாம். அதனால் அந்த நள்ளிரவு நேரத்தில் குமார என்ற அந்த இளைஞனின் சற்று பைத்தியக்கார செயல்களைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது என்று சொல்ல முடியும்.

ஆம்! அவனுக்கு இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ள முடியாது. “அம்மே! என்னை மன்னிச்சிருங்க. புத்தாழுதுரு ஒங்கள பாத்துக்குவாறு நாந் தப்பு பண்ணிட்டேன். எப்புடி வாழ முடியும். பாக்குறவங் கல்லாம் என்ன கொலகாரெரன்னு சொல்லுவாங்களே.

ஒங்கள எப்புடி நிம்மதியா வச்சிருக்க ஏலும். எங்கிட்ட பணங்காசு இல்ல. வேலை இல்ல. இந்த அத்தக் கூலிக்கு...." என்று சிங்கள மொழியில் அவனாகவே பேசினான். இல்லையில்லை. உளறினான். அந்த உளறலை செடி கொடிகள் கேட்டனவோ என்னவோ... சிலிர்க்கிற மாதிரி சத்தம் வந்தது, சற்று தூரத்தில். ஆனால் கண்களுக்கு எதுவுமே படவில்லை.

அமைதியாக, கண்களை மூடி சென்ற மாத நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தான். அதை நினைப்பதே ஒரு தற்கொலை முயற்சி தான். இருந்தாலும் இந்தக் கடைசி நேரத்தில், அமைதியான கொத்மலை நீர்த்தேக்கத்தின் முன்னிலையில், பற்றைகளும், புதர்களும் சூழ்ந்த தனிமையில் அந்த நிகழ்ச்சி ஓடிவந்து அவன் மனதை நெருடத்தான் செய்தது.

* * *

"டேய் முத்து தள்ளிப் போ" என்று கத்தினான் குமார. முத்துவுக்கு அவன் கத்தியது கேட்கவில்லை. ஏனென்றால் அவனும் அந்தப் பாறாங்கற்களின் உடைப்பு ஓசைகளுக்கு இடையே தான் வேலை செய்து கொண்டிருந்தான்.

"டமார், ட்டான், ணங்க்..." என்ற தொடர்ச்சியான ஓசைகள், மாலை நான்கு மணிக்கு முன் குறிப்பிட்ட இலக்கை எட்டியாக வேண்டும். அதன் செறிவுக்கு ஏற்ற மாதிரி கூலி. சம்பளம் என்ற அடிப்படையில் அந்தி நேரமானவுடன் ஏதோ கொஞ்சம் ஊற்றிக் கொண்டு அம்மாவுக்கு எதையாவது வாங்கிக் கொண்டு போக வேண்டும். சாப்பாடு என்ற தலைப்பில் ஏதோ, விழுங்கிக்

கொள்ளும் திருப்தி. அதுவும் இந்தத் தற்காலிக வேலைத் தளமாகிய 'உபசுரங்கம் வெட்டும்' வேலைத் திட்டம், யாரோ ஒரு வெளிநாட்டு நிறுவனம்.

முத்து பக்கத்துத் தோட்டத்து இளைஞன். இருவருக்கும் குடும்ப அங்கத்துவ எண்ணிக்கையில் ஒற்றுமை! சேர்ந்தே குடிப்பார்கள். அந்தி வேளையில் இருவரும் இரண்டு ராத்தல் பான், ஏதாவது ஓரிரு உப உணவுடன் வீட்டுக்கு. ஒருவன் தோட்டத்துக்குப் போய் விடுவான். ஒருவன் நாட்டுக்குப் போய்விடுவான்.

கொத்மலை பிரதேசத்து தோட்டங்களும், கிராமங்களும் உறவாடி மகிழும் காட்சிகளுக்கு இந்த இருவரின் வாழ்க்கைப் பதிவு ஒரு அழுத்தமான உதாரணம். ஆனால் அதற்கு ஒரு பெரிய எதிர்காலம் இல்லை. ஜனரஞ்சகம் இல்லை. விளம்பரம் இல்லை. முன்னேற்பாடு இல்லை. ஒரு இயல்பான சேர்க்கை இருந்தது. அந்தச் சேர்க்கையின் பொதுச்சின்னம், வறுமை!

வறுமை செய்திருக்கும் பாரிய நன்மைகளை செல்வம் செய்ததாக வரலாற்றில் இல்லை. அவர்களும் இதற்கு விதிவிலக்கில்லை.

வேலைகளை துரிதமாகச் செய்ய வேண்டும். கூலியை அதிகமாகப் பெற வேண்டும். நேரத்தோடு வீட்டுக்குப் போக வேண்டும். அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு கூடுதலான சுகங்களை அனுபவிக்க வேண்டும் - என்பது தான் இன்றைய மனிதக் கொள்கை.

"டேய்," என்ற கோரமான சத்தம். "ய்யா, ஆ..." என்ற அலறல். இந்த இரண்டு சத்தங்களின் சங்கமத்தில்

முத்துவின் உயிர் ஊசலாடியது. மேலே இருந்து குமார வீசிய பாறாங்கல் சரியாக - கனகச்சிதமாக முத்துவின் தலையில்.

குமாரவுக்குத் தலை சுற்றியது. ''ய்யா... முத்து... அனே... தெய்யனே'' கத்திக் கொண்டு கீழிறங்கி ஓடினான். அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. முத்துவின் உயிர் தலத்திலேயே பிரிந்தது.

பாமரத்தன்மை சூழ்ந்த குமார செய்வதறியாது நின்றான்.

''டேய்... யாரு? முத்துவா... யாரு...யாரு... குமார பயலா'' அவன் காதில் விழுந்தது. ஆனால் நண்பனின் இந்த முடிவால் அவனால் சூழலை ஜீரணிக்க முடியவில்லை.

நண்பனின் நிலை பற்றிய திடீர்த் தாக்கம். அம்மாவின் நிலை, போலீஸ் பயம், இப்படி பயங்களின் மொத்த உருவமாகிய அந்த சூழ்நிலைக் கோழையாகிய குமார ஓடி ஒளிந்து கொள்வதே சரி என்று முடிவெடுத்தான்.

* * *

சமூகத்துக்கும், போலீசுக்கும் பயந்து ஒளிந்து திரிந்த இந்த மனிதன் ஒரு வார அவகாசத்துக்குள் எடுத்த முடிவு, கொத்மலை நீர்த்தேக்கத்தில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள எடுத்த முடிவு தான் அவனை இந்த இருண்ட பிரதேசத்துக்கு இழுத்து வந்தது.

அந்த அகோர நிகழ்ச்சியை நினைத்து முடித்ததும் ஒருமுறை முழுமையாக நீர்ப்படுக்கையைப் பார்த்தான்.

''ச்சளார்!'' என்ற சத்தம். ஒரு பத்து யார் தூரத்தில். அந்த மங்கிய பார்வையில் நீர்த்திவலைகள்! யாரோ குதித்தது போல.

திடீரென்று இந்த நிகழ்ச்சியின் எதிரொலியாகத் தன்னையும் மறந்து குதித்து நீந்தினான்.

அந்த இருளில் தேடுதல் வேட்டை, எப்போதோ 'மடக்கும்பர' ஆற்றில் நீந்திப் பழகிய கலை. அந்தச் சின்ன வயது பயிற்சி இப்போது உதவியது.

தண்ணீர்ப் படுக்கைப் போராட்டம் ஐந்து நிமிடங்கள் நீடித்தன. அவனுடைய கரங்களுக்குத் தட்டுப்பட்ட உடல், அலாக்காகத் தூக்கிக் கொண்டு கரைக்கு ஏறியது அவனுக்கு பெரிய காரியமாகப் படவில்லை.

உயிரைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று நேரம் குறித்து அதற்கான உச்சக்கட்டத்தை அடையும் போது உயிர் மீது ஆசைப்பட என்ன இருக்கிறது! அந்த வேகத்தில் இன்னொரு உயிரைக் காப்பாற்றத் தன்னையறியாமல் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஈடுபட்ட குமாரவுக்கு கிடைத்த பொறுப்பு.

'ஹ்ஹா!' என்று ஆச்சர்யப்படவும் அவனால் முடியவில்லை. தண்ணீரைக் குடித்து மயங்கிய நிலையில் கிடந்த அந்த இளம் பெண்ணுக்கு எப்படி சிகிச்சை யளிப்பதென்றே தெரியவில்லை.

குமாரவுக்கு இப்போது ஏற்பட்டிருப்பது இரண்டாவது சோதனை. இந்த ஒரு கிழமைக்குள் இந்தப் பாமரனின் வாழ்வில்...!

* * *

நீர்த்தேக்கத்துக்கு ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அந்த லயம் இருந்தது. ஆறு குடியிருப்புகளைக் கொண்ட மத்தியில் இருந்த 'காம்பறா' வுக்கு முன் சுவர் இல்லை, 'இஸ்தோப்பு'

என்ற வராந்தா திறந்தே கிடந்தது. கதவைத் தட்டிய சிறிது நேரத்தில் திறந்தது. மணி காலை இரண்டு என்பதை அறிவிக்க தூரத்துப் பிடவை ஆலையில் இருந்து கடிகார சத்தம்.

"ஏ... என்னா...ஹ்..ம்..." - அன்னம்மாள் பேயறைந்தது போல. வீட்டுக்குள்ளிருந்து தனக்கு எதிரே நிற்கும் மகள் விஜயா பக்கத்தில் யாரோ ஊர் பேர் தெரியாத இளைஞன். இருவரும் தெப்பமாக நனைந்து மகள் மயங்கிய நிலையில்.

"அம்மே... மொதல்ல... இத... படுக்க வையுங்க... உடுப்ப மாத்துங்க" என்றான் குமார.

தாய்க்காரி விழித்தாள்... பத்துமணிக்குத் தூங்கப் போனது மட்டுமே தெரியும். இவ்வளவு நடந்து தூங்கிக் கொண்டிருந்த தன் பேடித்தனத்தை நினைந்து நொந்து கொண்டே கையும், காலும் ஓடாத நிலையில் பம்பரமாகச் சுழன்றாள்.

"இதென்னா சாமி!" என்று பிடவையைச் சரி செய்து கொண்டே அங்குமிங்கும் ஓடிய அந்த ஏழைத்தாய்க்கு ஒன்றுமே புரியவில்லை. குமார வெளியே குறு, குறு வென்று நின்றுகொண்டிருந்தான். குளிர் உடம்பை உலுக்கிக் கொண்டிருந்தது.

அவனால் சிந்திக்க முடியவில்லை. தற்கொலை செய்து கொள்ள எத்தனித்து, தற்கொலையில் ஈடுபட்ட உயிரைக் காப்பாற்றிய நிலையில் ஒன்றுமறியாது நின்று கொண்டிருந்தான்.

அந்த மூன்று ஆத்மாக்களுக்கும் நடந்தது என்னவென்று புரியவில்லை. மயக்கம் பூரணமாகத் தெளிந்த

விஜயா, விஷயமறிந்த தாய் அன்னம்மாள். கொஞ்சம் கொஞ்சமாக தனது தற்கொலை முயற்சியைக் கைவிடும் நிலையில் குமார்.

எப்போதோ 'ஜே, ஜே' என்றிருந்த தேயிலைத் தோட்டம் கைவிடப்பட்ட நிலையில் அந்த இரண்டொரு லயங்கள் மட்டும் எஞ்சியிருந்தன. தொழிலாளர் பரம்பரையின் சொத்தாக லயத்துக் காம்பறாக்கள். அத்தக் கூலி ஜென்மங்கள்.

இதில் விஜயா சற்று மாநிறம். மூன்று வரை படிப்பு. எழுதப் படிக்க வரும். பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பிடவை ஆலையில் வேலை.

வேலைக் கஷ்டம், வீட்டுக் கஷ்டம், இரண்டும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அவளை இழுத்துச் சென்றது. பிடவை ஆலை சம்பளம், இருப்பு எல்லர்வற்றையும் சுருட்டு எடுத்து கொழும்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரிடம் கொடுத்து ஏமாந்து நின்றவள். திரும்பவும் பிடவை ஆலைக்கு வேலைக்குப் போக வேண்டும்.

இந்த விபரமெல்லாம் தாய்க்காரி குமாரவிடம் சொல்லி ஆதங்கப்பட்டாள்.

அந்த நேரத்து சாயத் தண்ணீரும் கொஞ்சம் கருப்பட்டியும் குமாரவின் குளிரை விரட்டியது.

ஏஜென்சியிடம் ஏமாந்தவள் தற்கொலை செய்ய முயற்சித்தாள் என்பதை நினைக்கத் தயக்கமாகத்தான் இருந்தது.




நடந்தும், ஏறியும் இறங்கியும் - காலத்தால் அலுத்துப் போன அந்த படிக்கட்டுகளின் சறுக்கல்கள் இப்போது பயணப் பையுடன் இறங்கும் போது ஏனோ அந்நியமாகத் தோன்றியது. பின்னால் மெதுவாக இறங்கி வரும் கணவனை அவ்வப்போது திரும்பிப் பார்த்துக் கொண்டாள். சற்று அனுதாபியாகத் தெரிந்த கணவனின்

உதட்டோரங்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் சோகத்தை அவளால் காண முடிந்தது.

நண்பகல் பன்னிரண்டு மணியைத் தாண்டி நாழியாகி விட்டதால், கொடிமுட்டி தோட்டப் பெண் தொழிலாளர் வேலை விட்டு வந்து கொண்டிருந்தார்கள். "மீனாக்கா" - என்று தன் ஒரு கரத்தைப் பற்றியதில் ஏதோ ஒரு ஆறுதலான பிடிமானம் அவளுக்குள் பிரவாகமெடுத்தது.

"ஏய் மீனா! கொஞ்ச நாளக்கி எங்கள மறந்துருவ"

"இந்தாம்மா மீனா போற எடத்துல கவனமா. இது என்னென்னமோ பேசுறாக" இப்படிக் கூறியதும் "கவனமா இருக்கேன் ஆத்தா" என்று பதில் கூறினாள்.

தனது பதினைந்து வருட இல்லற வாழ்க்கையில் இப்போது இந்த ஒரு சில நாட்களில் அவளது முகத்தில் முதற்கோடாக முதுமைக்குரிய ஆரம்பம் தென்பட்டது. அந்த நிலையிலும் அவளுடைய பளபளப்பான முகத்தில் வியாபித்திருந்த இளமையை அந்தக் கோட்டினால் வெற்றி பெற முடியவில்லை.

"கோயிலுக்குப் போனியா மீனா" என்று தன்னோடு இணைபிரியாது வேலை செய்த கிரிசனா கேட்டாள். அவள் கத்தோலிக்கப் பெண்ணாயிருந்தாலும் மீனாவுடன் கோயிலுக்குப் போவது வழக்கம்.

மதங்களின் வேறுபாட்டை உணராது வாழும் தோட்ட சமூகத்திடையே மீனாவும் - கிரிசினாவும் அழுத்தமான உதாரணங்கள்.

கொஞ்ச நேரம் கிரிசினாவும் முகத்தையே பார்த்தாள். அவளைக் கட்டிப்பிடித்து ஓவென்று

அழவேண்டும் போல இருந்தது. பஸ் பிடித்து அட்டன் போய் தன் அக்காள் வீட்டில் இருந்து அடுத்த நாள் காலை கொழும்பு போக வேண்டும்.

"புள்ளங்கள ரெண்டு பேத்தையுங் கூட்டிட்டு வந்திருக்கலாம்" என்று தனது தோழிகளிடம் விடைபெற்று வந்த பின் கணவனிடம் கூறினாள் மீனா.

அட நீ ஒன்னு. அதேன் அந்த சேரு, புடிவாதமா இருக்காறே. புள்ளங்கள பள்ளிக் கோடத்துக்கு அனுப்பியே தீருனும்னு. நம்ப கஷ்டம் அவுங்குளுக்கு எங்க தெரியப் போவுது. என்னுமோ தெனமாம் புள்ளங்க ரெண்டு பேத்தயுஞ் சேத்துருக்காங்களாம்."

"தமிழ்த்தெனம் போட்டி" மனைவி மீனா அவனைத் திருத்தினாள்.

"என்ன தெனமோ நம்மகிட்டு கேட்டுக்கிட்டு சேத்திருக்கலாம்."

"அம்மா நிப்பாட்டுக்கு. அவுங்குளுக்குச் சரின்னு பட்றவங்களைத்தாஞ் சேப்பாங்க. ஸ்கூல்ல போயி ஒழுங்காப் படிச்சிருந்தா தெரியும்."

"ஏண்டி நீ எட்டாவது படிச்சிருக்கேங்கறதால என்ன கிண்டல் பண்றியா. எங்க என்னோட 'வஸ்தா' அடிக்க எந்த வாத்தியாரையாவது வரசொல்லு பாப்பம்" என்று அந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு வழிச்சவால் விட்டான் கணேசன். அவ்வப்போது தன் பெருமை பேசியே நாற்பதைக் கடந்துவிட்ட கணேசனின் பேச்சு மனைவிக்குக் கோபத்தையும், ஒரு அனுதாபத்தையும் உண்டாக்கியது.

'இந்தாங்க இப்படி ஏதாவது எடக்கு மொடக்கா பேசி தோட்டத்து ஆளுங்கள பகைச்சுக்க வேணாம். நமக்கு எல்லாரும் வேணும்.' எப்போதுமே அறிவுடன் பேசும் தன் மனைவியை ரகசியமாக தனக்குள் நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்வது வழக்கம்தான்.

'ரூபினியையும், பிரசாத்தியையுங் கவனமாப் பார்த்துக்கோங்க. எந்த நாளும் ஸ்கூலுக்கு அனுப்புங்க' பல பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கி ஆசி வாங்கிக் கொண்டு வந்தாலும் இன்னும் இரண்டு தினங்களில் 'சவூதி' என்ற தூர தேசத்துக்குப் போய் விடுவோம் என்ற பெருமூச்சு அவளுடைய மனதில் நிரந்தர சமாச்சாரமாகித்தான் இருந்தது.

வருவதைக் குடித்துவிடும் கணவன். எப்படியோ கணேசனிடம் புகுந்துவிட்ட குடிப்பழக்கத்தை அந்தப் பேதையால் மாற்ற முடியவில்லை. வாழ்க்கைச் சவால்களை எதிர் கொள்ள முடியாமல் எத்தனையோ குடும்பப் பெண்கள் வேகமாகப் பொருளாதாரத்தைத் தேடிக் கொண்டு கொஞ்ச காலமாவது 'ஜே ஜே' என்று வாழ்ந்து விட வேண்டும் என்ற துடிப்பு.

அந்த 'மினி' கடைவீதியில் பஸ் வண்டி எமக்கூட்டமாக வந்து நின்றது.

'ம்... நாடுவுட்டு நாடு போவும் போதாவது இந்த பஸ்ல நிம்மதியா போவ முடியுதா!' மீனா அலுத்துக் கொண்டாள். முண்டியடித்துத் தம்பதியர் ஏறுமுன் பெரும்பாடாகி விட்டது. எப்பவுமே அந்த நீள் சதுர பஸ் வண்டியில் உரிய பயணிகளைவிட மூன்று மடங்கு கூட்டம் இருக்கும். மக்களை ஏற்றிச் செல்லும் வண்டி என்பதை

விட திணித்துக் கொண்டு திமிறி ஓடும் வாயில்லா ஜீவன் என்பதே பொருத்தம்.

பின்பக்கக் கதவினூடாக ஏறியவர்களின் மனக் கஷ்டத்தை நடத்துநரின் வார்த்தைகள் மேலும் அதிகரிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

'பேக் தியலா யன்ன இசாறட்ட மே மினிசுண்ட கேரீன் னேனெ' நடத்துநரின் ஆதங்கம் அவனுக்கு அனைத்துப் பயணிகளின் ஆதங்கங்கள் பெருமூச்சாக வெளிப்பட்டுக் கொண்டிருக்க நமது நாயகனும் நாயகியும், அவர்களோடு சேர்ந்து நசுங்கினார்கள். தலவாக்கலை போகும் வரை இந்த தற்காலிக சிறைச்சாலையில் நிற்பவர்கள் ஒரு பொதுத் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். தேசிய வியாதியாகிய இதில் மூழ்காத பஸ் பயணிகளே நாட்டில் இல்லை.

தான் கொழுந்தெடுத்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது என்ற நிலை வந்த போதெல்லாம் வெளிநாடு சென்று வேலை செய்ய வேண்டும் என்று முனைந்ததில்லை. இது விபத்தாக தன்னோடு வேலை செய்த கைம்பெண் கமலா சவூதி வந்து கொடுத்த ஆலோசனையுடன் கூடிய பணவுதவியும் சேர்ந்து மீனாவை இந்த வியாதி பிடித்தது.

மற்ற பெண்களிலிருந்து வித்தியாசப்பட்டு வாழும் மீனாவுக்குக் கோயில் குளம் விரதம் என்று தன் கலாசாரத்தை முறையாகக் கடைப்பிடிக்கும் ஒரு சராசரிப் பெண். இதுவே இப்போதைய பிரச்சினையாகத் தலையெடுத்து நின்றது.

பஸ் வண்டி தலவாக்கலை போய்ச் சேர்ந்ததும் தம்பதியருக்கு விடிவு கிடைத்தது. இப்படியான பயணம் பழக்கப்பட்டதாக இருந்தாலும் இருவருக்கும் இன்று மனம்

வலித்தது. மீனாவுக்கு அந்த பஸ் நிலையம் புதிதாக இருப்பது போல இருந்தது. எல்லோருமே இப்படித்தானோ? பலபல ஆதங்கங்களைச் சுமந்தே பயணம் செய்கிறார்களோ?

தம்மை அழைத்துச் செல்லவரும் முகவர் ஒரு நாள் தாமதித்து வருவதாக தொலைபேசி செய்தி வந்திருந்தது.

டிக்கோயா தரவளை தோட்டத்து அழகும் நாகரிகப் பிரதேசமும் எப்போதுமே மீனாவுக்குப் பிடிக்கும். தன் அக்காள் வீட்டுக்குப் போவது அவளுக்குத் தாய்வீட்டு அனுபவம் தான்.

'வாம்மா மீனா, வா வா' என்று தன்னை விட பத்து வயது மூத்த அக்கா ஜெகம் ஓடிவந்து அவளுடைய பயணப்பையை வாங்கிக் கொண்டாள். பெருமாள் தலைவர் என்றால் அந்தப் பிரதேசத்தில் பிரசித்தம். தொழிற்சங்க பலம் மலையகத்தில் தலைதூக்கி நிற்கும் புதுயுகத்து தொழிலாளர் தலைவர்களுக்கு எங்கேயும் மவுசுதான். அந்த வகையில் மீனாவின் மாமா பெருமாள் தலைவருக்கு ஒரு செல்வாக்கு இயற்கையாக இருந்தது. இது ஒரு யதார்த்தமான ஏற்றம்தான்.

"வா மீனா... என்னா செய்றது இங்கய நல்லா இருக்க முடியில. அதுனால வெளிநாடு போற. எனக்குன்னா விருப்பமில்லதேன். ஒம்புருசங்காரன் ஒரு போக்கிரிதான். எங்க தோட்டத்துல நீங்க இருந்தா ஒன்னய சவுதி போகவுடறதில்ல'' என்று மீசை முறுக்கிக் கூறியது அப்போதைய சூழலை மறுக்கும் சமாச்சாரமாக இருந்தது.

'நா... என்னா பண்றது. மாமா அவுருக்கு நல்லா சொல்லுங்க. புள்ளங்கள பாத்துக்கங்க மாமா!' என்று கெஞ்சுவது போல் கூறினாள்.

தரவளையில் அன்று இரண்டு மணிக்கே வேலை விட்டு விட்டார்கள்!

சரி மீனா நீத்தாம் பாத்துருப்பிய. முன்னுக்கு எல்லா சோடிச்சிருக்காங்க. காலயிலிருந்து வேல.

“பாத்தேம் மாமா” என்று சொல்லிவிட்டு தன் பிள்ளைகளை நினைக்கத் தொடங்கினாள். மீனாவுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அந்தி வானம் அழகு காட்டி மினு மினுத்துக் கொண்டிருந்தது. தரவளை விழாக்கோலம் பூண்டிருக்கிறது என்றே முணு முணுத்தார்கள்.

“யாரோ சாமியாராம். வராக” - என்றார் ஒரு பெரியவர்.

“ம்... அவுரு சாமியாரு இல்ல... பகுத்தறிவாளர்” என்று ஆசிரியர் கூறினார். அட்டன் கல்லூரி தமிழாசிரியர். தோட்டத் தொழிலாளரின் விழாவுக்கான உற்சாகம், அவர்கள் இருபத்தோராம் நூற்றாண்டு மனிதர்கள் என்பதை நிரூபித்தது. நகர்ப்பகுதிகளுக்கு மட்டுமே வருகை தரும் அறிஞர்கள் தோட்டப் பகுதிக்கு...! நல்ல மாற்றம் தான் என்று சிலர் சொல்லத் தொடங்கினர்.

அப்பால் மீனா தரவளை லயத்து எல்லைக் காம்பராவில் கண்ணீர் மல்க உட்கார்ந்திருந்தாள்.

“ஏ மீனா... என்னா அப்புடி ஒக்காந்திருக்க. தேத்தண்ணியக் குடி. ஊத்தி எம்புட்டு நேரம் ஆச்சி” என்று அக்காள் கூறியதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவளுடைய அவஸ்தையெல்லாம் தன் பிள்ளைகள் நினைவுக்குள் தஞ்சமடைந்து விட்டது.

“இந்தாம்மா தேத்தண்ணியக் குடி அப்பறம் மத்தத பாக்கலாம்” மீசைக்கார மாமா கூறியதும் தலை நிமிர்ந்தாள்.

“எங்க ஓம்... மாப்பிள... டிக்கோயாப் பக்கம் போயிட்டானோ. இன்னக்கிக் கூடவா” என்றான் பெருமாள்.

“ஆமா. ஒங்க தம்பிக்குக் கவலய மறக்க வேணுமே.. பெஞ்சாதி வெளிநாட்டுக்கு போற கவல...” பெருமாளின் மனைவி கூறியதையும் மீனா காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஒலிபெருக்கி இவ்வளவு நேரமும் சினிமாப் பாட்டுகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தது.

“ஆடாதடா ஆடாதடா மனிதா” என்று பாடலுக்கிடையே பொலித்தீன், கடதாசி அலங்கார தோரண இதழ்கள் அழகாக ஆடிக் கொண்டிருந்தது மிகப் பொருத்தமான அபிநயமாக சூழலை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. தூரத்தே தெரியும் விளையாட்டு மைதானம் அதற்கு மாலை போட்டது போல சுழித்தோடி வரும் சிற்றாறு, தேயிலைச் செடிகளின் அணியணியான படையெடுப்பு... இத்தனையும் சேர்ந்து தரவளை ஒரு புது உலகமாகத் தோன்றியது.

அப்போது ஒலிபெருக்கியில் ஒரு குரல் ஒலித்தது.

“தோட்ட அன்பர்களே, நமது பிரதம அதிதி தமிழறிஞர் மேடைக்கு வருகை தந்துவிட்டார். எல்லாரும் மைதானத்துக்கு வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்”

மேடைக்கும் பெருமாள் தலைவர் வீட்டுக்கும் அதிக தூரமில்லை.

"வா. மீனா, கூட்டத்துக்குப் போவம்."

"நீ போக்கா நா இங்கேயே இருக்கேன்."

கண்டிப்பாக மறுத்து விட்டாள்.

"சரி, சரி வூட்டுல இரு. ஓ மாப்பள வந்தா கூட்டத்துக்கு வரச்சொல்லு. அவுரு ஓடிட்டாரு, முந்தியே. பயலுக எல்லாம் பகலைக்குப் போனவெங்கத்தான். நீ வந்து இம்புட்டு நேரம் ஆச்சி அவுனுகல கண்டியா!"

"இப்புடித்தான் எந்த நாளும்" என்று அலுத்துக் கொண்டு வெளியேறினாள்.

சற்று நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

"தொர கதவ, மீனா" - அக்காவின் குரல் கேட்டது.

"ஏக்கா போயிட்டு வந்துட்ட."

"ஓ மாமா என்னா... நல்லா ஏசிட்டாரு, ஒன்னய ஏங் கூட்டீட்டு வருலன்னு. பொறப்புடு. பொறப்புடு. கதவ பூட்டீட்டு போவம்" என்று துரிதப் படுத்தினாள். ஒலிபெருக்கியில் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பது கேட்கக் கூடியதாக இருந்தது. எங்கும் இரைச்சல்கள்.

தரவளை தோட்டத் தொழிலாளர்கள் வருடாந்த தேர்த்திருவிழாவை மட்டுமே கண்டிருந்த காலம். முதல் தடவையாக ஒரு அறிவு விழா. வந்திருந்த அதிதி ஒலிபெருக்கி முன்னால் நின்று பேசத் தொடங்கினார்.

"ஏய் சத்தம் போடாதிங்க ஸ்ஸ், ஸ்ஸ்" - என்று சிறுவர்கள் பகுதியை நோக்கி அவ்வப்போது கத்திக் கொண்டிருந்த பெருமாள் தலைவர் மாமா மீது கோபமாக வந்தது மீனாவுக்கு.

இப்போதைய கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அலசிக் கொண்டிருந்த புரவலர், அவர் ஒரு இடத்தில் சொன்ன விஷயம் மீனாவை உலுக்கியது. ஒரு மூலையில் குடிபோதையில் நின்று கொண்டிருந்த மீனாவின் கணவன் கணேசனின் மனதில் தீப்பொறியாக விழுந்து கனன்றது.

"...யாருக்குக் கஷ்டம் இல்ல?... எல்லா ஜீவராசிகளுக்கும் கஷ்டம் தான். காக்கையுங் குருவியும் த ண்ணீர் குடிக்கப்போவுது. தண்ணீர் எங்குமே இல்ல. இடிஞ்சி போயி ஒக்காருதா? வண்டுகள் தேன் குடிக்க பூவுள்ள செடிகளுக்குப் போவுது. அந்தச் செடியில மருந்து தெளிக்கப்பட்டிருக்குது. நஞ்சுன்னு தெரிஞ்சி அதை தவிர்த்து வேறு செடிக்குப் போவுது. செடிகளைத் தவிர்த்துவிட்டு மரங்களில் உட்கார்ந்து தனது சுத்தமான உணவுக்கு ஒரு நல்லவிதமான தேடல்... ஏன் மனிதன் நல்ல விதமா... தேடக்கூடாது? நஞ்சுன்னு அந்த சின்ன உயிருக்குக் கூடத் தெரியுது. அதுன்னு தெரிஞ்சும் பகுத்தறிவு படைச்ச மனிசன் மட்டும் ஏன் மதுவுக்கு அடிமையாகுணும்? அது நஞ்சுன்னு ஏன் மனிசனுக்குத் தெரியில... யோசிங்க... ஒடம்புக் கஷ்டம். பணக்கஷ்டம். பிள்ளைகளுக்கு சாப்பாடு ஒழுங்கா குடுக்க முடியல. படிப்பு குடுக்க முடியில. நம்ம வருமானம் பத்துல. இதுக்கு ஏன் இடிஞ்சி போயி ஒக்காறனும்? கணவன் மனைவி இருவருஞ் சேர்ந்து சிந்தியுங்க. இருபத்தி நாலு மணித்தியாலம் இருக்கு. ரெண்டு மணித்தியாலத்த

மேலதிகமா எடுத்து ஒழையுங்க. முடிஞ்ச வரைக்கும் சிக்கனமா இருங்க. ஒவ்வொரு நாளும்! ஆமா ஒவ்வொரு நாளும் கணவன் மனைவி சேர்ந்து திட்டமிடுங்க. ரெண்டு வருடத்தில ஒங்க பிரச்சின தீந்திடும். ஒங்க பிள்ளைகளும் ஒங்கள இயற்கையா கடைப்பிடிக்கத் தொடங்கு வாங்க...ம்....தயாரா... இன்னிக்கே ஆரம்பியுங்க... ஒங்க வாழ்வின் வெற்றி நிச்சயம்...'' இப்படிப் பேசிய புரவலரின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும் என்று எல்லாருமே நினைத்தார்கள்.

* * *

கணேசன் தம்பதியர் தரவளைக்குப் போய் புரவலரின் பேச்சைக் கேட்டு பத்து நாட்களாகி விட்டன.

அன்று வெள்ளிக்கிழமை கணேசன் எழுந்திருக்க ஏழு மணியாகி விட்டது.

''அடடே நேரம் ஆயிருச்சே'' சுறுசுறுப்பாக எழுந்தான்.

''சீக்கிரம் எந்திரிச்சு மொகத்த கழுவிட்டு வாங்க. சாயம் ஊத்தி வச்சிருக்கேன்'' என்று மீனா துரிதப்படுத்தினாள்.

''இந்தா வந்துட்டோம்மா'' என்று அதிகாலை எழுந்து குளித்துவிட்டு தன் முன்னே சுறுசுறுப்பாக இயங்குவதைப் பார்த்து கணேசன் ஒரு குழந்தையைப் போல ஓடினான்.

''சிந்திக்கும்போது தான் தெளிவு பிறக்கிறது என்ற கோட்பாட்டுக்கு இந்தப் பாமரத் தம்பதியர் ஒரு உதாரணம். அந்தப் புரவலர் மக்கள் செறிந்த தரவளைக் காற்றில்

எத்தனை லாவகமாக அமிர்தத்தைக் கலந்தார். அது ஒரு தம்பதியரையாவது மாற்றியிருக்கிறதே! அடுத்த வீட்டு அக்காவுடன், கிரிசினா கூடையைச் சுமந்து ஓடிவந்தாள்.

*"மீனா வாரியா"*

"இந்தா வந்துட்டே கிரீசி" என்று கொழுந்துக் கூடையை லாவகமாக தன் முதுகில் சுமந்து தோழிகளைப் பின் தொடர்ந்தாள்.

"இந்நேரம் நீ வெளிநாட்டுக்குப் போயிருந்தா..." ம். நெனக்கவே பயமா இருக்கு. நாங் கும்பிட்ட சாமி காப்பாத்திரிச்சி."

"வெளிநாடு என்னா. இருக்கிற எடத்திலய நல்லா இருக்கலாமே" - அடுத்த வீட்டு அக்காள்.

☆

# அந்நிய அழகை

தொடு வானத்தின் அடிப்பாகத்துடன் உறவாடும் கடல் எல்லையைக் கூர்ந்து பார்த்த எலிசாவின் தீர்க்கமான கண்கள் எதைத் தேடுகின்றன? பரந்து கிடக்கும் சமுத்திர-வான சேர்க்கைக்கு அப்பால் நிலவும் உயிரோட்டமான ஜீவனையா? எப்படியோ பார்வையில் ஒரு தீர்க்கம். ஒரு ஆழம். தன்னை மறந்த ஞானம்.

'ஒவ்வொரு வாழ்க்கையின் பின்னணியிலும் எத்தனை ரகசியங்கள்' இப்படி நினைத்துக் கொண்டே திரும்பினாள். தான் தங்கியிருக்கும் 'தாஜ்' ஓட்டல் அறை பளிங்குச் சுவர் தேக்கு மேசைகள், எலக்ட்ரானிக் தொலைபேசி. பைல்கள், கடிதங்கள் கூடவே 'பைரனின்' நூல்கள்! தன் எண்ணங்கள் சிறுத்து விட்டது போன்ற பிரமை. மீண்டும் தன்னை விசாலப்படுத்திக் கொள்ள ஜன்னல் பக்கம் வந்து 'கால்பேஸ்' திடலையும் கடல் அலைகளையும் பார்க்கத் தொடங்கினாள்.

காலைச்சூரியன் தீவிரமாக மேலெழுந்து பிரகாசிப்பதைப் பார்க்க உற்சாகமாக இருந்தது. உயிரோட்டமுள்ள அழகு! அந்த எழுச்சியைப் பார்த்து அவற்றை அப்படியே அள்ளி மனதுக்குள் போட்டுக் கொண்ட திருப்தியோடு திரும்பியவளின் காதுகளில் 'கிளிங், ணங்' என்று டெலிபோன் மணியோசை விழுந்தது.

"யெஸ்" என்று நீள்சதுர ரிசீவரைப் பிடித்தபடி கேட்டாள்.

"குட்மானிங் மேடம்" என்று மறுமுனையிலிருந்து 'டிராவலிங்' காரியாலயத்திலிருந்து பதில் வந்தது.

. "சரியாக எட்டு மணிக்குக் கார் வரும்" - என்று மறுமுனையிலிருந்து பேசும் போது, எலிசாவின் செயலாளர் வந்துவிட்டார். தனது 'செக்கரட்டரி' ராயனிடம் ரிசீவரை கொடுத்து விட்டு மீண்டும் ஜன்னல் பக்கம் போனாள்.

ராயன் கார் நம்பர் ஏனைய விபரங்களைக் குறித்துக் கொண்டு ஏற்கனவே தமக்குக் கொடுக்கப்பட்ட 'ட்ராவலிங்' அட்டவணையோடு ஒத்துப் பார்த்துக் கொண்டு பைல்களைப் புரட்டினார்.

குறிப்பிட்ட சில காகிதங்களைப் பிரித்துக் கொண்டே ஓரக்கண்ணால் தன் எஜமானியைப் பார்த்தார். புரிந்து கொள்ள முடியாத புதிர் போலத்தோன்றியது எலிசாவின் செய்கைகள். இங்கிலாந்து, நொட்டிங்காமிலிருந்து திடீரென - ஒரு வார கால அவகாசத்துக்குள் இலங்கை செல்ல வேண்டிய ஏற்பாடுகளை அறிவித்தாள், எலிசா. இந்த ஐம்பத்தைந்து வயதுப் பெண்ணுக்குத் திடீரென என்ன வந்தது என்று எல்லாரும் வியக்கும் அளவுக்கு வேகமாக ஒரு பயணத்துக்குத் தயாரானாள். இத்தனைக்கும் நொட்டிங்கம், பெல்பாஸ்ட், போன்ற நகரங்களில் எலிசாவுக்கு நிறைய 'புரோகிராம்' இருந்தன. அத்தனையும் ரத்துச் செய்துவிட்டு...? "மேடம் மணி ஆறரை" என்று ஞாபகப்படுத்திவிட்டு சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினார், ராயன். அவரும் எலிசாவைப் போலவே முதல் தடவையாக இலங்கை வந்துள்ளார். தேனீர் மேசை சைகை காட்டியது. தேனீரைக் கலக்கி உறிஞ்சும் போது எலிசா தன் தந்தையை நினைத்தாள். அவரும் ஒரு காலத்தில் தேயிலை உற்பத்தியில் சம்பந்தப்பட்டுப்

பணியாற்றியவர் என்பதே அவள் மனதில் நிறைந்திருந்தது. 1940களில் தன் தந்தை இலங்கையில் வாழ்ந்திருந்ததைக் கற்பனையாக நினைத்துப் பார்த்தாள்.

"ஆ...டடாவின் டயரி" ஐம்பது வருடங்களாக என் கண்ணில் படாமல் போய்விட்டதே."

"டெஸ்போட்!" - தந்தையின் தேயிலைத் தோட்டம். பலமுறை தனக்குள் கூறிக் கொண்டாள்.

"மிஸ்டர் ராய்" என்று கடலைப் பார்த்துக் கொண்டே அழைத்தாள். மீண்டும் கடலலைகள் வெள்ளிச் சிதறல்களை வீசிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

"எஸ் மேடம்" - பைல்களுடன் வந்தார்.

"நுவரஎலியாவில் அது என்ன ஹோட்டல்"

"கிராண்ட்"

"ஆமாம். அங்கு போனவுடன் டெஸ்...டெஸ்... டெஸ்போட்டுக்குப் போகிற ஏற்பாட்டைச் செய்து விடுங்கள்."

"ஓகே மேடம்" ராயனின் நெற்றிச் சிந்தனைக் கோடுகள் சமீப நாட்களாக அதிகரித்திருந்தன. அவை இப்போது தீவிரமாக இயங்கத் தொடங்கின.

காலை நேரம் வேக கெதியில் கழிந்து கொண்டிருந்தது. கால்பேஸ் திடலுக்கும், தங்கியிருக்கும் தாஜ் ஹோட்டலுக்குமிடையிலான சாலையில் வாகனங்கள் மூஸ், மூஸ் என இடைவெளியில்லாமல் ஓடிக் கொண்டிருந்தன.

அறைச் சேவகன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான். சூரியனின் தீவிர கிரணங்கள் கடலலைகள், கால் பேஸ், தார் ரோடு எனப் பரந்த நிலையில் எல்லாவற்றிலும் ஆட்சி செய்யத் தொடங்கியது.

பைரனின் புத்தகத்தைப் புரட்டி இரண்டு வரிகள் வாசிக்கத் தொடங்கினாள். அதிலும் தன் மனம் நிலை பெறவில்லை.

சரியாக எட்டரை மணிக்கு 'டிராவலிங் ஏஜன்சி' காரில் அமர்ந்தாள் எலிசா, தன் காரியதரிசியுடன். அந்த சொகுசுக் கார் மெதுவாக நகர்ந்து கால்பேஸ் சூழலை, எலிசாவிடமிருந்து பிரித்தெடுத்தது.

கொழும்பு நகர வாகனச் சிக்கல்களிலிருந்து மீள்வுதற்குள் அரைமணித்தியாலம் அபகரிக்கப்பட்டு விட்டதை, எலிசா உணர்ந்தாள்.

கார் சங்கராஜ மாவத்தையைத் தாண்டியதும் எலிசா தன் தந்தையின் நாற்பத்தியிரண்டாம் ஆண்டு டயரியைக் கையிலெடுத்தாள். கிறுக்கல் கையெழுத்துக்களால் எழுதப்பட்டிருந்த அந்த நாளைய நிகழ்ச்சிகள்! அவை வெறும் நிகழ்ச்சிகளா? இல்லை. ரகசிய வரலாறு. தன்னை உடனடியாக இலங்கைக்கு இழுத்துக் கொண்டு வந்துவிட்ட உயிரோட்ட வாக்கியங்கள். தன் சூழலையும், தன்னையும், தன் குழந்தைகளையும், தனது சொத்து சுகங்களையும் மறக்கச் செய்துவிட்ட காலச் செய்திகள்.

அந்தப் பெரிய டயரியைப் பிரித்துப் பக்கங்களைப் புரட்டிய போது தேயிலைத் தோட்டம் என்ற தலைப்பு பின்னலிட்டது.

நவம்பர் மாதம் முழுவதும் நாட்குறிப்பு ஏதும் எழுதாமல் தனது வாழ்க்கை நிகழ்ச்சிகளையே கோர்த்துக் காட்டியிருந்தார். அந்தக் கோர்வைக்குள்ளே நுழைந்து மீண்டும் சங்கமமானாள் எலிசா.

* * *

தார்ப்பாச்சி வேஷ்டியுடன் ஒத்துழைக்க மறுத்த கருப்புக் கோட்டைச் சரி செய்து கொண்டே "எஸ் சார்!" என்று துரையினது அறைப் பக்கம் ஓடினார் பெரிய கிளார்க் ஜேக்கப்.

"மிஸ்டர் ஜேக்கப்... யாரு இந்த குப்புசாமி. அவனால நம்கு ரொம்ப தொல்ல... அவன் ஸ்டோருக்கு மாத்துணும்." - ஜேக்கப்புக்கு சிரிப்பும், ஆச்சரியமும். கணக்கப்பிள்ளையிடம் தமிழில் பேசிய ஞாபகத்தில் தன்னிடமும் தமிழில் பேசுவது வியப்பாகத் தான் இருந்தது.

"ய்யே... புட் ஹிம் இன் த பாக்ட்ரி..." மீண்டும் ஒருமுறை அழுத்தமாகச் சொல்லிவிட்டுத் தலையைத் தாழ்த்தி சிந்திக்கத் தொடங்கினார் துரை நோர்மன். மீண்டும் ஒரு 'யெஸ் சார்' போட்டு விட்டுப் பெரிய கிளார்க் தன் மேசைக்குத் திரும்பிவிட்டார். பென்சிலைத் தன் மோவாயில் தட்டிக் கொண்டே சிந்தித்த பெரிய துரைக்குப் போதுமான அவகாசம் - குப்புசாமி விடயத்தில் கிடைக்காமற் போய் விட்டது.

அடுத்த நாள் காலை வழமையாகத் தொழிற்சாலைப் பக்கமாகத் தன் 'போர்டு' காரைச் செலுத்தினார்.

'மெயின் ரோடில்' தார் போடும் வேலை நடந்து கொண்டிருந்தது. கல் அமர்த்தும் அந்தப் பூத வாகனம் ஆமை நகர்வது போல. கருங்கற்கள், நெறிபடும் சத்தம். வாகனத்தின் 'கடபுடா' என்ற இரைச்சல். தூரத்தே தார் பீப்பாக்களை உலர்த்துவதால் உண்டாகும் புகை மண்டலம் எல்லாமாகச் சேர்ந்து நோர்மன் துரையை எரிச்சல் கொள்ளச் செய்து கொண்டிருந்தது.

நல்ல வேளை போர்டு கரின் ரெட்டு போடப்பட்டிருந்தது. சாலைத் தொழிலாளர்கள் தம்

தலைப்பாகை, தலைத்துண்டுகள் ஆகியவற்றைக் கழற்றி துரைக்கு 'சலாம்' வைத்தனர். தலையை ஆட்டிக் கொண்டே மெதுவாகச் செலுத்தினார்.

சிண்டாகட்டி மலையைத் தாண்டி ஓடியது. சற்று சரிவான தோட்டச்சாலை. எச்சரிக்கையா ஓட்ட வேண்டியிருந்தது. சவுக்கு மரங்கள் காவல் காக்கும் சிண்டாகட்டி மலையின் தேயிலைச் செடிகள் துரையைக் கவர்ந்த நிறையாகும்.

"செலாந் தொர" என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார்.

தனக்குப் பிடிக்காத அதே மனிதன். கையிலிருந்த கத்தியை மறைத்துக் கொண்டு நின்றான். குப்புசாமி நிற்கும் தோரணையில் ஒரு நடிப்பு தெரிந்தது. அதன் பின்னணியில் ஒரு வெறி இருப்பது போல துரைக்குத் தோன்றியது. வழமைபோல தலையை இலேசாக அசைத்து விட்டுக் காரைச் செலுத்த ஆரம்பித்தார். சுமார் அரை மைல் கடந்ததும் எதிர்ப்படும் முதலாவது லயம். அந்த லயத்தில் முதலாவது வீடு. அந்த வீட்டு லைசன் கல்லில் நின்று கொண்டு தனக்குக் கையசைக்கும் அந்தக் குழந்தை. எப்போதும் போல அவ்விடத்துக்கு வந்ததும் தன்னையறியாமல் திரும்பிக் கையசைத்து அந்தக் குழந்தைக்கு மகிழ்ச்சியூட்டினார்.

நேராகத் தொழிற்சாலையை அடைந்த துரையைக் கண்டதும் "குட் மானிங் சார்" என்று தனது சுறு, சுறுப்புக்கு மத்தியில் டீமேக்கர் மரியாதை செலுத்தினார்.

"மிஸ்டர் வீரபுத்ரன் அந்த குப்புசாமி... அதுதான்.. கிளாக்கர் சொல்லியிருப்பாரே"

“ஆமாம் சார். இங்கே வேலைக்கு வந்ததும் கடுமையாக நடத்தச் சொன்னார். அதன் படியே கவனிக்கிறேன் சார்.”

“நல்லது அப்படியே செய்யணும்” - இப்படி துரையும், டீமேக்கரும் ஆங்கிலத்தில் உரையாடியது வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர் சிலர் காதுகளிலும் விழுந்தது.

“ஏய்... அந்த குப்பு பய என்னுமோ தொரக்கிட்ட சவடால் வுட்டுருக்கான்” - மேட்டு லயத்து முத்துவின் வார்த்தைக்கு பதில் சொல்லாத முனியன் கண்களால் தூரத்தில் திரும்பி நிற்கும் இரண்டாவது டீமேக்கரைக் காட்டிவிட்டு, அந்தப் பூத அடுப்பின் ‘சேம்பர்’ பகுதியின் முகப் பகுதியில் வந்து விழும் தேயிலைப் பெட்டியில் மெதுவாகக் கை வைத்துத் தூக்கி பக்கத்தில் நிற்கும் ‘ட்ராலியில்’ போட்டான். முன்மொழிந்த முத்து அக்கம் பக்கம் பார்த்து தன் கன்னங்களை ஊதி உதட்டைப் பிதுக்கி விட்டு டிராலியைத் தள்ளிக் கொண்டு சல்லடைக் காம்பரா பக்கமாக நகர்ந்தான்.

வெள்ளைக்கார துரைமாரின் கண்டிப்பான நிர்வாகத்தில் சுதந்திரமாக அபிப்பிராயங்கள் சொல்வது தொழிலாளரைப் பொறுத்தவரை நெருப்பைத் தொடுவது போல. குப்புசாமிக்கு என்ன நடக்குமோ என்பது பற்றி கவலைப்பட முடியாது. துரையை எதிர்த்து விட்டது மாபெரும் தவறு என்பதே எல்லாருடைய உடன்பாடான உணர்வு. ‘ஏதோ தெண்டம் கட்டாமல், வேலை நிறுத்தத்துக்கு ஆளாகாமல் தப்பித்தான்’ என்பதே ஒரு பொதுவான திருப்தி. ஏனென்றால் நோர்மன் துரையின் கண்டிப்பு சற்று வித்தியாசமானது. குற்றம் செய்பவர்களை கடுமையான வேலை கொடுத்தே தண்டிப்பது.

ஸ்டோர் வேலை விட்டு தொழிலாளர் வெளியேறினார்கள், பகல் சாப்பாட்டுக்காக.

“அப்படா சாமி... எமங்கிட்டருந்து தப்பிச்சி வந்த மாறி இருக்குடா” என்றார் கண்ணையா.

“ஆமா... கண்ணு” மலைக்குப் போனா கணக்கன் எமென். ஸ்டோருக்கு வந்தா.... ஐயா எமென். ஆபிசு பக்கம் போனா கௌாக்கரு எமென்” - என்று வேலுச்சாமி சத்தம் போட்டுச் சொன்னான். அவனுடைய ஆய்வுப் பிரகாரம் எல்லாத் தொழிலாளர்களும் எல்லா அதிகாரிகளின் பொறியில் அகப்பட்ட எலிகளைப் போலத்தான் என்பது தெளிவாகிக் கொண்டிருந்தது.

பகல் பன்னிரண்டு மணி வரை வெறிச்சோடிக் கிடக்கும் தோட்ட லயங்கள் அதன் பிறகு ஒரு மணிவரை அகோர இயக்கம் குடிகொள்ளும். புஸ்ஸென்று நீர்க்குழாய்கள் சத்தமிட அதனைத் தொடர்ந்து தண்ணீர்க் குடமேந்தும் பெண்கள் சத்தமிட, தொழிலாளர்கள் கசமுசா என்று பேசிக் கொள்ள, சிறுவர்கள் ஓலமிட அப்பப்பா - வாழ்க்கைப் போராட்டத்தின் ருசிகரமான மத்திய கட்டம்.

அப்பால் பங்களாவை அடைந்த துரை நோர்மன் பகலுணவை எடுப்பதற்கு முன்னால் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வந்திருந்த காலாண்டு சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

மனைவி நான்சி மேசையிலமலர்ந்து கணவன் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

“சாப்பிட்டு விட்டு சஞ்சிகையைப் பார்க்கலாமே” என்று நான்சி குரல் கேட்டு நிமிர்ந்தார் நோர்மன்.

“நல்லது” என்று ஆங்கிலத்தில் கூறிக் கொண்டே எழுந்தவரை நிமிர்ந்து பார்த்தாள். கணவன் முகத்தில் கடுமை தெரிந்தது.

“ஏன் ஏதும் தொழிலாளர் பிரச்சினையா?”

“ஆம் இவர்களிடம் வேலை வாங்குவதே பிரச்சினை தானே.”

“ஏன் இன்று அந்தக் குழந்தை தென்பட வில்லையா?”

“பார்த்தேன். கையசைத்தேன்” சற்று ஆறுதலாகச் சொல்லிக் கொண்டே கைகளைக் கழுவினார்.

தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நிர்வாகத்தைப் பற்றிய விமர்சனமும், தொழிலாளர் பற்றி துரை பங்களாவில் விமர்சனமும் தினசரி ரீதியாக நடக்கும் அம்சங்கள். ஆனால் இரண்டு விமர்சனங்களும் ஒன்றையொன்று சந்தித்துக் கொள்ளவில்லை.

தொழிலாளர் மத்தியில் ஒரு பயம், பக்தி. கம்பெனி நிர்வாக மத்தியில் கௌரவம்.

ஆகவே பயமும், கௌரவமும் ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத அம்சங்கள் தானே.

“அம்மாயி!” என்று அந்த ஐந்து வயதுச் சிறுமி வள்ளி ஓடி வந்தாள்.

“ஏங்கண்ணு” என்று வாரியணைத்து மடியில் வைத்து ரொட்டியைத் திணித்தாள் அந்தப் பெரிய அம்மாள்.

“சாப்புடு கண்ணு!” - நா வேலக்கிப் போவுணும்” - வள்ளி உற்சாகமாக ரொட்டியை மென்றாள். வள்ளியின்

நல்ல நிறம், துருதுருத்த கண்கள் எல்லாரையும் கவர்ந்த மாதிரி துரையையும் கவர்ந்து விட்டதில் ஆச்சர்யமில்லை. அவள் தாய் பேறு காலத்துக்காக பதுளைக்கு அம்மா வீடு போயிருந்தாள்.

தோட்ட வாழ்க்கை இயந்திர கதியிலே கழிந்து கொண்டிருந்தது. முரடன் என்று பெயரெடுத்து விட்ட குப்புசாமி 'ஸ்டோருக்கு' வேலைக்காக வந்துவிட்டான். வீரபுத்திரன் டீமேக்கர் ரோதை காம்பராவில் போட்டு இடுப்பை ஒடித்தார்.

ஆமாம்! குப்புசாமி தொழிற்சாலையில் புகுந்து மூன்று தினங்கள் இருக்காது. அந்த அகோரம் நடந்தது!

"அய்யா... பெரியய்யா" என்று தொழிலாளி கந்தன் ஓடி வந்தான்... அவனுடைய கைகால்களில் ஒரு உதறல். சாப்பிடப் போன வீரபுத்திரன் "என்னப்பா சொல்லு... என்னா நடந்திச்சி" என்று அதட்டினார்.

"வந்து... வந்து... குப்புசாமி... குப்பு பய"

"ஆமா குப்பு பயலுக்கு என்னா?" - மேலும் அதட்டினார்.

"அங்க... ஸ்டோருல வந்து பாருங்கய்யா" என்று ஓடிவிட்டான். வீரபுத்திரன் சாப்பாட்டைத் தொடாமல் ஓடினார்.

"ஸ்டோரில்" புகுந்ததும் கப்பென்று வாயடைத்து நின்றார்! தொழிலாளர்கள் சூழ்ந்து விட்டார்கள். எல்லாருடைய கண்களுக்கும் ஒரு திகில் காட்சியாக குப்புசாமி கால்கள் துண்டாடப்பட்ட நிலையில் கூரை அலவாங்கில் ரத்தம் ஒழுக தொங்கிக் கொண்டிருந்தான்.

தவறுதலாக பெல்டில் அகப்பட்டு அது அவனைச் சுருட்டிக் கொண்டு போய் அலவாங்கில் மாட்டி விட்டது.

ஸ்டார்ட்டர் பட்டனை அமுக்கி மோட்டாரை நிறுத்துவதற்கு முன் கைகால்கள் துண்டாடப்பட்டு விட்டன.

"ஆயா, அய்யா! சாமி... என்னா அநியாயம்" - என்ற ஓலங்கள் எங்கும் கேட்டன.

"ஹலோ... ஹலோ..." டீமேக்கர் தொலைபேசியை அடித்து, அடித்து மேலும் 'ஹலோ'க்களைப் போட்டு ஆபீஸோடு தொடர்பு கொள்ள முயன்றார். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மூன்று மைல்களுக்கு அப்பால் இருக்கும் டெஸ்போட் தோட்டக் காரியாலயத் தொடர்பு கிடைத்தது. கம்பெனி சட்டப்படி தோட்டத்தில் எது நடப்பினும் காரியாலயத்துக்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.

"சார்... இங்க... வீரபுத்ரன்... வந்து... வந்து... குப்புசாமி... பெல்ட்... எக்சிடன்ட்ல... ரொம்ப ஆபத்தான கட்டம்... வந்து... வந்து" வாய் உளறிப் பேசினார். விடயத்தை எப்படியோ சொல்லிவிட்டாலும் விளக்கமாகக் குறிப்பிட முடியவில்லை.

எல்லாரும் ஓடி வந்து தொழிற்சாலையை நிறைத்தனர். அல்லோல கல்லோலத்துக்கிடையே குப்புசாமியின் உயிரற்ற உடலையே இறக்கினர்.

இருபத்து நான்கு மணித்தியாலத்துக்குள் எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

'டெஸ்போட்' தோட்டத் தொழிற்சாலையில் அடிபட்டு ஒரு உயிர் போய்விட்டது என்ற செய்தி பக்கத்துத் தோட்டத்துக்கும் பரவி விட்டது.

துரையின் அழைப்பு கேட்டு "எஸ் சேர்" என்று தனது கோட்டைச் சரி செய்து கொண்டே ஓடினார்.

"இறந்து போன குப்புசாமியின் குடும்பம் பற்றிய விபரங்களைக் கொண்டு வாருங்கள்" என்று பொருள்பட ஆங்கிலத்தில் கட்டளையிட்டார் நோர்மன்.

"இதோ கொண்டு வருகிறேன் சார்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினார். துரையின் முகத்தில் என்றுமில்லாத வித்தியாசமானதொரு உணர்வு குடிகொண்டிருப்பது தெரிந்தது. மீண்டும் கிளாக்கர் துரையின் அறைப்பக்கம் போனார். அங்கே அவர் இல்லை.

பங்களாவுக்குப் போன துரைக்கு இருப்பு கொள்ளவில்லை. ஆபீஸின் துரையினுடைய அறையினூடாக பங்களாவுக்குப் போய்விடலாம்.

"என்ன டார்லிங் என்ன ஒரு மாதிரி..." என்று தேனீர் மேசையை ஒழுங்குபடுத்திக் கொண்டே கேட்டாள் மனைவி, ஆங்கிலத்தில்.

"ம்..." என்று இழுத்த துரை சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டே "அந்தத் தொழிலாளியின் மரணம்..." சற்று மௌனமாகி பின் "அந்தக் குழந்தை..." என்று வர்ண சீலிங்கைப் பார்த்துக் கொண்டே, "ஆம்... அந்த மரணம் என்னால் தான் நடந்தது" - இப்படி தொடர்பில்லாமல் வார்த்தைகளை உமிழ்ந்தார். அவருடைய கண்டிப்பான முகத்தில் வேதனைக் குறிகள் எக்கச்சக்கமாக முகாமிட்டிருந்தன.

"லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கொண்டே நான்சி தேனீரைக் கலக்கினாள்.

“எப்படி... இதை இலகுவாக நினைப்பது நான்சி! தொழிற்சாலை அனுபவமில்லாத அந்த முரட்டு மனிதனைப் பிடிவாதமாக நான்தான் அந்த வேலைக்கு அனுப்பினேன். இப்படி அந்த மனிதன் என்னுடைய நடவடிக்கையோடு விபத்துக்குள்ளாவான் என்று நினைக்கவில்லையே”

“அப்படி நினைக்காத வரைக்கும் உங்கள் மேல் தப்பில்லேயே.”

“தப்பில்லைதான். இருந்தாலும் என் மனசாட்சி தப்பு என்று சத்தம் போட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறதே”

“மனசாட்சி சில நாட்களுக்கே... புரட்சி பண்ணும்...”

“ஆனால்... இங்கே... இன்னொரு விடயமும் இருக்கிறது நான்சி”

“.....” என்ன என்கிற வகையில் கணவனைப் பார்த்தாள்.

“அந்தக் குழந்தை! தெரிந்தோ தெரியாமலோ அந்தச் சிறுமி எனக்குக் கையசைத்து மரியாதை செய்வாள். நான் துரை என்பது அவளுக்குத் தெரியாது. அவள் யாருடைய குழந்தை என்பது எனக்குத் தெரியாது. இனிமையான, நிறமுள்ள குழந்தை. அந்தப் பிஞ்சு ஜென்மத்துக்கு தகப்பனில்லாமற் செய்து விட்டேனே” இப்படிச் சொன்ன போது நேற்று முன்தினம் காரோட்டிக் கொண்டு சென்ற போது பார்த்த காட்சி நினைவில் வந்து தாண்டவமாடியது.

அந்தக் காட்சி, குழந்தையின் தொங்கல் வீடு. பெண்கள் அழுது புரள்வது தெரிந்தது. தனக்குக் கையசைக்கும் குழந்தையின் லைசன் கல் சாம்ராஜ்யம், சோக

இரைச்சலுடன், தப்புச் சத்தங்கள். மகிழ்ச்சியில்லாத, எளிமையின் உச்ச கட்டத்தில் அப்பப்பா... பாவம்... இந்தத் தொழிலாளர்கள்.

அந்த நிர்வாகிக்குத் திடீரென மனிதாபிமானம் வகைதொகையின்றித் தலையெடுத்தது.

"ம்... இப்பொழுது என்ன செய்யலாம்" என்று தரையைப் பார்த்துக் கொண்டே தேனீரை உறிஞ்சினார்.

"பேசாமல்... சில தினங்களுக்கு ஓய்வெடுங்களேன்" என்று நான்சி கூறினாள்.

"ஹ்ஹ ஓய்வெடுப்பதாவது... இந்தக் கிழமை கவாத்து வெட்டு ஆரம்பமாகிறது. புதிய திட்டங்களுக்காக 'ஏஜென்டு' வருகிறது. இந்த நேரத்தில் நான் விடுமுறை விண்ணப்பித்தாலும் கம்பெனி அனுமதிக்காது. அத்தோடு இத்தனை பெரிய வேலைகளை வைத்துக் கொண்டு ஒதுங்குவது என் நிர்வாகத்துக்கு இடைஞ்சல்."

"நல்லது... அப்படியானால்... சற்று எல்லாவற்றையும் மறந்து தற்காலிக ஓய்வெடுங்கள்" என்று கூறிய நான்சி தோட்டத்துப் பக்கம் போனாள். சில நிமிடங்கள் கடந்தன. ஜன்னல் வழியாகப் பார்த்தார் நோர்மன். அங்கே நான்சி பூந்தோட்டத்திலே நின்று கொண்டிருந்தாள். பூவோடு, பூவாக நெளிந்த நான்சியின் அழகு துரையின் மன மேல்தட்டில் விழுந்து மறைந்தது.

பூக்களின் அழகை விட, நான்சியின் முகத்தை விட, பெரிய பங்களாவின் சுகத்தை விட ஏழைத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சுழற்சியில் அவருடைய மனம் அகப்பட்டிருந்தது. கனத்தது. வலித்தது.

'இந்தக் கொடுமைக்குப் பிராயச்சித்தமாக நான்

ஏதாவது என்னளவில் செய்துவிட வேண்டும்' - என்று தனக்குள் கூறிக் கொண்டே தனது காரை எடுக்க ஷெட்டுப் பக்கம் போனார்.

டிரைவர் லீவுப் போட்டிருந்ததால் சில நாட்கள் தானே காரைச் செலுத்த வேண்டியிருந்தது. பங்களா அப்பு ஓடி வந்து, தான் உட்கொள்ளும் மாத்திரையை ஞாபகப்படுத்தினான்.

சற்று நேரத்தில் காரைச் செலுத்திக் கொண்டு தோட்டத் தொழிற்சாலையை நோக்கி விரைந்தார். மெயின் ரோட்டிலிருந்து மேல் நோக்கி ஓடும் தோட்டச் சாலை தார் போட்டு துப்பரவாக இருந்தது. ஏற்றமாக இருந்ததால், மெதுவாக ஓட்ட வேண்டியிருந்தது. விறகுக் கட்டுடன் வரிசையாகச் சென்று கொண்டிருக்கும் தோட்டச் சிறுவர்கள். காரை நிறுத்தினார்.

"செலாங்க தொர" என்று எல்லாரும் கோரஸ் பாடுவதைப் போலக் கத்தினார்கள். துரைக்கு இனிமையாக இருந்தது.

"நீங்க... ஸ்கூலுக்குப் போவுலியா" என்று அந்தச் சிறுவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"இன்னிக்கி சனிக்கெழம. ஸ்கூலு... இல்லிங்க" அதில் ஒருவன் துணிந்து கத்தினான்.

"ஆங்... நல்லது" என்று சொல்லிக் கொண்டே காரைச் செலுத்தினார். சனிக்கிழமை என்பது தெரியாமல் இருந்து விட்டேனே என்று தன் தவறை உணர்ந்தார். அவருடைய - புகை மூட்டம் நிறைந்த மனதில் நடைமுறைத் தேவைகளான நாளும் கிழமையும் மறைந்து இருந்து விட்டன.

தொழிற்சாலைக்குள் நுழைந்த துரையின் மனதில் தொழிலாளி குப்புசாமியின் விபத்து நிகழ்ச்சி இன்னும் கோரமாக ஆட்டம் போட்டன.

'ம்... நான்சியின் ஆலோசனையைக் கேட்டு பங்களாவிலேயே சற்று ஓய்வெடுத்திருக்கலாம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே தனது அரைக் கால்சட்டை சேப்புகளில் கைவிட்டார்.

ரோதை காம்பராவில் அரைபட்டுக் கொண்டிருக்கும் சைனா தேயிலையின் ஜூஸ் மணம் திருப்திகரமாக மிதந்து வந்து' கொண்டிருந்தது. 'ஓதெடெக்ஸ்' முறையிலான அரைப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. அதை உன்னிப்பாகப் பார்த்தார். பித்தளை பெட்டன்களுக்கும், அதன்மேல் வந்து போகும் கித்துள் மேசையின் இயக்கமும் ஒரு போராட்ட நிகழ்ச்சி போல துரைக்குத் தோன்றியது. தன் எஜமான் பின்னால் மெதுவாகப் பின் தொடர்ந்த வீரபுத்திரன் தன்னிடம் துரை எதுவுமே கேட்கவில்லையே என்று நினைத்தார். சல்லடைக் காம்பரா பக்கம் போனார். புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த தன்னியக்க சல்லடைகள் அலட்சியமாக ஆடிக் கொண்டிருந்தன. பி.ஓ.பி. பெனிங்க்ஸ், டஸ்ட் என்ற வெவ்வேறு ரக கறுப்பு நிறத் தேயிலைத் தூளை வித்தியாசப்படுத்திக் கொண்டிருந்தது.

அடுத்த விசாலமான அறையில் - 'பிம்மி'ல் பரப்பி வைப்பதற்காக் குவிக்கப்பட்டிருந்த பீ.ஓ.பி. தூளில் ஒரு கையெடுத்துப் பார்த்துவிட்டுப் போட்டார்.

இவ்வளவு வேலைக்கும் பின்னாலேயே சென்று கொண்டிருந்த டீமேக்கரிடம் எதுவும் பேசவில்லை.

ஒன்றுமே பேசாமல் திரும்பி துரை தன் காரை எடுத்துக் கொண்டு கீழ் ரோட்டில் நகர்ந்தார்.

தொழிலாளர்களின் நூற்றுக்கணக்கான 'சலாங்' களை வாங்கி வைத்துக் கொண்டு மாரியம்மன் கோயில் பக்கம் போனவர் காரை நிறுத்தினார். அம்மன் கோயில் அமைதியாக நின்றது. தான் வரச்சொன்ன கணக்கப்பிள்ளை வந்து தன் அருகே நின்றார்.

"என்னோடு வாருங்கள் லயத்துப் பக்கம்" - கணக்கப்பிள்ளை பின் தொடர்ந்தார்.

"லயங்களில் சுகாதார நிலைமை எப்படி"

"சுமாராக இருக்கிறது, சார்"

"அபிவிருத்தி செய்ய என்ன செய்யலாம்"

"..............." - கணக்கப்பிள்ளை ஒன்றுமே பேசவில்லை. ஏனென்றால் துரை சொல்வதைச் செய்பவர் தான் கணக்கப்பிள்ளை. அதைத் தவிர சுயமாக எதையும், சிந்திக்கவோ செய்யவோ முடியாது. அந்த அளவுக்கு அவர் மனத்தின் உற்பத்தி சாதனம் துருப்பிடித்திருந்தது, இருவரும் பேசிக் கொண்டே ஏழாம் நம்பர் லயத்துப் பக்கம் போனார்கள். அந்த லயம், தாண்டியதும் இரண்டு லயங்கள் எதிரெதிரே நடுவிலே மைதானம் போன்ற இடைவெளி, வரிசையாக தேயிலை விறகுக் கட்டுகள்.

லயத்தின் ஒவ்வொரு வீட்டின் முன்னும் அமர்ந்திருக்கும் கரி பிடித்த அரை டிரம்முகள். பெரிய வாளி என அழைக்கப்படும் அந்த கறுப்புக் காவல்கள் ராணுவ மரியாதை போல வரிசையாக நின்றன. துரைக்குப் பரிதாபமாகவும், அதே நேரத்தில் சிரிப்பாகவும் இருந்தது.

கோடிப்பக்கம் குப்பென்று நாற்றம் வந்தது, சற்று முகத்தைச் சுளித்தவாறு நகர்ந்தார். ஆடையில்லாத அந்தச் சிறுவர் வண்டியை உருட்டிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

துரையைக் கண்டதும், 'லபக்'கென நின்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து ஜன்னல் வழியாகப் பார்த்தார்கள்.

ஒரு மேஜர் வருவது போல பெரியவர், சிறியவர் எல்லாரும் பேச்சை நிறுத்திக் கொண்டு மௌனமாகிவிட்டுப் பார்க்கத் தொடங்கினார்கள்.

நாய், கோழி, பூனை எல்லாமே அமைதியாகி விட்டன. இத்தனைக்கும் துரை தன்னுடைய நிலையிலிருந்து எவ்வளவோ கீழிறங்கியே லயத்தை அணுகினார்.

★ ★ ★

டயரியை மடித்து வைத்து விட்ட எலிசா வெளி உலகுக்கு வந்தாள். இன்னும் கொஞ்சம் வாசிக்க வேண்டியிருந்தது. தன் அப்பாவின் சொற்கூட்டத்தின் ஒரு பகுதி, இறுதிப் பகுதி பலமுறை அவளால் வாசிக்கப்பட்டு விட்ட நிலையில் கேள்விக்குறியுடன் நின்றது.

குப்புசாமியின் மரணத்தைத் தொடர்ந்து, தனது தந்தை இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய்விட்டது வரை எழுதியிருந்தார். துரை நோர்மனின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நிறைந்த நாட்குறிப்புப் புத்தகம்! இவ்வளவு காலத்துக்குப் பின் தன்னால் வாசிக்கப்பட்ட அந்த வரலாறு! ம்...ச்ச... எலிசா தடுமாறினாள். துரைக்கு - அதாவது தன் தந்தைக்கு கையசைத்து மகிழ்ந்த கந்தல் உடை வள்ளிக் குழந்தை என்ன ஆனாள்? அதன் விடை டயரியின் இறுதிப் பக்கங்களில் இருந்தது.

கார் புசல்லாவ கடைவீதி தாண்டி மலை நாட்டுச் சூழலை முழுமையாகத் தழுவியது. தேயிலை அணி வகுப்பு

கடல் போல நீண்டு கொண்டிருக்கும் பகுதியில் கார் நின்றது. காரைச் சுற்றி நாலைந்து சிறுவர் சிறுமியர், "குடு மோனிங்" - அரைகுறை ஆங்கிலத்தில் சிரித்துக் கொண்டே "குஷி"யாகப் பேசினாள் ஒரு சின்னப் பெண்.

"ம்....குட்....குட்" என்று சொல்லிக் கொண்டே பத்து ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்துவிட்டு அந்தக் குழந்தைகளுடன் கொஞ்சிப் பேசினாள். ஆங்கிலம் தெரியாத சிறுவர்கள் நகைச்சுவையுடன் உளறினர்கள். தனது தந்தையின் டயரிக் கதாபாத்திரமான வள்ளியை, 'குடுமோனிங்' சிறுமியோடு சேர்த்துப் பார்த்தாள். அவளுடைய உடை, சிரிப்பு ஓட்டம் எல்லாம்...!

"மேடம் தி வியூ" என்று நீண்டு பரந்த பள்ளத்தாக்கு, குன்றுகள், நீர்வீழ்ச்சி ஆகியவற்றைக் காட்டினார், காரியதரிசி.

"குட், குட்... டேக் தெம்" - இப்படிச் சொன்னதும் தனது விடி கெமராவை இயக்கினார்.

"சாரு, சாரு, எங்கள எடுங்க சாரு" என்று காரியதரிசியின் இடுப்பைச் சுரண்டினான் ஒரு சிறுவன்.

"ய்யா..." என்று சொல்லிக் கொண்டே காமராவின் வட்ட உருளையைச் சுழற்றினார்.

ரம்மியமான சூழல். மழைக்கான அறிகுறி தென்பட்டது. தன்னைச் சுற்றிலும் பச்சைப் பசேலென்ற போர்வை. இவற்றை விட எலிசாவுக்கு அந்தச் சிறுவர்களின் இயற்கை நிலையே அழகாக இருப்பதாகத் தென்பட்டது.

மணி பன்னிரண்டைத் தாண்டியது. நண்பகலின் வெப்பத்தை குளிர்காற்று வென்றது. அது ஏப்ரல் மாதமானாலும் மழை இருட்டிக் கொண்டு வந்தது, தன்

கையேட்டுக் குறிப்பு பொய்த்து விட்டதாக உணர்ந்தாள் எலிசா.

மீண்டும் அந்த உல்லாசப் பயணக்கார் புறப்படும் போது சிறுவர்கள் கையசைத்தனர். எலிசாவுக்கு எதுவோ, எங்கோ வலிப்பது போல இருந்தது.

ரம்பொடை, லபுக்கல என்ற இயற்கை எழுச்சிப் பிரதேசங்களைக் கடந்து கார் ஓடிக் கொண்டிருந்தது.

"எப்படி இந்தத் தீவு?" என்று சம்பிரதாயத்துக்காக காரியதரிசியிடம் கேட்டாள் எலிசா?

"மிகவும் நன்று" என்று ஆங்கிலத்தில் சுருக்கமாகப் பதிலளித்தார்.

"அந்தச் சிறுவர்கள்?" என்றும் மீண்டும் கேட்டாள்.

"ஹ்ஹா... அற்புதம்... உற்சாகமாக இருந்தது. மிகவும் இயற்கை... மிகவும் இயற்கை... அவர்களை நேசிக்கிறேன்."

"நேசிப்பதற்கு உகந்தவர்கள்" என்று எலிசா கூறினாள்.

"அவர்கள் சுதேசக் குழந்தைகள். தமிழ் பேசுபவர்கள்."

"ஆமாம் மேடம். அப்படித்தான், சிறீலங்க என்ற உல்லாசப் பயணத்துறை கையேடு குறிப்பிடுகிறது."

"தமிழ்... ஒரு பிராந்திய மொழி... இல்லையா" என்று திரும்பவும் காரியதரிசியே பேசினார்.

"தமிழ் ஒரு வரலாற்று ரீதியான மொழி, உலக மொழிகளில் ஒன்று. அது பற்றி ஆய்வுகள் நடத்தி யிருக்கிறேன். அதுவும் சமீப காலமாகத்தான்" என்று எலிசா

குறிப்பிடவும் காரியதரிசி நிமிர்ந்து உட்கர்ந்தார். கார் கடல் மட்டத்திலிருந்து ஆறாயிரம் அடிக்குமேல் உயர்ந்த டொப்பாஸ் உச்சியை அடைந்தது. எலிசா தன் கீழ் உதடை மடித்துக் கடித்து மரக்கறித் தோட்டங்கள், தேயிலைச் செடிகள், இடையே படுத்திருப்பதைப் போல அமைந்த 'லயன்' களையும் உன்னிப்பாகவும், உற்சாகமாகவும் பார்க்கத் தொடங்கினாள்.

நுவரஎலிய 'கிராண்ட்' ஓட்டலை அடைய பிற்பகல் மணி இரண்டாகி விட்டது.

இங்கிலாந்து பாணியில் அமைந்திருந்த மலைநாட்டு நுவரஎலிய நகரும், 'கிராண்டும்' அவர்களை வெகுவாகக் கவர்ந்தன. இலேசாகப் பெய்த மழை ஓதுங்கியே விட்டது.

''என் தந்தை வாழ்ந்த பிரதேசம்!'' என்று ஆச்சர்யத்துடன் காரியதரிசியைப் பார்த்தாள்.

''ஆமாம். மேடம், இந்த ஹோட்டலும் நம் முன்னோர்கள் கட்டியதுதான். மலைநாட்டில் இத்தனை வசதிகளுடன் அமைந்திருப்பது... மிக ரம்மியம்... மிகவும் ரம்மியம்'' என்று பதிலளித்தார்.

இருபத்தேழாம் இலக்க அறை அவர்களுக்கு ஒதுக்கப் பட்டது. காரியதரிசி பைல்களையும், பயணத் துறையினரின் கையேடுகளையும் பிரித்துப் பார்க்கத் தொடங்கினார்.

எலிசா அறையை நோட்டம் விட்ட வண்ணம் சுடு தண்ணீர்க் குழாய் கீசரை அணுகினாள். வெந்நீர் இதமாக விழுந்து பரவியது.

அடுத்த ஐந்து தினங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார் காரியதரிசி.

சுற்றி வர சகலமும் இதமான முறையிலேயே அமைந்தாலும் மனதுக்குள் இதம் இல்லை. டெஸ்போட்

டீ எஸ்டேட்டை அடையும் வரை அடங்காத ஆவல் அவளுக்குள் குடி கொண்டிருந்ததால் கரியதரிசிக்கு உதவ முடியவில்லை.

மிக துரிதகதியில் நிகழ்ச்சிகள் நிமிடம், மணித்தியாலம், நாள் எனக் கைமாறின.

ஏராளமான சொத்துகளுக்கு அதிபதியான எலிசாவின் குறைபாடுகள் என்ன என்று அவ்வப்போது அறிய முயன்றார்.

டெஸ்போட் தோட்டம்! அவளுடைய இருண்ட உள்ளுணர்வுக் கடலுக்கு ஒரு கலங்கரை விளக்கம். தேனீர் மேசை அசைந்தாடி வந்தது.

தன் தந்தையின் 42ம் ஆண்டு டயரி பிரத்தியேக முறையில் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பயணத்தின் 'ஹீரோ'வாக அந்த டயரி. ஐம்பது வயதையடைந்துள்ள தாள்கள்.

எலிசா தனது காரியதரிசியுடன் நுவரஎலியா இயற்கையழகையும், சுறுசுறுப்பான மக்கள் இயக்கத்தையும் ரசித்துப் பார்த்து அனுபவிக்கத் தொடங்கினார்கள்.

மெல்லமாய்க் கழிந்த அந்தத் தினம்! எலிசாவை டெஸ் போட்டுக்கு அனுப்பத் தயாராகிய பெறுமதியான தினம்!

அடுத்த நாள் விடிந்தது. காலைக் குளிரின் ஆரோக்கியமான எழுச்சியில், பசும்புல் பனித்துளிகளைப் பார்க்கத் தொடங்கினாள் அந்த இங்கிலாந்து சீமாட்டி.

கடந்த ஒரு மாதம்! சிந்தனையிலும், பயண உணர்விலும் உறைந்து விட்ட வாழ்க்கைப் புதுமையை நினைத்துப் பார்த்தாள். கால் நூற்றாண்டுக்கு முன்

காலமாகிய தன் தந்தையை நினைத்துப் பார்த்தாள். எப்பேர்ப்பட்ட கனவான்! நினைப்பதற்குப் பெருமையாகவும் சுகமாகவும் இருந்தது.

தன் தந்தையைப் பற்றிய நினைவுகள் சகிதம் அவளுடைய 'டெஸ்போட்' பயணம் ஆரம்பமானது. கார் மெதுவாகவும், வாகன எதிர்ப்புகளுக்கிடையே நின்றும், பின் செலுத்தப்பட்டும் போய்க் கொண்டிருப்பது காரியதரிசிக்கு எரிச்சலாக இருந்தது.

நானுஓயா தாண்டியதும் 'டெஸ்போட்' தோட்ட எல்லை சற்று தூரத்தில் தெரிய ஆரம்பித்தது.

டெலஸ்கோப்பைப் பிடித்த நிலையில் தோட்டத் தொழிற்சாலை, தோட்ட லயங்கள் ஆகியவற்றை ஆராயத் தொடங்கினாள். "எத்தனை அழகு... அற்புதம்!" தனது தந்தை வாழ்ந்த தேயிலைத் தோட்டமானதால் இப்படித் தனக்குள் கூறிக் கொண்டாளா?

அவர்களுடைய ஏற்பாட்டுக்கமைய அந்தத் தோட்ட பங்களா, இந்த ஆங்கிலேயக் குழுவை வரவேற்கத் தயாராயிருந்தது.

இப்போதைய தோட்டத்து மிஸ்டர் குணத்திலக்கா! "குட்மானிங் மேடம்! யூ ஆர் வெல்கம்!"

"குட் மானிங் ஃபர் ஆல்" என்று தன் கைப்பையைச் சரி செய்த நிலையில் தன் கண்களை உருட்டிப் பார்வையை விசாலமாக்கினாள். பங்களாவைச் சுற்றிய அதே பூந்தோட்டம். டயரியில் கண்ட மானசீகக் காட்சி! இப்போது நேரில் காண்பது சுகமாக இருந்தது.

பங்களாவுக்கு அழைத்து வரப்பட்டு கொடுக்கப்பட்ட உபசரிப்புகள் யாவும் அந்நியோன்னியமாகத் தெரிந்தன.

பங்களாவுக்கு எதிரே நிற்கும் சவுக்கு மரங்கள், தேயிலைச் செடிகள் அத்தனையும் உயிரோட்டமாயிருந்தன.

காரியதரிசிக்கு பிடிபடாத உணர்வுகள்! தன் எஜமானியின் இயற்கையான அமைதி இயங்கியதைக் கண்டார்.

டெஸ்போட் தோட்ட நிகழ்ச்சிகளின் பின்னணியில் புதைபட்ட உணர்வுகள்!

மெதுவாக நகர்ந்த காரைச் சுற்றி சிறுவர்கள் ஓடிவந்தார்கள். அந்தப் பயண வண்டி பங்களாவிலிருந்து விடுபட்டு மெயின் ரோட்டுக்கு வந்தபின் தொழிற்சாலையை நோக்கி விரைந்த போது எலிசாவின் தொண்டை அடைக்கிற மாதிரி இருந்தது.

"மேடம்... திஸ் இஸ் த பாக்டரி" என்று துரை குணத்திலக்க அறிமுகம் செய்தார்.

"தேங்யூ... தேங்க் யூ" - என்று இரண்டு முறை கூறிய போது உற்சாகமும், கூடவே ஒரு வேதனையும் கைகோர்த்தன. குப்புசாமியின் குடும்பம் பற்றி விசாரிக்கப் பட்டது.

ஓடிவந்து பதில் சொன்ன தொழிலாளர்களில் மூத்த வயதினர் வியப்புடன் பார்த்தனர். எப்போதோ மறைந்த குப்புசாமியைப் பற்றிய கேள்வி ஏன்?

"தொர... குப்புசாமி சம்சாரம் இருக்குங்க... ரெண்டு மாசமா... பேச்சில்லாம கெடக்குங்க... கைகாலு வருல" அந்த ஒன்றாம் நம்பர் லயத்தைக் காட்டினார்கள்.

வேகமாகவோ, மெதுவாகவோ இல்லாமல் இறங்கி நடந்தாள், எலிசா. தம் லயத்தை நோக்கி வெள்ளைக்காரரர் வருவது புதுமையாகவும், வித்தியாசமாகவும் இருந்தது.

அந்த லைசன் கல், தொங்க வீடு அந்த வீட்டு முகப்பில் தயக்கத்துடன் நின்றார் காரியதரிசி.

வியப்புடன் நோக்கியது தொழிலாளர் கூட்டம்.

"இதுதாங்க... குப்புசாமியோட சம்சாரம்" ஒரு பெரியவர்.

"ய்யே... திஸ்...இஸ்... குப்புசாமிஸ் வைப்" என்று தோட்ட ஊழியர் கூறினார்.

அசையாது நின்று அந்த மெலிந்த - தரையில் படுத்திருந்த உருவத்தைப் பார்த்தாள் எலிசா!

"ம்மா... ம்மா... ம்மா... ம்மா" என்று நான்கைந்து முறை அழைத்தாள். தொடர்ந்து விம்மினாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென்று கொட்டியது.

அந்த அழுகை! ஜீவனுள்ள தமிழ் அழுகை. ஆழ்மனத்தில் ஒளிந்திருந்த 'அம்மா' என்ற குரல் அந்தச் சின்ன வீட்டில் பெரிதாக ஒலித்தது.

நோர்மன் துரையினால் சுவீகாரம் எடுக்கப்பட்டு வறுமை தெரியாமல் வளர்ந்துவிட்ட வள்ளி - எலிசாவாக வந்து, தன்னைப் பெற்ற தாயைப் பார்த்துக் குமுறினாள்!

அதன் பிறகு எலிசா, தாயைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று ஆடம்பர ஆஸ்பத்திரியில் சேர்த்தது சாதாரண நிகழ்ச்சி! தன் தந்தை பெயரில் மலை நாட்டில் மிகப்பெரிய ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய்ததும் சாதாரண நிகழ்ச்சி!

'அம்மா' என்ற சொல்லை தனக்குத் தெரியாமல் உமிழ்ந்து குமுறிய அந்த அழுகைதான் புதுமையான உண்மை! பார்த்தவர்க்கு அது 'அந்நிய அழுகை!'

முற்றும்

# நூலாசிரியரைப் பற்றி...



தி.இரா. கோபால்

சிறுகதை இலக்கியத்தில் இவருடைய பங்களிப்பு காத்திரமானது. எழுதிய சிறுகதைகள் சுமார் எழுபதுதான். இருப்பினும் தான் வாசித்துணர்ந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சிறுகதைகளும், நூற்றுக்கும் சற்று அதிகமான ஆங்கிலச் சிறுகதைகளுமே இவருக்கு ஏற்படுத்திய இலக்கிய படைப்புத் தாக்கங்கள் எனக் கூறுவார்.

சிறுகதை, நாவல்கள் மூலமாக நல்ல, ஊட்டமான செய்திகளை வாசகர்களுக்குச் சொல்ல வேண்டும் என உணர்வது அதனூடே நல்ல தமிழ்நடையினைக் கையாள்வது புதிய, ஆரோக்கியமான விடயங்களைக் கருப் பொருளாக மேற்கொள்வது என்ற அம்சங்களுடன் தரமான உலகச் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்து மக்கள்முன் வைக்கவேண்டும் என்பதும் இவருடைய இலட்சியங்கள்.

ஓர் படைப்பாளி உயர்ந்த நோக்கங்களுடன் நல்வாழ்வு வாழ்ந்து சமூகத்துக்குத் தன்னையே உதாரணப்படுத்த முயற்சிக்க வேண்டும் என அடிக்கடி கூறுவார்.

இந்த நூலில் மிகக் குறைவான எண்ணிக்கையிலானவை தினகரன், வீரகேசரி, தினக்குரல், கங்கை சஞ்சிகை, சிந்தாமணி போன்ற பத்திரிக்கைகளில் வந்தவைதான்.

அட்டன் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் பக்தியினைக் கருப்பொருளாக வைத்து எழுதி 'தினக்குரல்' வார இதழில் ஆலய புதிய கட்டிட புணரமைப்பு அடிக்கல் நாட்டிய தினத்தில் வெளிவந்ததையும், அதற்கு நூலாசிரியர் திரு. அருளானந்தம் தினக்குரலிலேயே சிறப்புமிக்க விமர்சனம் எழுதியிருந்ததையும், சிறுகதை இலக்கியத்தில் தனக்குக் கிடைத்த சிறப்பு விருதாகக் கருதுகிறார்.

நான்கு பெண்பிள்ளைகளின் தந்தையாகிய இவர் தன் ஆசிரிய மனைவியே தன் சிறுகதைப் படைப்புகளுக்கு முதலாவது வாய்மொழி வாசகரும், விமர்சகருமாவார் எனக் கூறுவார். 'ஹூம், இது இயல்பு தானே!'

- பதிப்பகத்தார்